Koviloor Digital Library

திருப்புகழ் விரிவுரை

(வயலூர்)

KOVILOOR ANDAVAN LIBRARY, KOVILOOR
A. No. 18698

திருமுருக
கிருபானந்த வாரியார்

உயர்திரு. வள்ளல், அருள்மாமணி
N. T. S. ஆறுமுகம் பிள்ளை A.M.N.
திருமதி சீதையம்மாள் அவர்களின்
பவளவிழாவின்போது வெளியிடப் பெற்றது
(28—2—85)

வெளியீடு :
ஆறுமுகம் மாளிகை
திருப்புத்தூர் - 623 211
(பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்)

Koviloor Digital Library

முதற் பதிப்பு ;
பிப்ரவரி, 1985

வெளியீடு :
ஆறுமுகம் மாளிகை
திருப்புத்தூர் - 623 211
(ப. மு. மாவட்டம்)

Koviloor Digital Library

உ

முருகா

முன்னுரை

வயலூர் வளமையான திருத்தலம். வயலுக்கு நடுவில் விளங்குகின்ற புண்ணியத் தலம்.

இங்கே ஞானம் விளையும் முருகவேள் வேலினால் ஒரு தீர்த்தத்தை உண்டாக்கித் தந்தையாரை வழிபட்டார். இங்குள்ள தடாகம் 'சக்தி தீர்த்தம்.'

"கண்ணாடியில் தடம் கண்ட வேலா!"—என்ற திருப்புகழடியால் இது விளங்குகின்றது.

அருணகிரிநாதர் திருவண்ணாமலையில் தவம் செய்தார். கந்தவேள் காட்சி தந்து "முத்தைத் தரு" என்று முதலடி தந்து "திருப்புகழ் பாடுக!" என்று அருள் புரிந்தார்.

அருணகிரிநாதர் 'முத்தைத் தரு' என்ற திருப்புகழைப் பாடி மீண்டும் நிஷ்டாநுபூதியில் நிலை பெற்றிருந்தனர்.

அறுமுகப் பெருமான் அருணகிரிநாதரை "நம் வயலூருக்கு வருக" என்று பணித்தருளினார். அருணகிரியார் வயலூர் சென்றார். வயலூரில் முருகன் காட்சி தந்து திருப்புகழ் பாடும் திறத்தை அருள் புரிந்தார்.

"வயலி நகரியில் அருள்பெற மயில்மிசை
உதவு பரிமள மதுகர வெகுவித
வனச மலரடி கனவிலும் நனவிலும்
மறவேனே!"

Koviloor Digital Library

"பாத பங்கய முற்றிட உட்கொண்
டோது கின்ற திருப்புகழ் நித்தம்
பாடு மன்பது செய்ப்பதி யில்தரு
தவனீயே!"

என்ற பாடல்களால் அறிக.

அருணகிரியாருக்கு வயலூர்த் தலத்தில் தணியாத காதல். எங்கு சென்றாலும் "வயலூரா வயலூரா" என்று கூறுவார். வயலூர் முருகன் வரதமான மூர்த்தி.

வயலூர் திருச்சிராப்பள்ளிக்கு மேற்கே ஐந்து மைல் தொலைவில் உள்ளது. ராஜகெம்பீரவள நாட்டைச் சேர்ந்தது. திருச்சிராப்பள்ளியில் இருந்து வயலூருக்குப் போகும் வழியில் கற்குடி என்ற உய்யக் கொண்டான் மலை என்ற திருத்தலம இருக்கின்றது. இத்தலம் தேவாரம், திருப்புகழ் பாடல் பெற்றது.

வயலூருக்கு '18' திருப்புகழ்ப் பாடல்கள் இருக்கின்றன. இந்த வயலூர்த் திருப்புகழுக்கு, முருகன் கருணையினால் உரை எழுதி வெளியிடுகின்றேன்.

மலேசியா வாழ் அன்பர், அருள்மாமணி அருட் பெரும் வள்ளல் உயர்திரு. **N. T. S. ஆறுமுகம் பிள்ளை** அவர்களின் பவளவிழா வெளியீடாக இந் நூல் வெளி வருவதை நான் பெருமையாகக் கருது கிறேன்.

வள்ளல் அவர்கட்கு வயலூர்ப் பெருமான் என்றும் அருள் புரிவான்.

அன்பர்கள் இதனை ஓதி உய்வு பெறுக!

இதனை எழுதுகின்ற போது எழுத்துப் பணிக்கு என் அருந்தவ அபிமானப் புதல்வி கோமதியம்மை துணை புரிந்தார். அவருக்கு உள்ளம் நிறைந்த ஆசி.

அன்பன்

சென்னை **கிருபானந்தவாரி**

Koviloor Digital Library

பதிப்புரை

வாக்கிற்கு அருணகிரி என்று பாராட்டப் பெறுபவர் அருணகிரிநாதப் பெருமான். சந்தமழை பொழிந்த கவிமேகம் அவர். அவர் தம் சந்தமழை கந்தவேளை நீராட்டியது. அந்த நீராட்டில் திளைத்து மகிழ்ந்த பெருமான் அவர்க்கு அருள் புரிந்தார்.

“15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர் இளமையில் தவறான ஒழுக்கத்தில் தடுமாறிப் பிணியுற்று, மனம் நொந்து, திருவண்ணாமலையில் உள்ள ‘வல்லாள மன்னன்’ கோபுரத்தின் உச்சியிலிருந்து உயிர் துறக்க வீழ்ந்தார்.

‘அங்கே கோயில் கொண்டுள்ள முருகவேள் அவரைத் தம் கரங்களில் தாங்கிக் காப்பாற்றிப் பிணி போக்கி, உபதேசம் செய்து, உலகம் உய்யும் பொருட்டுத் திருப்புகழைப் பாடும்படி பணித்து, ‘முத்தைத் தரு’ என்னும் அடியெடுத்துக் கொடுத்தார்” எனச் செய்திகள் கூறுகின்றன.

திருப்புகழ், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரனுபூதி, கந்தரலங்காரம், வேல்மயில் விருத்தம் ஆகியவை அருணகிரிநாதர் இயற்றிய நூல்கள்.

“ஐயா அருணகிரி அப்பா உன்னைப்போல் மெய்யான ஓர்சொல் விளம்பினர் யார்?” என்றும்,

‘கந்தரநுபூதிபெற்றுக் கந்தரநு பூதிசொன்ன
எந்தையருள்நாடி யிருக்கும்நாள் எந்நாளோ? என்றும்,

தாயுமானவ சுவாமிகள் அருணகிரி நாதரைப் புகழ்ந்து பாடுகிறார்.

Koviloor Digital Library

"ஆறுமுகந் தோன்றும் அழகியவேல் தோன்றுமவன்
ஏறுமயில் தோன்று மெழில்தோன்றும் - சீறிவரு
சூரன்முடியைத் துணித்தோன் திருப்புகழைப்
பாரில் வழுத்தினோர் பால்.

என்று திருப்புகழ் போற்றப் படுகிறது.

எத்துணை சந்தங்கள்! எத்துணை ஓசை வகைகள்!! எத்துணை வேறுபட்ட இசை வடிவங்கள்!!!

திருப்புகழைப் படிக்கப் படிக்க முருகன் மேல் விருப்பு வரும் : நெஞ்சம் நெக்குருகும்.

இசையொழுங்கு புரியப் புரிய நம் உள்ளம் அதன்பால் ஈர்க்கப்படும். ஒரு தரம் ஈர்க்கப்பட்டால் மீள முடியா மயக்க வினிமை திருப்புகழுக்குச் சொந்தம்.

திருப்புகழ் 10,000 பாடல்கள் என்பர். இப்பொழுது கிடைக்கப் பெறுபவை 1811 மட்டுமே. அவையுங்கூடத் தணிகைமணி உயர்திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை குடும்பத்தினர். உயர்திரு. திருமுருக். கிருபானந்த வாரியார் சுவாமிகள் ஆகியோர்தம் பெரு முயற்சியாலே தாம் கிடைத்துள்ளன.

வயலூர் முருகன் பேரில் அருணகிரிநாதர் பாடியுள்ள பாடல்கள் 18.

அந்தப் பாடல்கள் பதினெட்டிற்கும் விரிவுரை எழுதித் தர வணக்கத்திற்குரிய வாரியார் சுவாமிகள் இசைந்தது தமிழ் நாட்டுத் தவப் பேறே.

மிக அழகாகவும், விரிவாகவும், சுவையாகவும் அமைந்துள்ள விரிவுரையின் சிறப்பைப் பற்றிக் கூறும் தகுதி எனக்கில்லை.

Koviloor Digital Library

ஆனால் ஒன்று மட்டும் என்னால் உறுதியாகக் கூற முடியும். திருப்புகழுக்கு விரிவுரையெழுதும் முழுத் தகுதியும் ஆற்றலும் நிறைந்தவர் இன்று உயர்திரு. திருமுருக. கிருபானந்த வாரியார் சுவாமிகள் ஒருவரே.

அவர்தம் விரிவுரையை அச்சிட்டு வெளியிடும் பொறுப்பை அருள்மாமணி, அருட்பெரு வள்ளல் உயர்திரு. N. T. S. ஆறுமுகம் பிள்ளை A. M. N. அவர்கள், தம் பவளவிழாவை யொட்டி மகிழ்வுடன் மேற்கொண்டார்கள்.

ஆறுமுகப்பெருமான் புகழ் கூறும் அருணகிரி நாதரின் வயலூர்த் திருப்பாடல்களின் விரிவுரையை வெளியிடும் பொறுப்பை உயர்திரு. ஆறுமுக வள்ளல் ஏற்றது மிகச் சிறந்த பொருத்தமாகத் திகழ்கிறது.

"என்ன பொருத்தம்! அவர்க்கும் இவர்க்கும் இசைந்த பொருத்தம்" — என்று இசைபாடத் தோன்றுகிறது.

இந்த வெளியீட்டு முயற்சியில் எச்சிறப்பு மில்லா ஏழையேன் பங்குபெற நேர்ந்ததை எண்ணி மகிழ் கிறேன்.

வள்ளலவர்களின் குடும்பம் என் பால் பொழியும் பேரன்பின் முன் நான் செய்யும் இச்சிறு பணிகள் எம்மட்டு ?

என்னால் இயன்றதை இதய மகிழ்வுடன் செய்கி றேன்.

அச்சிட்டு வெளியிடும் முயற்சிகளில் எனக்குப் பெருந்துணையாக இருந்த எங்கள் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் உயர்திரு. அ. சிவப்பிரகாசம் எம். ஏ.. அவர்கட்கும், திரு. அன்புநாதன் அவர்கட்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Koviloor Digital Library

அச்சிடும் பொறுப்பில் மகிழ்ச்சியுடன் ஈடுபட்டு ஆர்வத்துடன் குறித்த நாளில் அழகிய முறையில் ஆப்செட்டில் அச்சிட்டு வெளிக்கொணர்ந்த கணேசர் அச்சக ஊழியர் அனைவர்க்கும், சிறப்பாக மேலாளர் திரு. மீ. இராசேந்திரன் அவர்கட்கும் என் நன்றி.

அழகாக முகப்போவியம் தீட்டித் தந்த கலைஞர் காபிரியேல் அவர்கட்கு என் நன்றி.

அறம் வளர்க்கும் செம்மல், அருள்மாமணி, அருட்பெரு வள்ளல் உயர்திரு. ஆறுமுகம் பிள்ளை அவர்களும், திருமதி. சீதையம்மாள் அவர்களும், இன்னும் பல்லாண்டு, பல நூறு ஆண்டுகள் நலமோங்கி வாழ ஆறுமுகக் கடவுளை வேண்டி வாழ்த்துகிறேன்.

ஆறிரு தடந்தோள் வாழ்க! அறுமுகம் வாழ்க! வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க! குக்குடம் வாழ்க! செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க! யானைதன் அணங்கு வாழ்க!
மாறிலா வள்ளி வாழ்க! வாழ்கசீ ரடியா ரெல்லாம்!

28—2—85 அன்பன்

டாக்டர் ச. சவகர்லால்
தமிழ்ப் பேராசிரியர்
ஆறுமுகம் பிள்ளை சீதையம்மாள் கல்லூரி
திருப்புத்தூர்.

Koviloor Digital Library

வயலூர்

வயலூர் திருச்சி மாவட்டத்தில் திருச்சி நகருக்கு மேற்கில் ஏறக்குறைய ஆறு கல் தொலைவில் அமைந்துள்ளது. இத்தலத்திற்குத் திருச்சியிலிருந்து சோமரசம்பேட்டை வழியாக அடிக்கடி பேருந்துகள் செல்கின்றன.

இந்நகர் குமாரவயலூர், ஆதிவயலூர், அக்கினீசுவரம் என்றும் அழைக்கப்படுகிறது.

வயலூர் பெயருக்கேற்பவே வயல் சோலைகளால் சூழப்பட்டுள்ளது.

திருப்புகழை உலகினுக்குத் தந்து பெருமை பெற்ற வயலூர் முருகப் பெருமானைச் சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய முச்சுடர்களும் வழிபட்டுப் பேறுகள் பெற்றிருப்பதால் இத்தலம் மிகப் புனிதமான தலமாகக் கருதப்படுகிறது.

வயலூரில் முருகப் பெருமானது ஆலயம் வயல்களுக்கு மத்தியில் தென்னஞ் சோலைகளால் சூழப்பெற்று மிக அழகாக விளங்குகிறது.

ஆலயத்தில் 10-வது நூற்றுண்டில் புகழுடன் விளங்கிய இராசராச சோழன் முதலான பல சோழ மன்னர்களின் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

Koviloor Digital Library

கோயிலுக்கு எதிரில் காணப்படும் குளம் குமரப்பெருமானது வேலினால் தோற்றுவிக்கப் பட்டதாகக் கருதப்பட்டுக் *குமாரதீர்த்தம், சக்தி தீர்த்தம், அக்கினி தீர்த்தம்,* என்னும் பெயர்களால் அழைக்கப்படுகிறது.

வயலூர் முருகப்பெருமானின் எழிலுருவம் காண்பவர் மனத்தைக் கவரும் பாங்குடையது.

இத்தலத்திலுள்ள, பக்தியுணர்வின் வடிவமாகத் திகழும் அருணகிரிநாத சுவாமிகளின் திருவுருவத்தைப் போன்று வேறெங்கும் காணலரிது.

திருச்சுற்றின் வடபுறம் காணப்படும் நவக்கிரக சந்நிதியில் சூரிய பகவான் மட்டும் இரு தேவியருடன் காட்சியருளுவதும் மற்றோர் சிறப்பாகும்.

இங்கு வைகாசிப் பிரம்மோற்சவமும், ஆனியில் அருணகிரிநாதர் விழாவும், தை அமாவாசை, பங்குனி உத்திரம் முதலியவைகளும் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றன.

இவ்வயலூர் முருகன் திருக்கோவிலுக்குத் திருப்புகழடிமை, உயர்திரு. திருமுருக. கிருபானந்த வாரியார் சுவாமிகளின் பெருமுயற்சியால் திருப்பணி நடைபெற்றுள்ளது.

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

முருகா

நூல்

உபதேசம் பெற

அரிமரு கோனே நமோவென்
றறுதியி லானே நமோவென்
றறுமுக வேளே நமோவென் — றுனபாதம்

அரகர சேயே நமொவென்
றிமையவர் வாழ்வே நமொவென்
றருணசொ ரூபா நமோவென் — றுளதாசை

பரிபுர பாதா சுரேசன்
தருமகள் நாதா அராவின்
பகைமயில் வேலா யுதாடம் — பரநாளும்

பகர்தலி லாதா ஊஏதும்
சிலதறி யாஏழை நானுன்
பதிபசு பாசோப தேசம் — பெறவேணும்

கரதல சூலாயு தாமுன்
சலபதி போலார வாரங்
கடினசு ராபான சாமுண் — டியுமாடக்

கரிபரி மேலேறு வானுஞ்
செயசெய சேனுப தீயென்
களமிசை தானேறி யேயஞ் — சியசூரன்

Koviloor Digital Library

குரல்விட நாய்பேய்கள் பூதங்
கழுகுகள் கோமாயு காகங்
குடல்கொள வேபூச லாடும்— பலதோளா

குடதிசை வாராழி போலும்
படர்நதி காவேரி சூழும்
குளிர்வய லூரார மேவும்— பெருமாளே

பதவுரை

கரதல சூலாயுதா - கையில் சூலாயுதங் கொண்டவரே!

முன் சல பதிபோல் - முன்பு கடல் போலப் பேரொலியும்

கடின சுரா பானம் - கொடிய கள் குடித்தலும் உடைய

சாமுண்டியும் ஆட - சாமுண்டி என்ற துர்க்கா தேவியும் ஆட

கரி பரி மேல் ஏறுவானும் - யானையாகிய வாகனத்தில் மேல் ஏறி வருகின்ற இந்திரனும்

செய செய சேனாபதீ என் - ஜெய ஜெய சேனாபதியே! என்று ஆரவாரிக்க,

களமிசை தான் ஏறியே - தேவரீர போர்க்களத்தில் சென்று

அஞ்சிய சூரன் - அச்சம் அடைந்த சூரபன்மன்

குரல்விட - அழுது கூக்குரலிடவும்

நாய் - நாய்களும்,

பேய் - பேய்களும்

பூதம் - பூதங்களும்

கழுகுகள் - கழுகுகளும்

கோமாயும் - நரியும்

காகம் - காக்கையும்

Koviloor Digital Library

குடல்கொள - சூரனுடைய குடலைக் கீறித் தின்னவும்
பூசல் ஆடும் - போர் செய்த
பல தோளா - பல தோள்களை யுடையவரே !
குட திசை - மேற்குத் திசையில் இருந்து
வார் ஆழிபோலும் படர் - பெரிய கடல்போலப் பரவி வருகின்ற
காவேரி நதி சூழும் - காவிரியாறு சூழ்ந்துள்ள
குளிர் வயலூர் - குளிர்ந்த வயலூர் என்ற திருத்தலத்தில்
ஆர மேவும் - உள்ளம் நிறைந்து வாழ்கின்ற
பெருமாளே - பெருமையிற் சிறந்தவரே !
அரி மருகோனே - திருமாலின் திருமருகரே
நமோ என்று - உமக்கு வணக்கம் என்றும்
அறுதி இலானே - முடிவு இல்லாதவரே !
நமோ என்று - உமக்கு வணக்கம் என்றும்
அறுமுகவேளே - ஆறுமுகக் கடவுளே !
நமோ என்று - உமக்கு வணக்கம் என்றும்
அர அர சேயே - ஹர ஹர குமாரக் கடவுளே !
உன பாதம் நமோ என்று - உமது திருவடியை வணங்குகின்றேன் என்றும்
இமையவர் வாழ்வே - தேவர்கட்கு வாழ்வாக விளங்கும் செல்வமே !
நமோ என்று - வணக்கம் என்றும்,
அருண சொருபா - சிவந்த நிறம் உடையவரே !
நமோ என்று - உமக்கு வணக்கம் என்றும்
ஆசை உளது - உம்மைத் துதி செய்து வணங்க எனக்கு ஆசையுளது

Koviloor Digital Library

பரிபுர பாதா - சிலம்பணிந்த திருவடிகளையுடையவரே !

சுரேசன் தருமகள் நாதா - இந்திரன் தந்த தெய்வானை யம்மையின் கணவரே !

அராவின் பகைமயில் - அரவினங்கட்குப் பகையாகிய மயிலை வாகனமாகக் கொண்ட

வேலாயுதா - வேற்படை விமலரே !

ஆடம்பர - ஆடம்பரமாக உடையவரே !

நாளும் பகர்தல் இலா தாள - அடியேன் நாள்தோறும் துதி சொல்லாத திருவடியை

ஏதும் சிலது அறியா ஏழை - சற்றேனும் அறியாத ஏழை யாகிய அடியேன்

நான் உன் - மூடனுகிய சிறியேன் உமது திருவாக்கால்

பதி பசு பாச உபதேசம் - பதிபசு பாசம் என முப் பொருள் உண்மை உபதேசத்தை

பெற வேணும் - பெறுதல் வேண்டும்.

பொழிப்புரை

சூலாயுதத்தை ஏந்திய கரதலத்தினரே ! முற்காலத்தில் கடல்போல் ஆரவாரஞ் செய்பவளும், மதுபானஞ் செய்பவளுமாகிய சாமுண்டி நர்த்தனஞ் செய்ய, யானை வாகனத்தில் ஏறிவரும் இந்திரன், 'ஜெய ! ஜெய ! சேனுதி பதியே !' என்று துதி செய்து ஆரவாரம் செய்த போர்க் களத்தில் வந்து, அச்சங்கொண்ட சூரபன்மன் கூக்குரல் செய்ய, நாய்கள், பேய்கள், பூதங்கள், கழுகுகள், நரிகள் காக்கைகள், சூரனுடைய குடலைப் பங்கிட்டுத் தின்னப் போர் புரிந்த பல தோள்களையுடையவரே ! மேல் திசையில் இருந்து பெரிய கடல்போல் பெருகி வரும் காவிரி

Koviloor Digital Library

நதி சூழ்ந்த குளிர்ந்த வயலூரில் உள்ளம் உவந்து வாழும் பெருமையிற் சிறந்தவரே! திருமாலின் திரு மருகரே! உமக்கு வணக்கம்! முடிவு இல்லாதவரே! உமக்கு வணக்கம். ஆறுமுகப் பரம்பொருளே! உமக்கு வணக்கம்! ஹரஹர குமாரக் கடவுளே! உமது திருவடிக்கு வணக்கம! தேவர்கட்கு வாழ்வு தந்த செல்வமே! உமக்கு வணக்கம்! சிவந்த திருமேனியரே! உமக்கு வணக்கம்! என்றெல்லாம் உம்மைத் துதி செய்ய ஆவல் இருக்கின்றது. சிலம்பணிந்த திருவடியையுடையவரே! இந்திரன் தந்த தெய்வயானையம்மையின் கணவரே! பாம்புக்குப் பகையாகிய மயிலையும், வேலாயுதத்தையும் உடைய கோலாகலமானவரே! ஒரு நாளேனும் சிறியேன் துதி செய்யாத உமது திருவடியைச் சிறிதும் அறியாத மூடனாகிய அடியேனுக்குப் பதி பசு பாசம் என்ற முப் பொருள் இலக்கணத்தை உமது திருவாக்கால் உபதேசஞ் செய்து அருள்புரிய வேண்டும்.

விரிவுரை

அரிமருகோனே :

அரி - பாவங்களை நீக்குபவர். அரன் என்ற சொல்லும் இந்தப் பொருளிலே வருகின்றது என்பதை உணர்க.

அரன் - ஆண்பால், அரி - பெண்பால்.

சங்கரன் சங்கரி என்று வருவதால் அறிக.

திருமாலின் தங்கை உமாதேவியார்.

'அச்சுதசகோதரி" — திருவகுப்பு

"உலகீன்ற பச்சைஉமை யணன்" — திருப்புகழ்,

Koviloor Digital Library

உமாதேவியாரின் புதல்வர் முருகர், அதனால் முருகன் திருமாலுக்கு மருகனாக விளங்குகின்றார்.

"மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை" என்று கந்தரலங்காரத்தில் கூறி அருணகிரியார் மகிழ்கின்றார்.

நமோ :

நம ஓ. நமோ என ஆயிற்று. நம - நமஸ்காரம். மற்றொரு பொருள் :-

ந - இல்லை. ம - என்னுடையது.

"நம" என்னுடையது இல்லை. எல்லாம் இறைவனுடையவேயாகும். 'யாமோதிய கல்வியும் எம்மறிவும் தாமே பெற வேலவர் தந்தது — கந்தரநுபூதி.

பூமி, கடல், தீ, காற்று, ஆகாயம், காய்கறி, உணவு எல்லாம் இறைவன் படைத்து ஆன்மாக்களுக்கு வழங்கியிருக்கின்றான். நம்முடைய பொருள் ஒன்றும் இல்லை. எல்லாம் அவனுடைய பொருள்கள்.

அறுதியிலானே :

முருகவேள் முடிவு இல்லாதவர்.

அறுதி - முடிவு.

ஆதியிருந்தால் அந்தம் இருக்கும். அவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன்

'ஆதியும் அந்தமும் இல்லா
அரும் பெருஞ்சோதி"

என்பார் மணிவாசகர்.

"அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்"

— கந்தபுராணம்

"ஆதியும் நடுவும்ஈறும் அருவமும் உருவும் ஒப்பும்
ஏதுவும் வரவும் போக்கும் இன்பமும் துன்பும் இன்றி
வேதமும் கடந்துநின்ற விமல"

— கந்தபுராணம்.

Koviloor Digital Library

ஆறுமுக வேளே :

வேள் - விரும்பப்படுகின்றவர். உதவி செய்கின்ற வர் என்றும் பொருள்படும்.

சிவ மூர்த்தியின் தொன்மையான நன்மை தரும் வடிவம் ஆறுமுக சொரூபம். ' தனது தொல்லைத் திருமுகம் ஆறும் கொண்டான் ' என்ற கந்தபுராணத் திருவிருத்தத் தால் அறிக.

ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என்று ஐந்து முகங்களுடன் கீழ் நோக்கிய அதோ முகமும் சேர்ந்து ஆறுமுகங்கள்-இறைவனுடைய கருணைக் குணங்கள் ஆறும் அவனுக்கு ஆறுமுகங்கள் ஆயின.

" ஏவர்தம்பாலும் இன்றி எல்லைதீர் அமலற்குள்ள
மூவிருகுணனும் சேய்க்கு முகங்களாய் வந்ததென்ன;
— கந்தபுராணம்

ஈசானமுகம்—மேல்-நோக்கியது

தத்புருஷமுகம் — கிழக்கு நோக்கியது

அகோரம் — தெற்கு நோக்கியது

வாமதேவம் — வடக்கு நோக்கியது

அதோமுகம் — கீழ்நோக்கியது

இதனல் முருகப்பெருமானுடைய திருமுகங்கள் ஆறு பக்கமும் பார்த்துக்கொண்டிருக்கின்றன. அப்பெருமான் நோக்காத திசையில்லை

இவ்வாறு ஆறுபக்கங்களிலும் பார்க்கும் திருமுகங் களை எவ்வாறு எழுதுவது? எழுத வொண்ணுதது; இதனல்

Koviloor Digital Library

"எழுதரிய அறுமுகமும்" என்று அருணகிரிநாதர் கூறுகின்றார்.

அரகர சேயே :

ஹர ஹர — பாவங்களைப் போக்குபவர்:
சேய்—என்றும் இளமையுடன் இருப்பவர்
" என்றும் இளையாய் "—நக்கீரர்
" என்றும் அகலாத இளமைக்கார"
— அருணகிரிநாதர்

இமையவர் வாழ்வே :

தேவர்கள் கண் இமைக்காதவர்கள் — அதனால் இமையவர் என்று பேர் பெற்றனர்,

சூரபன்மனால் 108 யுகங்கள் சிறையில் இருந்து வேதனைப்பட்டார்கள். முருகப் பெருமான் சூரனைவென்று தேவர்களின் சிறையை நீக்கி அருள்புரிந்தார்—அதனால் இமையவர்க்கு வாழ்வு தந்த வள்ளல் என்று இங்கே குறிப்பிடுகின்றனர்.

அருண சொரூபா :

அருணம் — சிவப்பு
முருகப் பெருமான் செந்நிறம் உடையவர்
"செய்யன் சிவந்த ஆடையன்"
—திருமுருகாற்றுப்படை

"செவ்வானுருவில் திகழ்வேலவன்"

"கையோ அயிலோ கழலோமுழுதும்
செய்யோய்!'
— கந்தரநுபூதி

Koviloor Digital Library

உளதாசை :

முருகா உன்னை வணங்கி வாழ்த்தி வந்திக்க வேண்டுமே என்ற அவா அடியேனுக்கும் உண்டு.

பரிபுர பாதா :

பரிபுரம் — காலுக்கு அணிகின்ற அணிகலம்.

வேதங்களே சிலம்புவடிவில் முருகப்பெருமானுடைய திருவடியில் மந்திரஒலி செய்து கொண்டிருக்கும்.

சுரேசன் தருமகள் நாதா :

சுரேசன் — இந்திரன் — சுரர்கட்குத் தலைவன், திருமாலின் கண்மலரில் பிறந்த அமுதவல்லி இந்திரனுக்கு மகளாகி, ஐராவதம் என்ற யானையால் வளர்க்கப்பட்டதனால் தேவயானை என்று பேர் பெற்றனள். சூரசங்காரத்துக்குப்பின் திருப்பரங்குன்றத்தில் இந்திரன் திருமணம் செய்துதர தேவயானையை முருகப்பெருமான் திருமணம் செய்துகொண்டருளினர்.

ஆடம்பர :

முருகன் சகல அணிகலன்களும் அணிந்து கோலாகலமாக இருப்பவர்.

கடக புய மீதில் ரத்ன மணியணி பொன் மாலை
செச்சை
கமழுமணமார் கடப்பம் அணிவோனே ''
— திருப்புகழ்

நாளும் பகர்தல் இலா தானையேதும் சிலதறியா ஏழை :

முருகா ! உனது திருவடியை நாள் தோறும் துதி செய்யாதவனும், சிறிதேனும் திருவடியை அறியாதவனுமாகிய மூடன்.

ஏழை - அறிவில்லாதவன்

'' ஏடெழுதா முழு ஏழையை ''
(ஏவினை) திருப்புகழ்.

Koviloor Digital Library

பதி பசு பாசோபதேசம் பெறவேணும் :

பதி பசு பாசம் என்ற முப்பொருள்களையுடையது சைவ சித்தாந்தம்.

சங்கரர் ஆன்மாவைத் தவிர வேறு பொருள் இல்லை என்று கூறினர். அது கேவலாத்வைதம். மத்வர் இரு பொருள்களைக் கூறினர். துவைதம் எனப்படும்.

மெய்கண்டார் முப்பொருள்களைக் கூறி உலகுக்கு உபகரித்தார். திருமூலரும் இதனைத் தெளிவாகக்கூறினர்.

" பதியினைப்போல் பசு பாசம் அநாதி "

— திருமந்திரம்

அருணகிரிநாதர் இந்தச் சைவ சித்தாந்தக் கொள்கையையுடையவர் என்பதை இப்பாடலால் தெளிக.

கந்தபுராணத்தில் காசிபர் தன் மைந்தர்கட்கு இந்தச் சைவ சித்தாந்த நுண் பொருளை உபதேசித்தார் என்பதும் இங்கு உன்னுக.

சான்றவர் ஆய்ந்திடத் தக்கவாம் பொருள்
மூன்றுள மறையெலாம் மொழியநின்றன
ஆன்றதோர் தொல்பதி ஆருயிர்த்தொகை
வான்திகழ் தளையென வகுப்பர் அன்னவே

— கந்தபுராணம்

பதி - இறைவன்.

பசு - ஆன்மாக்கள் பல. பசு என்ற சொல் கட்டுப் பட்டது என்று பொருள்படும். " அறம்பாவம் என்னும் அருங்கயிற்றுல் கட்டி " — திருவாசகம்.

பாசம் - ஆன்மாவுக்கு உள்ள தளை. ஆணவ மலம்

ஆன்மாக்களாகிய உயிர்கள் என்றும் உள்ளவை. இறைவனுல் படைக்கப்பட்டவையல்ல. உயிர் - நித்தியப்

Koviloor Digital Library

பொருள். செம்பில் களிம்புபோல், அரிசியில் தவிடுபோல் ஆன்மாவில் ஆணவமலம் அநாதியிலேயே உள்ளது. இந்த மலம் நீங்கினுல் சீவன் சிவமாம் தன்மையடையும்.
'' சித்தமல மறுவித்துச் சிவமாக்கி '' — மணிவாசகர்.

இந்த உண்மையை வேதம் பொதுவாகவும், ஆகமம் சிறப்பாகவும் கூறுகின்றன. இந்த உண்மையை உணராது மக்கள் பலர் கெடுகின்றுர்கள்.

சைவ சித்தாந்த சாத்திரங்களும், பன்னிரு திருமுறைகளான தோத்திரங்களும் இதனைத் தெளிவாக நமக்கு உபதேசிக்கின்றன.

ஆகவே அருணகிரிநாதர் இந்த முப்பொருளின் உண்மை விளக்கத்தை முருகப்பெருமானிடம் உபதேசம் பெற வேண்டுகின்றுர்.

கரதல சூலாயுதா :

சூலம் மூன்று பிரிவாக இருக்கின்ற ஆயுதம். இது சிவபெருமான் கரத்தில் இருப்பது. இந்தச் சூலாயுதம் முருகப்பெருமானுக்கும உண்டு.

'சூலம்வாள் தண்டுசெஞ்
சேவல் கோதண்டமும்
சூடுதோளுந்தடந் திருமார்பும்' — (காலனுர்.)
— திருப்புகழ்

கரிபரி மேலுறுவானும் :

கரி - யானை. கரத்தையுடையது கரி. சினையாகு பெயர்.

பரி - பரித்தல், தாங்குதல் - இதுவாகனப் பொதுச் சொல்.

மயிலையும் பரி என்று அருணகிரியார் கூறுகின்றுர்.

Koviloor Digital Library

"ஆடும்பரி" என்று கந்தரநுபூதியில் வருவதைக் காண்க.

யானையை வாகனமாக உடையவன் இந்திரன்.

''செயசெய சேனாதிபதியே'' என்று துதி செய்தான்,

பல தோளா :

பன்னிரு தோள்களையுடையவர் முருகர்
பலம் — வலிமை, வலிமை தங்கிய தோள்கள் என்றும் பொருள்படும்.

குடதிசை வாராழிபோலும் படர்நதி காவேரி :

மேல்திசையில் உள்ள குடகுமலையில் இருந்து கடல் போல் பெருகிவரும் நதி காவேரி.

''கடல் போல் காவேரி
— திருஞானசம்பந்தர் 1-67-5

'' காவேரிமகப்ரவாக பானியம் அலைமோதும்
—(அளித்தமான்) திருப்புகழ்

குளிர் வயலூர் :

வயலூர் என்ற திருத்தலம் சோலைகள் சூழ வயல்களுக்கு இடையே விளங்குவது.

கருத்துரை

''வயலூர் மேவிய வள்ளலே! உமது திருவாக்கால் அடியேனுக்கு பதிபசுபாச உபதேசம் புரிந்தருள்க,

Koviloor Digital Library

2

ஆரமுலை காட்டி மாரநிலை காட்டி
யாடையணி காட்டி அநுராக
ஆலவிழி காட்டி ஓசைமொழி காட்டி
ஆதரவு காட்டி எவரோடும்
ஈரநகை காட்டி நேரமிகை காட்டி
யேவினைகள் காட்டி யுறவாடி
ஏதமயல் காட்டு மாதர்வலை காட்டி
யீடழிதல் காட்ட லமையாதோ
வீரவப ராட்டு சூரர்படை காட்டில்
வீழனலை யூட்டி மயிலூர்தி
வேலையுறை நீட்டி வேலைதனி லோட்டு
வேலை விளை யாட்டு வயலூரா
சேரமலை நாட்டில் வாரமுடன் வேட்ட
சீலிகுற வாட்டி மணவாளா
தேசுபுகழ் தீட்டி யாசைவரு கோட்டி
தேவர் சிறை மீட்ட ... பெருமாளே

பதவுரை

வீர அபர ஆட்டு - வீரத்துடன் எதிர்க்கும் வலிமை கொண்ட
சூரர் படை காட்டில் - சூரர்களின் சேனையாகிய காட்டில்
வீழ் அனலை ஊட்டி - நெருப்பு விழும்படி செய்து
மயில் ஊர்தி - மயில் வாகனத்தில் ஊர்ந்தவரே !
வேலை உறை நீட்டி - வேலாயுதத்தை அதன் உறையினின்றும் எடுத்து நீட்டி
வேலை தனில் ஓட்டும் - கடலிலே செலுத்திய,
வேலை விளையாட்டு - அச்செயலை விளையாட்டாகச் செய்த
வயலூரா - வயலூர் வள்ளலே !
மலை காட்டில் சேர - வள்ளிமலைக் கானகத்தில் சேர்ந்து

Koviloor Digital Library

வாரமுடன் வேட்ட - அன்புடன் நீர் விரும்பிய
சீலி - நல்லொழுக்கமுடைய
குறவாட்டி மணவாளா - குற மகளாம் வள்ளிநாயகியின் கணவரே !
தேசு புகழ் தீட்டி - உமது ஒளி வாய்ந்த புகழை விளக்கமாகச் சொல்லி
ஆசைவரும் கோட்டி - ஆசைமிகும் கூட்டத்தராகிய
தேவர் சிறை மீட்ட - தேவர்களின் சிறையை நீக்கின
பெருமாளே - பெருமையில் சிறந்தவரே !
ஆரமுலை காட்டி - முத்துமாலை தரித்துள்ள தனங்களைக் காட்டி
மார நிலை காட்டி - மார்பில் உள்ள தன்மையைக் காட்டி
ஆடை அணி காட்டி - உயர்ந்த ஆடைகளையும், அணிகலங்களையுங் காட்டி
அநுராக ஆல விழிகாட்டி - காம இச்சையை ஊட்டும் நஞ்சு போன்ற கண்களைக் காட்டி
ஓசை மொழி காட்டி - பண்ணோசை போன்ற இனிய சொற்களைக் காட்டி.
ஆதரவு காட்டி - அன்பினைக் காட்டி
எவரோடும் - எவராயிருப்பினும் அவரிடம்
ஈர நகை காட்டி - குளிர்ந்த சிரிப்பைக் காட்டி.
நேரம் மிகை காட்டி - எல்லா நேரங்களிலும் தீச்செயலைக் காட்டி
உறவாடி - நட்புச் செய்து
ஏத மயல் காட்டும் - குற்றத்தை விளைக்கும் காம மயக்கத்தைக் காட்டுகின்ற
மாதர் வலை காட்டி - பொதுமாதர் தங்கள் ஆசை வலையை வீசி
ஈடு அழிதல் காட்டல் - எனது வலிமை யாவும் அழியுமாறு செய்வித்தல்
அமையாதோ - அடங்காதோ !

Koviloor Digital Library

பொழிப்புரை

வீரத்துடன் எதிர்க்கும் வல்லமை கொண்ட சூரர்களின் சேனையாகிய காட்டில் நெருப்பை மூட்டிப் போர் புரிந்த மயில் வாகனரே! உறையிலிருந்து வேலாயுதத்தை எடுத்துக் கடல் மீது செலுத்தி விளையாடிய வயலூர் வள்ளலே! வள்ளிமலைக் கானகத்தில் சென்று, சீலம் மிகுந்த குற மாதை அன்புடன் திருமணஞ் செய்து கொண்ட வள்ளி மணவாளரே! ஒளி நிறைந்த புகழைச் சொல்லும் அன்பு மிகுந்த தேவர் கூட்டத்தின் சிறையை நீக்கிய பெருமை மிகுந்தவரே! முத்து மாலையுடன் கூடிய தனபாரங்களைக் காட்டி, மார்பின் தன்மையைக் காட்டி பட்டாடை அணிகலன்களைக் காட்டி காம இச்சையை உண்டு பண்ணுகின்ற நஞ்சு போன்ற கண்களைக் காட்டி இனிய மொழிகளைக் காட்டி, அன்பு காட்டி, எல்லாரோடும் குளிர்ந்த புன்னகையைக் காட்டி, எல்லா நேரங்களிலும் குற்றத்தையே காட்டி, தீச்செயல்களைக் காட்டி, நட்புச் செய்து, கேடு செய்யும் மயக்கத்தைக் காட்டும் பொது மாதர்கள் ஆசை வலையைக் காட்டி அடியேனை வலி தொலையச் செய்யும் இந்த அவலம் அகல மாட்டாதோ?

விரிவுரை

ஆரமுலைகாட்டி :

ஆரம் - முத்துமாலை, நன் முத்துமாலை உடம்பில் உள்ள சூட்டையகற்றி குளிர்ச்சியை உண்டாக்கும்.

மார நிலை காட்டி :

மார - மார்பிலுள்ள அழகைக் காட்டி

மற்றொரு பொருள் :- மாரன் - மன்மதன். மன்மதனுடைய நூல்களில் உள்ள கலைத்திறங்களைக் காட்டி

ஆடை அணி காட்டி ;

விலையுயர்ந்த பொன்னுடைகளையும் அணிகலன்களையும் காட்டி ஆடவர் தம்மை மதிக்குமாறு புரிவர்.

Koviloor Digital Library

அநுராக ஆலவிழி காட்டி :-

அநுராகம் - காம இச்சை.

ஆசைமயலையுண்டாக்கும் நஞ்சு போன்ற கண்களைக் காட்டுவர்,

'படையமபடையென சந்திக்குங்கட் கடையாலே
— (பரிமள) திருப்புகழ்.

"துறந்தோர் உளத்தை வளைத்துப் பிடித்துப் பதைக்கப் பதைக்க வதைக்குங் கண்ணார்"
—கந்தரலங்காரம்

ஓசை மொழி காட்டி :-

பண்ணோசை போன்ற இனிய மொழிகளைக் கூறி விலை மகளிர் தம்பால் வந்த ஆடவரை மயக்குவர்.

ஆதரவு காட்டி :

ஆதரவான வார்த்தைகளைக்கூறி உறவாடுவார்கள் எவரோடும் ஈரநகை காட்டி :-

யாராக இருப்பினும் அவர்களிடம் குளிர்ந்த புன்னகை காட்டி மயக்குவர்.

மிகை காட்டி :-

மிகை - குற்றம்.

குற்றமே செயினும் குணமெனக் கொள்ளும் கொள்கையால் மிகை பல செய்தேன்"
— சுந்தரர் 7-69.6

ஏதமயல் காட்டி :-

ஏதம் - தீமை.

'ஏதமில் அமரர் தம்மை யான்சிறை செய்த தன்மை'
— கந்தபுராணம்.

Koviloor Digital Library

ஈடழிதல் காட்டல் அமையாதோ :-

விலைமாதரின் உறவால் என் வலிமையழியும் புன்மை என்னை விட்டு அகலாதோ ?

வீரவபராட்டு சூரர் :-

வீர அபர ஆட்டு.

அபரம் - எதிர் ஆட்டு - வல்லமை வீரத்துடன் எதிர்த்த வலிமைமிக்க சூராதியவுணர்கள்.

படை.காட்டில் விழனலையூட்டி :-

சூராதியவுணர்களின் சோலையாகிய காட்டை முருகப்பெருமான் தனது புன்முறுவலால் நெருப்பை உண்டாக்கி எரித்து அழித்தருளினர்.

" சினத்தையும் உடல்சங் கரித்தமலை முற்றும்
சிரித்தெரி கொளுத்துங் கதிர்வேலா "

— (சினத்தவர்) திருப்புகழ்

வேலையுறை நீட்டி :-

உறையில் இருந்து வேலாயுதத்தை எடுத்து விடுத்தருளினர். இதனல் வேற்படைக்கு உறையுண்டு என்று தெரிகின்றது,

வேலைதனி லோட்டு :-

வேலை - கடல்.

சூரபன்மன் இறுதியில் கடலில் ஒளிந்து கொண்டான்.

2

Koviloor Digital Library

" கடற்சலந்தனிலே ஒளிசூரனை
உடற்பகுந்திரு கூறெனவேயது
கதித்தெழுந்தொரு சேவலுமாமயில் "
— (மனத்தினரர்) திருப்புகழ்

முருகவேள் அனல்மயமான வேலாயுதத்தைக் கடல் மீது விடுத்தருளினுர். அதனுல் கடல் வற்றி வறண்டு விட்டது.

" வேலை வற்றி வறண்டு சுறீர்சுறீலென
மாலைவெற்டிமிடிந்து திடீல்திடீல்என
மேன்மைபெற்ற செனங்கள் ஐயாஐயாவென
இசைகள்கூற
வேலெடுத்து நடந்த திவகராய
—(ஓலமிட்ட) திருப்புகழ்

வேலை விளையாட்டு வயலூரா

வேலைவிடும் வேலையே தனக்கு விளையாட்டாக உடையவர்
" கடல்மாக்கொன்ற தீப்படர்நெடுவேல் "
— கல்லாடம் 41

சீலி :

சீலத்தையுடையவள் சீலி

வள்ளியம்மையார் சிறந்த சீலத்தை யுடையவர்

தேசுபுகழ்தீட்டி ஆசைவரு கோட்டி தேவர் :

தேசு – ஒளி. ஞான ஒளி வீசும் முருகன் திருப்புகழை அன்புடன் தேவர்கள் கூட்டமாக வந்து பாடுகிருர்கள்.

கருத்துரை

கடலை வற்ற வைத்த வேலேந்திய வயலூர் முருகா !
மாதர் மயல் அற அருள்புரிவாய்

Koviloor Digital Library

3

இகல்கடின முகபடவி சித்ரத்து திக்கைமத
மத்தக்க ளிற்றையெதிர்
புளகதன மிளகஇனி தெட்டிக்க முத்தொடுகை
கட்டிப் பிணித்திறுகி
இதழ் பொதியி னமுதூமுறை மெத்தப்பு சித்துருகி
முத்தத்தை யிட்டுநக தந்தமான
இடுகுறியும் வரையையுற நெற்றித் தலத்திடையில்
எற்றிக்க லக்கமுற
இடைதுவள வுடைகழல இட்டத்த ரைப்பையது
தொட்டுத்தி ரித்துமிக
இரணமிடு முரணர்விழி யொக்கக்க றுத்தவிழி
செக்கச்சி வக்கவளை செங்கைசோர
அகருவிடு ம்ருகமதம ணத்துக்க னத்தபல
கொத்துக் குழற்குலைய
மயில்புறவு குயில் ஞிமிறு குக்கிற்கு ரற்பகர
நெக்குக்க ருத்தழிய
அமளிபெரி தமளிபட வக்கிட்டு மெய்க்கரண
வர்க்கத்தி னிற்புணரு மின்பவேலை

Koviloor Digital Library

அலையின்விழி மணியின்வலை யிட்டுப் பொருட்கவர
கட்டுப்பொ றிச்சியர்கள்

மதனகலை விதனமறு வித்தித்து ருப்புகழை
யுற்றத்து திக்கும்வகை

அபரிமித சிவஅறிவு சிக்குற்று ணர்ச்சியினில்
ரட்சித்த ளித்தருள்வ— தெந்தநாளோ ?

திகுடதிகு தகுடதகு திக்குத்தி குத்திகுட
தத்தித்த ரித்தகுட

செகணசெக சகணசக செக்கச் செகச்செகண
சத்தச்ச கச்சகண

திகுதிகுர்தி தகுதகுர்த திக்குர்தி
தக்ளத்த குத்தகுர்த— திங்குதீதோ

திரிதிரி தரிரிதரி திந்நித்தி ரித்திரிரி
தத்தித்த ரித்தரிரி

டிகுடடகு டகுடடிகு டிட்டிட்டி குட்டிகுடி
டட்டட்ட குட்டகுட

தெனதிமிர்த தவில்மிருக டக்கைத்தி ரட்சலிகை
பக்கக்க ணப்பறைத— வண்டைபேரி

வகைவகையின் மிகவதிர உக்ரத்த ரக்கர்படை
பக்கத்தி னிற்சரிய

எழுதுதுகில் முழுதுலவி பட்டப்ப கற்பகுதி
விட்டத்த மித்ததென

வருகுறளி பெருகுகுருதிக்குட்கு ளித்துழுது
தொக்குக்கு னிப்புவிட— வென்றவேலா

Koviloor Digital Library

வயிலிநமர் பயில்குமர பத்தர்க்க நுக்ரகவி
சித்ரப்ர சித்தமுறு
அரிமருக அறுமுகுவ முக்கட்க ணத்தர்துதி
தத்வத்தி றச்சிகர
வடகுலடில் நடனமிடு மப்பர்க்கு முத்திநெறி
தப்பற்று ரைக்கவல— தம்பிரானே

பதவுரை

திகுடதிகு தகுடதகு திக்குத்தி குத்திகுட
தத்தித்தரித்தகுட

செகணசெக சகணசக செக்கச்செகச்செகண
சத்தச்ச கச்சகண

திகுதிகுர்தி தகுதகுர்த திக்குத்தி குத்தி குர்தி
தக்குத்த குத்தகுர்த திங்குதீதோ

திரிரிதிரி தரிரிதரி தித்தித்தி ரித்திரிரி
தத்தித்த ரித்தரிரி

டிகுடடிகு டகுடடகு டிட்டிட்டி குட்டிகுடி
டட்டட்ட குட்டகுட

தெனதிமிர்த ——— திகுடதிகு ....
.... டட்டட்ட குட்டகுட
ஒலிசெய்யும்

தவில்-தவில் என்ற வாத்தியமும்

மிருகடக்கை-மிருக வேட்டைக்கு உரித்தான இடக்கை என்ற பெருமுரசும்

திரள்சலிகை-கூட்டமான பெரும்பறையும்

பக்க கண பறை-பக்கங்களிலே வரும் தோல் பறைகளும்

Koviloor Digital Library

தவண்டை-பேருடுக்கையும்

பேரி-பெரிய முரசு வாத்தியமும்

வகைவகையின் மிகு அதிர-வகைவகையாக மிகவும் ஒலிக்கவும்

உக்ரத்து அரக்கர்படை-கோபமுடன் அரக்கர்களின் சேனை
பக்கத்தினில் சரிய-பக்கங்களில் சரிந்து விழவும்

எழுதுதுகில் முழுது உலவி-சித்திரம் வரைந்த விருதுக் கொடிச் சீலைகள் போர்க்களம் முழுதும் உலாவி,

பட்டப்பகல்-பட்டப்பகலில்

பருதிவிட்டு-கண்ணபிரான் சக்ராயுதத்தை விடுத்து

அத்தமித்தது என-அஸ்தமிக்க வைத்ததுபோல் இருளாக் கவும்,

வருகுறளி-போர்க்களத்தில் வந்துள்ள பேய்கள்

பெருகு குருதிக்குள் ளளித்து-பெருகிவரும் உதிரத்தில் குளித்து,

உழுது-திளைத்து விளையாடி,

தொக்கு-உடம்பு

குனிப்புவிட-வளைவுவிட்டு நிமிர்ந்து எழும்படி

வென்ற வேலா-வெற்றி பெற்ற வேலாயுதக் கடவுளே !

வயலிநகர்-வயலூர் என்ற திருத்தலத்தில்,

பயில்குமர-எப்போதும் மகிழ்ந்து வீற்றிருக்கும் குமாரக் கடவுளே !

பத்தர்க்கு அநுக்ரக-அடியவர்களுக்கு அருள்செய்பவரே!

விசித்ர பிரசித்தம் உறு-விநோதமான கீர்த்திகளைக் கொண்ட

Koviloor Digital Library

அரி மருக-திருமாலின் திருமருகரே!

அறுமுகவ-ஆறுமுகக் கடவுளே !

முக்கண் கணத்தர் துதி-சிவ சாருபம் பெற்ற முக்கண் குழுவினர் துதி செய்கின்ற

தத்வ திற-அறிவுத்திறம் உடையவரே !

சிகர வடகுவடில்-சிகரங்களை வடக்கேயுள்ள கயிலை மலையில்

நடனம் இடு அப்பர்க்கு-திருநடம் புரியும் தந்தையாகிய சிவ பெருமானுக்கு

முத்திநெறி-முக்தியடையும் வழியாகிய மூலப்பொருளை,

தப்பு அற்று உரைக்கவல-குற்றமின்றி உபதேசிக்கும் வல்லமையுடைய !

தம்பிரானே-தனிப்பெருந் தலைவரே!

இகல் கடின-வலிமையும் கடுமையும் உடைய

முகபட-முகத்தில் இடுகின்ற அலங்காரத் துணியுடன்கூடிய

விசித்ரம்-பேரழகும்

துதிக்கை-தும்பிக்கையும்

மதமத்தம் - மதநீர் மதம் இவைகளையும் உடைய

களிற்றை எதிர்-யானையை எதிர்க்குந் திறத்தாய்,

புளகதனம் இளக-பூரித்திருக்கின்ற கொங்கை நெகிழ்ச்சியுறவும்,

இனிது எட்டி-இனிமையாகத் தாவி

கழுத்தொடு கைகட்டி—பிணித்து இறுகி—கழுத்தைக் கை கொண்டு கட்டி அணைத்து அழுத்தியும்

இதழ்பொதியின் அமுது-வாயிதழாம் நிறைவினின்று கிடைக்கும் வாயூறலை

முறைமெத்த புசித்து-காம சாத்திரப்படி நிரம்பப் பருகி உருகியும்,

Koviloor Digital Library

முத்தத்தை இட்டு - முத்தமிட்டு
நக தந்தம் ஆன-நகத்தாலும் பற்களாலும்,

இடுகுறியும் வரையை உற-இடப்பட்ட குறிகள் ரேகைகள் போல் தெரியவும்

நெற்றி தலத்து - இடையில் - முகத்துடன் முகம் வைத்து அணைந்து

எற்றி கலக்கம் உற-தாக்கிக் கலக்கம் அடையவும்.

இடை துவள-இடை நெகிழவும்

உடை கழல - ஆடை கழன்று போகவும்,
இட்டத்து-ஆசையுடன்,

அரைபை அது தொட்டு - அரையில் உள்ளபையாகிய அல்குலைத் தொட்டுத் தடவியும்.

திரித்து - அதனை மிகவும் அலைத்தும்

இரணம் இடும் - போர்புரியும்,

முரணர் விழி ஏக்க கறுத்தவிழி - பகைவர்களின் கண் போல இயற்கையாகக் கறுத்திருக்கும் கண்கள்

செக்கச் சிவக்க - மிகச் சிவந்த நிறத்தையடையவும்,

வளை செங்கை சோர - வளைகள் அழகிய கையில் இருந்து நெகிழவும்.

அகரும்-அகில் என்ற வாசனைப் பொருளும்;

இடும் தகமரு மணத்து - அதனுடன் சேரும் கஸ்தூரியும் ஒன்று சேர்ந்து நறுமணம் வீசவும்

கனத்த பல கொத்துக் குழல் குலைய - பாரமான பலபூங் கொத்துக் கொண்ட கூந்தல் கலைந்து விழவும்,

Koviloor Digital Library

மயில் புறவு குயில் - மயில், புரு, குயில்

ஞிமிறு - வண்டு

குக்கில் - செம்போத்து

குரல் பகர - ஆகிய பறவைகளின் குரலைக்காட்டி,

நெக்கு - உளம் உருகவும்

கருத்து அழிய - உணர்ச்சி அழியவும்,

அமளி பெரிது அமளிபட-படுக்கையில் நிரம்ப ஆரவாரம் எழவும்

வக்கு இட்டு - வதக்கப்படுவதுபோல் உடம்பில் சூடேறவும்

மெய் கரணம் வர்க்கத்தினில் - உடல் சம்பந்தப்பட்டுச் செய்யும் கலவியின் வகைகளில்

புணரும் இன்ப வேலை - புணர்ச்சி செய்து இன்பத்தை நுகரும் அச்சமயத்தில்

அலையின் விழிமணியில் வலை இட்டு - அலைகளையுடைய கடல் போன்ற பெரிய கண்மணி யாகிய வலையை வீசி,

பொருள் கவர - எனது பொருள்களைக் கவர்கின்ற

கட்டு பொறிச்சியர்கள் - என்னைப்பிணிக்கும் தந்திரக்காரி களாகிய பொதுமாதரின்

மதனகலை விதனம் அறுவித்து - காமசாத்திரத்தால்வரும் துக்கத்தை அழித்துத் தொலைத்து,

Koviloor Digital Library

திருப்புகழை உற்று-உமது திருப்புகழில் நாட்டம் வைத்து

துதிக்கும் வகை - துதிக்கும்படி,

அபரிமித - எல்லையற்ற

சில அறிவு சிக்கு உற்று - சிவஞானத்தில் திளைத்து,

உணர்ச்சியினில்-என் உணர்ச்சியில உண்டாகச் செய்து

ரட்சித்து அளித்து அருள்வதும்: காத்தளித்துக் கருணை புரிவது,

எந்த நாளோ - எந்நாளில் கிடைக்குமோ

பொழிப்புரை

திகுடதிகு தகுடதகு திக்குத் திகுத்திகுட தத்தித் தரித் தகுட, செகணசெக, சகணசக செக்கச் செகச் செகண சந்தச் சகச்சகண, திதிதிர்தி ததததர்த தித்திந் திகுத் திகு திகுர்தி தகுததுர்த தித்திந் திகுத் திதர்தி, தகதத் தகுத் தகுர்த திங்கு தீதோ, திரிரி திரி தரிரி தரி தித்திக் திரித் திரிரி, தத்தித் தரித் தரிரி டிகுட டகு டகுடடிகு டிட்டிட் டிகுட் டிகுடி டட்டட் டகுட்டகுட தென என்ற இந்தத் தாள வரிசை யொலியுடன், தவில், இடக்கை, கூட்ட மான சலிகை, பக்கத்தில் ஒலிக்கும் பலவிதமான பாறைகள் தவண்டை, பேரி முதலிய வாத்தியங்கள், வகைவகையாக மிகவும் ஒலிக்கவும், கோபித்து வந்த அரக்கர்களின் சேனை பக்கங்களில் சரிந்து விழவும், சித்திரம் வரைந்த விருதுக் கொடிச் சீலைகள், போர்க்களம் முழுதும் பறந்து, கண்ணை பிரான் சக்கராயுதத்தால் சூரியனை மறைத்து அஸ்தமனம் செய்ததுபோல் இருளுமாறு செய்யவும், போர்க்களத்தில் வந்த பேய்கள் பெருகிவரும் உதிர வெள்ளத்தில் குளித்துத் திளைத்து விளையாடி உடம்பின் வளைவு நீங்கி நிமிர்ந்து எழும்படி வெற்றிபெற்ற வேலாயுதரே! வயலூர் என்ற திருத் தலத்தில் வீற்றிருக்கின்ற குமாரக் கடவுளே! அடியவர்க்கு

Koviloor Digital Library

அருள்புரிகின்றவரே! விநோதமான கீர்த்திகளையுடைய திருமாலின் திருமருகரே! ஆறுமுகப் பரம்பொருளே! சிவ சாரூபம் பெற்ற மூன்று கண்களுடைய உருத்திர மூர்த்திகள் துதிக்கும் அறிவுத்திறங் கொண்டவரே! சிகரங்களையுடைய தாய் வடதிசையில் விளங்கும் கயிலைமலையில் திருநடம் புரியும் தந்தையாகிய சிவபெருமானுக்கு முத்தி நெறியாகிய மூலப்பொருளைக் குற்றமின்றி உபதேசிக்கும் ஞானத்திறன் உடைய தனிப்பெருந்தலைவரே! வலிமையும் கடினமும் உடையதும், அலங்காரத்துடன்கூடிய முகபடாம் அணிந்ததும், மதநீர் பொழிவதும் மதத்தையுடையதுமாகிய யானையை எதிர்க்கும் திறமுடையதாய்ப் பூரித்துள்ள கொங்கைகள் நெகிழ்ச்சியடையவும், இனிமையாகத் தாவிக் கழுத்தில் கை வைத்துக் கட்டியணைத்து அழுத்தியும், இன்பம் பொதிந்துள்ள வாயிதழ் அமுத நீரைக் காமநூல் முறைப்படி நிரம்பப் பருகியும், உள்ளம் உருகியும், முத்தமிட்டும், நகத்தாலும் பற்களாலும் இடப்பட்ட குறிகள் ரேகைகள் போலத்தெரியவும் முகத்துடன் முகம் வைத்துத் தாக்கிக் கலக்கமுறவும், இடை துவளவும், ஆடை அவிழவும், விருப்பமுடன் அரைப் பையாகிய அல்குலைத் தொட்டுத் தடவியும் போர் புரிகின்ற பகைவர்களின் கண்போல் இயல்பாகக் கறுத்துள்ள கண்கள் கலவியால் மிகவும் சிவக்கவும், கரங்களில் உள்ள வளையல்கள் கழன்று விழவும், அகிலும் கஸ்தூரியும் சேர்ந்து பரிமளம் வீசவும், பெரிய பாரமான-பல பூங்கொத்துக்களைச் சூடிய கூந்தல் குலையவும், மயில், புரு, குயில், வண்டு, செம்போத்து போன்ற பறவைகளின் ஒலியைக் காட்டி உளம் நெகிழ்ந்து உணர்ச்சி அழியவும், படுக்கையில் ஆரவாரம் எழவும்,வதக்கப்படுவதுபோல் சூடேறி உடல் ஒன்றிச் செய்யப்படும் பலவகையாகப் புணர்ச்சி செய்யும் அந்த வேளையில், கடல் போன்ற கண்களாகிய வலை வீசி என்பால் உள்ள பொருள்களைக் கவரும் தந்திரக்காரிகளாகிய விலை மகளிரின் காம சாத்திரத்தால் விளையும் வேதனையை அழியு

Koviloor Digital Library

மாறு செய்து, உமது திருப்புகழில் நாட்டம் வைத்துத் துதிக்கும்படி, எல்லை கடந்த சிவஞானத் தொடர்பு கொண்டு அடியேன் உய்யக் காத்தருள்வது எந்த நாளோ?

விரிவுரை

இத்திருப்புகழ் அழகிய கடினமான சந்தத்துடன் கூடியது. இதனைப் பாடிய பரமகுரு நாதராகிய அருணகிரியாரின் கவியாற்றல் நயந்து வியந்து போற்றத்தக்கது. இதனைப் படிப்பவர்க்கு அருணகிரியாரின் கவி புனையும் பேராற்றல் தெற்றெனத் தெரியும். ஆ! ஆ! ஆச்சர்யமான நடையுடைய பாடல்.

முதல் 4 அடிகளில் பொது மாதர்களின் கலவி நலத்தை விவரிக்கின்றார்.

இகல் கடின முகபடம் :-

யானையின் முகத்தில் தங்கமணிகள் அமைந்த அழகிய முகபடாம் அணிவார்கள். அது வலிமையாகவும், கடினமாகவும் இருக்கும்.

களிற்றை எதிர் புளகதனமிளக :-

யானையை எதிர்க்கக் கூடிய திறம் உடைய தனங்கள் நெகிழ்ந்து நிற்கும்.

நக தந்தமான இடுகுறி :-

கலவியில் நகத்தாலும் பற்களாலும் பல கோடுகள் விழக் கீறிக் குறியிடுவார்கள்.

அரைப்பை-அல்குல்.

Koviloor Digital Library

கறுத்த விழி செக்கச் சிவக்க :-

கலவியில் பெண்களின் கரிய விழி சிவக்கும் இதனைப் படிக்காசுப் புலவரும் கூறுகின்றார்.

.... " கலவியிலே
தோய்ந்து சிவந்தது மானார் விழிகள் "

அமளி பெரி தமளிபட :-

அமளி-படுக்கை

" அசலமுலைபுளகிதமெழ அமளியில்
அமளிபட "

— (அருவ) திருப்புகழ்

மதனகலை விதனமறுவித்து :-

மன்மதனுடைய காம நூலால் துன்பம் எய்தும். துன்பத்தை இன்பமெனக்கருதி மாந்தர் மயங்குவர்.

திருப்புகழையுற்றுத் துதிக்கும் வகை :-

முருகனுடைய திருப்புகழை ஓதினால் எல்லாத் துயரங்களும் நீங்கும். சிவ ஞானம் உண்டாகும்.

சிவ அறிவு :

சிவ ஞானம். முருகா ! மாதர் மயக்கம் அறவும், சிவ ஞான சித்தி பெறவும் சிறியேனைக் காத்தருளும் நாள் எந் நாள் ? அத்தகைய ஒருநாள் எனக்கு உண்டாகவேண்டும் என்று முருகனை அருணகிரியார் வேண்டுகின்றார்.

திகுடதிகு ...... தெனதிமிர்த :-

இந்த விதது வேது அடிகளில் நாதத்தின் மர்மத்தை புலனர்ந்த அடிகளார் என்ன என்ன தாள ஜதிகளைக் கூறுகின்றார் ! அம்மம்ம ! வியப்பாக உள்ளது. வாத்தியவகைகளையெல்லாம் கூறுகின்றார்.

Koviloor Digital Library

எழுதுதுகில் முழுதுலவி :

போர்க்களத்தில் தேர்களில் சித்திரம் எழுதிய கொடிச் சீலைகள் நிரம்பப் பறக்கின்றன. அதனால் சூரியனுடைய வெயில் மறைத்து இருளாகின்றனவாம்.

" பல்வேறு கொடியும் படாகையும் நிரைஇ
..... காரிருள் கழுமி விண்ணுற்றியங்கும்

வெய்யோன் அழுங்க " ......

பெருங்கதை. 2-6-21

" பல்வேறுருவில் பதாகை நீழல்
செல் கதிர் நுழையா " ......

பட்டினப்பாலை 182

பட்டப்பகல் பருதி விட்டத்தமித்ததென :-

இந்த வரி மகாபாரதத்தில் கண்ணபிரான் செய்த கருணைச்செயலைக் குறிக்கின்றது.

பதின்மூன்றும் நாள் போரில் அபிமன்யுவைத் துரியோதனாதிகள் அநியாயமாக முன்னும் பின்னும் நின்று போர் புரிந்து கொன்றுர்கள். அர்ச்சுனன் 'நாளை ஆதித்தன் அஸ்தமனம் அடைவதற்குள் என் மகன் வதத்துக்குக் காரணமாயிருந்த ஜயத்ரதனைக் கொல்வேன். இல்லையேல் வெந்தழலில் வீழ்வேன், இது வேதமொழி' என்று சபதம் செய்தான். 14ம் நாள் போரில் கண்ணபிரான் தனது சக்கராயுதத்தால் ஆதித்தனை மறைத்து, அர்ச்சுனனால் ஜயத்ரதனைக் கொல்வித்துக் காத்தருளினுர்,

' கூராழியால் முன்வீய இளையவன்
ஈடேறுமாறு பானு மறைவுசெய்
கோபால ராயன் நேயமுள திருமருகோனே "

(சீரான) திருப்புகழ்

Koviloor Digital Library

முக்கட்கணத்தர் துதி .:

முக்கட்கணத்தர்-பதினொரு கோடி உருத்திரர்கள்.

இவர்கள் " இமையா முக்கண் அண்டர்தம் பெருமான்
என்ன அமைந்த
தொல் வடிவமுள்ளார். "

பிரமன் ஒருசமயம் 'நான் பரம்' என்று அகந்தை கொண்டான். அதனால் படைப்புத் தொழில் தடைபட்டது. பிரமன் பரமனை வேண்டிப் பல காலம் தவம் புரிந்தான். இறைவன் திருவருளால் பிரமனுடைய நெற்றியில் இருந்து பதினொரு உருத்திரர்கள் தோன்றிப் பிரமனுக்கு உதவி செய்தனர்.

அந்தப் பதினொரு உருத்திரர்கள் உலகைச்சிருட்டிக்கத் தமது திருமேனியிலிருந்து அவர்களின் உருவு கொண்ட பதினொரு கோடி உருத்திரர்களை உண்டாக்கினர்கள். இதன்பின் பிரமன் சிருட்டியின் திறத்தைப் பெற்றான்.

தத்வத்திற:-

பதினொரு கோடி உருத்திர கணங்கள் யாவரும் போற்றிப் புகழும் ஞானத்திறம் உடையவர் முருக வேள் என உணர்க.

சிகர வடகுவடில் நடனமிடுமப்பர்:-

கயிலையில் அக்கினிக்காந்தச் சிகரங்களாய் 1001 சிகரங்கள் உண்டு. அவைகளில் நடராசமூர்த்தி 108 வகையான தாண்டவங்கள் புரிகின்றார்.

"இவை புடைசூழ்ந்த சிகரமாயிரத்தொன்று
எரிதழல் காந்தமாயிலங்கும்
அவைகளில் நடேசன் மூர்த்தம் நூற்றெட்டும்"

— ஞான உபதேச (80)

Koviloor Digital Library

அப்பர்க்கு முத்திநெறி தப்பற்றுரைக்க வல :-

அப்பர் - சிவபெருமான்

அகில உலகங்கட்கும் அப்பனுயிருப்பவர். அதனுல் அப்பர் பெருமான் 'அப்பன்' என்று பாடியருளினுர் எல்லா உயிர்கட்கும் அவனே தந்தை: ஒரு சமயம் ரத்னுவதி என்ற செட்டிப்பெண்ணுக்குத் தாயாக வந்து தண்ணருள்புரிந்தார். அதனுல் தாயுமானுர் என்று பேர் பெற்றுர்:

தாயும் ஆனுர் என்ற சொல்லில் உள்ள உம்மை தந்தையாக விளங்குகின்றுர் என்பதைக் குறிக்கின்றது.

கருத்துரை

வயலூர் வள்ளலே! மாதர் மயக்கமற
சிவஞானச் செல்வத்தைத் தந்தருள்.

Koviloor Digital Library

4

இலகு முலேவிலே யசடிகள் கசடிகள்
கலேகள் பலவறி தெருளிகள் மருளிகள்
எயிறு கடிபடு முதடிகள் பதடிகள்
எவரோடும்

இனிய நய மொழி பழகிக ளழகிகள்
மடையர் பொருள்பெற மருவிகள் சருவிகள்
யமனு மிமையென வழிதரு முழிதரும்
விழிவாளால்

உலக மிடர்செயு நடலிகள் மடலிகள்
சிலுகு சிலரெரடு புகளிக ளிகலிகள்
உறவு-சொலவல துரகிகள் விரகிகள்
பிறைபோலே

உகிர்கை குறியிடு கமுகிகள் கமுகிகள்
பகடி யிடவல கபடிகள் முகடிகள்
உணர்வு கெடும்வகை பருவிக ருருவிக
ளுறவாமோ

அலகை புடைபட வருவன பொருவன
இலக கணநிறை நகுவன தகுவன
அசுரர் தசைவழி நிமிர்வன திமிர்வன
பொடியாடி

அலரி குடதிசை யடைவன குடைவன
தரும வநிதையு மகிழ்வன புகழ்வன
அகில புவனமு மரகர கரவென
அமர் வேள்வி

Koviloor Digital Library

திலக நுதலுமை பணிவரு செயமகள்
கலையி னடமிட வெரிவிரி முடியினர்
திறள்ப லுயிருடல் குவடுக ளெனநட
—மயிலேறி

சிறிது பொழுதினி லயில்விடு குருபர
அறிவு நெறியுள அறுமுக இறையவ
த்ரிசிர சிரியயல் வயலியி லினிதுறை
—பெருமாளே

பதவுரை

அலகைகள்-பேய்கள்,

புடைபடவருவன-பக்கங்களில் சேரும்படி வரவும்,

பொருவன-போர் புரியவும்,

கலக கணம் நிரை-கலகம் செய்யும் பேய்க் கூட்டங்களின் வரிசை

நகுவன-சிரிக்கவும்

தகுவன-மேம்பட்டு விளங்கவும்

அசுரர்-இறந்துபட்ட இராக்கதர்களின்

தசை வழி-மாமிசக் குவியல் கிடைத்தபோது அதனைத் தின்று

நிமிரவும்-நிமிர்ந்து மகிழவும்,

திமிர்வன-விறைப்பு விடவும்

பொடி ஆடி-போர்ப் புழுதிகளில் குளித்து

அலரி-சூரியன்

குட திசை அடைவன-மேற்குத் திசையில் சேரவும்,

குடைவன-மேற்குக் கடலில் புழுதி போகக் குளிக்கவும்

தரும வநிதையும் மகிழ்வன-தரும தேவதை மகிழ்ச்சியுறவும்

Koviloor Digital Library

புகழ்வன-புகழை எடுத்துக் கூறவும்
அகில புவனமும்-எல்லா உலகங்களும்
அர கர அர என-ஹரஹரஹர என்று துதித்துப் போற்றவும்
அமர்வேள்வி-போர்க்களச்சாலையில்
திலகநுதல்-பொட்டு அணிந்த நெற்றியையுடைய
உமைபணிவரும்-உமாதேவிக்குப் பணி செய்யும்
செயமகள்-துர்க்கா தேவி
கலையின் நடம் இட-தனது மான் வாகனத்தின் மீது நடனம் செய்யவும்
எரிவிரி முடியினர் - நெருப்பு போன்ற சிவந்ததும் விரிந்துள்ளதுமான தலைமயிர் முடியையுடைய அசுரர்
திரள் பல் உயிர் உடல்-திரண்ட உயிர் குடியிருந்த உடல்கள்
குவடுகள் என-பிணக்குவியல்கள் மலைபோல் எழவும்,
நட மயில் ஏறி-நடனம் செய்யவல்ல மயிலின் மீது ஏறி
சிறிது பொழுதினில்-கொஞ்சம் நேரத்திலே
அயில் விடு குருபர-வேலாயுதத்தைச் செலுத்திய குருபரனே
அறிவு நெறியுள-ஞான மார்க்கத்தைக் கொண்டுள்ள
அறுமுக-ஆறுமுகக் கடவுளே !
இறையவ-இறைவனே!
த்ரிசிர கிரி அயல்-திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள
வயலியில் இனிது உறை-வயலூரில் இன்பமுடன் வாழ்கின்ற
பெருமாளே-பெருமை மிகுந்தவரே!
இலகு முலை விலை அசடிகள்-விளங்குகின்ற கொங்கையை விலைக்கு விற்கின்ற மூடர்கள்
கசடிகள்-குற்றம் உள்ளவர்கள்,

Koviloor Digital Library

கலைகள் பல அறி-காம சாத்திரங்கள் பலவற்றையும் அறிந்துள்ள

தெருளிகள்-தெளிவையுடையவர்கள்,

மருளிகள்-மருட்டுபவர்கள்

எயிறு கடிபடு-பல்லால் கடித்து பற்குறிகளையுடைய

உதடிகள்-உதட்டையுடையவர்கள்

பதடிகள்-அற்பர்கள்

எவரோடும்-எவராக இருப்பினும் அவருடன்

இனிய நயமொழி பழகிகள்-இனிமையான நயமான வார்த்தைகளைப் பேசப் பழகினவர்கள்

அழகிகள்-அழகுடையவர்கள்

மடையர்-முட்டாள்களின்

பொருள் பெற மருவிகள்-பொருளைப் பெறுவதற்கு அவர் களுடன் சேருபவர்கள்

சருவிகள்-கொஞ்சிக் குலாவுபவர்கள்

யமனும் மிகையென-இயமனும் அவசியம் இல்லை அதிகம் என்று சொல்லும்படி

அழிதரும்-அழியும்படி செய்வதும்

உழிதரும்-அங்கும் இங்கும் திரிகின்றதுமான (சுழல்கின்ற)

விழி வாளால்-கண் என்ற வாள் கொண்டு

உலகம் இடர் செயும்-உலகத்துக்கே துன்பஞ் செய்கின்ற

நடலிகள்-செருக்குள்ளவர்கள்

மடலிகள்-மடல் ஊரும்படிச் செய்பவர்கள்

சிலுகு-சண்டைப் பேச்சுக்கள்

சில ரொடு புகலிகள்-சிலரோடு பேசுபவர்கள்

இகலிகள்-பகைமை பூண்பவர்கள்

உறவு சொல வல-' அத்தான்! மாமா!'' என்று உறவு முறை கூறவல்ல

துரகிகள்-துரோகிகள்

விரகிகள்-சாமர்த்தியசாலிகள்

பிறைபோலே-பிறைச்சந்திரனைப்போல

உகிர் கை குறி இடு-கை நகத்தால் அடையாளக் குறியிடு பவர்கள்

கமுகிகள் - (கமுக்கம்) இரகசியம் உள்ளவர்கள்

சமுகிகள்-பேட்டியளிப்பவர்கள்

பகடி இடவல-வெளிவேஷம் போடவல்ல

கபடிகள்-வஞ்சக நெஞ்சினர்

முகடிகள்-மூதேவிகள்

உணர்வு கெடும்வகை-நல்ல அறிவு கெடும்படி

பருவிகள்-அரிப்பு அரிப்பவர்கள்

உருவிகள்-கையில் பொருள்வருமாறு சரசமாகப் பேசுபவர் களான விலை மாதர்களின்

உறவு ஆமோ-நட்பு ஆமோ ? (ஆகாது)

பொழிப்புரை

பேய்க்கூட்டங்கள் பக்கங்களில் சேர்ந்து வரவும், ஒருபேய் மறு பேயுடன் சண்டை போடவும், கலகம் செய் யும் பேய்களின் வரிசை சிரிக்கவும், மேம்பட்டு விளங்க வும், இறந்த அசுரர்களின் மாமிசக் குவியல்களைத் தின்று நிமிரவும், விறைப்பு விடவும், போர்க்களப்புழுதியில் குளித்து சூரியன் புழுதிபோக மேற்குக் கடலில் சேர்ந்து முழுகி யும், தருமதேவதை மகிழ்ச்சியடையவும், புகழ்ந்து போற்ற வும், எல்லா உலகங்களும் ஹர ஹர ஹர என்று துதிக்கவும்

Koviloor Digital Library

போர்க்கள வேள்வியில், திலகந்தரித்த நெற்றியையுடைய உமாதேவியாருக்குப் பணிபுரியும் துர்க்காதேவி தன் மான் வாகனத்தின்மீது நடனம் செய்யவும், நெருப்புபோல் சிவந்து விரிந்துள்ள தலைமயிருடைய அசுரர்கள் உயிர் பிரிந்த பிணக்குவியல் மலைபோல் குவிய நடனம செய்யவல்ல மயில் மீது ஏறி, சிறிது நேரத்திலே வேலாயுதத்தைச் செலுத்தியகுருபரனே! ஞானமார்க்கத்தில் உள்ள ஆறுமுகக் கடவுளே! இறைவனே! திருச்சிரராப்பள்ளிக்கு அருகில் உள்ள வயலூரில் இனிது எழுந்தருளியுள்ள பெருமையின் மிகுந்தவரே! விளங்கும் தனபாரங்களை விலைக்கு விற்கின்ற மூடர்கள்; குற்றம் உள்ளவர்கள்; காமசாத்திரங்கள் பல அறிந்த தெளிவையுடையவர்கள்; தன்பால் வந்த ஆடவர்களை மயக்குபவர்கள், பல்லால் கடிபட்ட உதட்டையுடையவர்கள்; பதர் போன்றவர்கள்; யாராக இருப்பினும் அவர்களுடன் இனிமையாகவும் நயமாகவும் பேசப்பழகியவர்கள்: அழகுள்ளவர்கள்; மூடர்களின் பொருளைப் பறிக்கும் பொருட்டு அவர்களுடன் சேருபவர்கள், கொஞ்சிக் குலாவுபவர்கள்; மக்கள் உயிரைப் பறிக்க இவர்களே போதும்; உயிரை வாங்கும் இயமன் வேண்டாமே? என்று கூறும்படி அழிதலைச் செய்பவர்கள். சுழலுகின்ற கண் என்ற வாளால், உலகத்துக்கே கேடு செய்யும் செருக்குள்ளவர்கள்; மடல் ஏறும்படிச் செய்பவர்கள்; சிலருடன் சண்டைப் பேச்சு பேசுபவாகள்; பசைப்பவர்கள்''; மாமா! அத்தான்!'' என்று உறவு முறை கூற வல்ல துரோகிகள்; சாமார்த்தியசாலிகள், பிறைச்சந்திரனைப்போல் கைநகத்தால் குறிவைப்பவர்கள்; இரகசியம் பல உடையவர்கள்; பேட்டியளிப்பவர்கள்; வெளி வேடம் போடவல்ல வஞ்சக நெஞ்சினர்; மூதேவிகள்; நல்ல அறிவு கெடும்படி அரிப்பு அரிப்பவர்கள்; சரசமாகப் பேசுபவர்களாகிய விலைமகளிரின் உறவு ஆகுமோ? (ஆகாது)

Koviloor Digital Library

விரிவுரை

இத்திருப்புகழில் விலைமகளிரின் கொடுமைகளை விரிவாக அடிகளார் கூறுகின்றார்.

இலகுமுலைவிலையசடிகள் :

மலைபோல் பருத்துத் திரண்டு நிமிர்ந்து நிற்கும் தனபாரங்களைத் தம்பால் வரும் ஆடவரிடம் விலைக்கு விற்றுத் தனங்களைப் பறிக்கும் மூடர்கள்.

கலைகள் பலவறி தெருளிகள் :

கலை—புணர்ச்சிக்கு உரிய கரணங்கள். இக்கலைகள் 64

"யாழ் முதலாக அறுபத்தொருநான்கு
ஏரிள மகளிர்க் இயற்க்கையென் றெண்ணிக்
கலையுற வகுத்த காமக் கேள்வி"

—பெருங்கதை 1-35-81

"எண்ணென் கிரட்டி இருங்கலைபயின்ற
பண்ணியன் மடந்தையர்"

—சிலப்பதிகாரம் 14-16

விலைமளிர் இக்கலைகள் தேர்ந்து தெளிவு பெற்றிருப்பார்கள்.

மருளிகள் :

தன்பால் வந்த ஆடவரை மயக்குகின்றவர்கள் ;

எயிறு கடிபடு முதடிகள் :

எச்சில் ஊறுகின்ற இதழில் அமுதம் ஊறுவதா எண்ணி இளைஞர்கள் அம்மாதரின் உதட்டைக் கடிப்பார்கள்.

Koviloor Digital Library

யமனு மிகை யென அழிதரும் :

ஆடவர்களின் உயிரை இம்மாதர்களே பறித்துவிடு வார்கள். வேறு இயமன் எதற்காக? இயமன் அவசிய மில்லை என்று கூறுமாறு உயிரை வாங்குபவர்களை

" நன்மனைதோறும் பெண்களைப்படைத்து
நமனைஎன் செயப்படைத்தனையே "

— விவேகசிந்தாமணி

உழிதரும் :-

அம்மாதர்களின் கண்கள் இங்கும் அங்குமாகப் பார்த்து சுழலுந்தன்மையுடையவை.

அக்கண் வாள்போல் இளைஞர்களைப் பிளக்கும் பேராற்றல் படைத்தது.

" படையம படையென
அந்திக் குங்கட் கடையாலே "

— (பரிமள) திருப்புகழ்

...... " துரத்தோர் உளத்தை
வளைத்துப்பிடித்துப் பதைக்கப் பதைக்க
வதைக்குங் கண்ணார். "

— அலங்காரம்

"கூர்வேல் விழி மங்கையர் "

— அனுபூதி

உலக மிடர்செயும் நடலிகள் :-

கண்களால் உலகத்துக்கே துன்பஞ் செய்பவர் களாம்.

நடலிகள்-செருக்குள்ளவர்கள், பாசாங்கு செய்பவர்கள் என்றும் கூறலாம்-

Koviloor Digital Library

மடலிகள் :-

பழங்காலத்தில் "மடல் ஏறுவது" என்ற ஒரு செயல் இருந்தது. ஆடவன் தான் விரும்பிய பெண்ணை அடையும் பொருட்டு வாள் போன்ற கூரிய பனை மடல்களால் குதிரைபோல் செய்து தான் விரும்பிய பெண்ணின் உருவத்தை ஒரு துணிச்சீலையில் எழுதி அம்மடற்பரிமேல் ஏறிச் செல்லுவான். பனை மடல் கூறிய இடத்தில் உதிரம் வராமல் வீரியம் வருமாம்.

இவ்வாறு ஆடவர்களை மடலேறுமாறு செய்வார்களாம்.

பனை மடல் போன்ற கூர்மையான வஞ்சக நெஞ்சினர் என்று பொருள்படும்.

உறவு சொல வல துரகிகள் :-

ஆடவர் மதி மயங்கி கதி கலங்குமாறு மிகவும் இனிமையாக "மாமா! அத்தான்!" என்று முறைவைத்து அழைக்கும் இயல்புடையவர்கள்.

கமுகிகள் :-

கமுக்கமாக இந்த வேலை நடந்தது என்று கூறுவர். இரகசியமாகச் செய்யும் வேலை என அறிக.

பருவிகள் :-

பருவிதல்-அரித்தல்

அரிப்பு அரிப்பதுபோல் ஆடவரை நச்சரிப்பார்கள்.

"பருவிக் குறவர்புனத்தில் குவித்த
பருமாமணி முத்தம்"

—சம்பந்தர் 1-69-5

Koviloor Digital Library

அலகைபுடைபட வருவன :-

இப்பாடலின் பிற்பகுதி யுத்தகளத்தின் வர்ணனை.

அலகை-பேய்.

போர்க்களத்தில் மாண்டவரின் பிரேதங்களைத்தின்று மகிழுபேய்கள் கூட்டங் கூட்டமாகவரும். ஒன்றேடொன்று சண்டை போட்டுக் கொள்ளும்.

பொடியாடி அலரி குடதிசை அடைவன குடைவன :-

போர்க்களத்தில் எழுந்த தூசுகளால் சூரியன் மாசு பட்டு, மேற்கடலில் அப்புழுதியகலக் குளிக்கின்றுனும். இயல்பாக ஆதித்தன் அஸ்தமிப்பதைத் 'தற்குறிப்பேற்றம்' என்ற அணியால் அருணகிரிநாதர் இவ்வாறு கூறி நம்மை மகிழ வைக்கின்றுர்.

"சலதி புடைபட முதிர்வன எதிர்வன"

— என்பது ஒரு பாடல்.

தருமவநிதை :

தருமவநிதை-தருமதேவதை

கொடிய அரக்கர் மாண்டதனுல் இனி நமக்குக் குறையில்லை யென்று கருதி தருமதேவதை மகிழ்ந்து முருகப்பெருமானைப் புகழ்கின்றுள்.

செயமகள் :-

செயமகள்-துர்க்காதேவி.

இவள் பார்வதியம்மையின் பணி புரிகின்றவள். மான் வாகனம் உடையவள்.

முருகப்பெருமானுடைய வெற்றியை வியந்து தன் வாகனமாகிய கலைமான் மீது நடனம் புரிகின்றுள்.

Kovilor Digital Library

"கலையின் நடபடி" என்ற சொற்றொடருக்கு கலை சாத்திரவிதிப்படி நடிக்கின்றாள் என்றும் பொருள் கொள்ளலாம்.

எரிவிரி முடியினர் :-

அரக்கர்களின் தலைமுடி மயிர் நெருப்பைப்போல் சிவந்தும் விரிபட்டும் இருக்கும்.

"எரியன மணிமுடி இலங்கைக்கோன்"

சம்பந்தர் 3-19-8

"விரித்த குஞ்சியர்"

(உலைத்திமை) திருப்புகழ்

"செம்பராகம்படச் செறிந்த கூந்தளாள்"

— கம்பராமாயணம்

அறிவுநெறியுள ஆறுமுக:-

அறிவுநெறி-ஞானமார்க்கம்.

நாம் உய்ய நமக்கு ஞான நெறியைக் காட்டி அருள்புரிகின்ற தெய்வம் முருகப்பெருமான் என உணர்க.

இந்தத் திருப்புகழ்

அசடிகள் கசடிகள்
தெருளிகள் மருளிகள்
உதடிகள் பதடிகள்
பழநிகள் அழகிகள்
மருவிகள் கருவிகள்
அழிதரு முழிதரும்
நடலிகள் மடலிகள்
புகலிகள் இகலிகள்
துரகிகள் விரகிகள்
கமுகிகள் சமுகிகள்

இவ்வாறு வழி எதுகை அமைந்த இனிமையான பாடல்.

கருத்துரை:- வயலூர் மேவிய வரதரே! விலை மாதரின் உறவு அகல அருள்புரிவீர்.

Koviloor Digital Library

5

என்ஞல் பிறக்கவும் என்ஞ லிறக்கவும்
என்ஞல் துதிக்கவும் கண்களாலே
என்ஞ ழைக்கவும் என்ஞல் நடக்கவும்
என்ஞ லிருக்கவும் பெண்டிர்வீடு

என்ஞல் சுகிக்கவும் என்ஞல் முசிக்கவும்
என்ஞல் சலிக்கவும் தொந்தநோயை
என்ஞ லெரிக்கவும் என்ஞல் நிக்ஷனக்கவும்
என்ஞல் தரிக்கவும் இங்குநாஞர்

கன்ஞ ருரித்தஎன் மன்ஞ எனக்குநல்
கர்ஞ மிர்தபதம் தந்தகோவே
கல்லார் மனத்துட னில்லா மனத்தவ
கண்ஞ டியிற்றடங் கண்டவேலா

மன்ஞ னதக்கனை முன்ஞள் முடித்தலை
வன்வா ளியிற்கொளும் தங்கருபன்
மன்ஞ குறத்தியின் மன்ஞ வயற்பதி
மன்ஞ முவர்க்கொரு தம்பிரானே

Koviloor Digital Library

பதவுரை

கல் நார் உரித்த-கல்லினின்றும் நார் உரிப்பதுபோல் என் நெஞ்சக் கன கல்லைக் கனியுமாறு செய்தருளிய

என் மன்னு-என் அரசே!

எனக்கு—அடியேனுக்கு

நல் கர்ண அமிர்த பதம்-நல்ல செவிக்கு அமிர்தம் போன்ற உபதேச மொழியை

தந்த கோவே-அருளிய தலைவரே

கல்லார் மனத்துடன்-ஞான நூல்களைக் கல்லாத புல்லர்களின் நெஞ்சில்

நில்லா மனத்தவ-உறைவது என்பதனையே நினைக்காத மனத்தை உடையவரே

கண்ணடியில்-கண்ணடி போன்ற மிகவும் தெளிந்த

தடம் கண்ட வேலா-வேலினுல் தடாகத்தை உண்டாக்கியவரே.

மன் ஆன தக்கனை-அரசாய் விளங்கிய தட்சப்பிரசாபதியை

முன்னுள்-முன்னொரு நாளில்

முடித்தலை-முடியுடன் கூடிய தலையை

வன்வாளியில் கொளும்-வலிமை வாய்ந்த வாளாயுதத்தாற் கொய்த

தங்க ரூபன்-பொன் போன்ற வடிவத்தையுடைய சிவபெருமானுக்கு

மன்னு-தலைவரே

குறத்தியின் மன்னு-வள்ளிநாயகிக்குத் தலைவரே

வயல்பதி மன்னு-வயலூர் அரசே

Koviloor Digital Library

மூவர்க்கு ஒரு தம்பிரானே-அயன் அரி அரன் என்ற மும்மூர்த்திகட்கும் அரசாக விளங்கும் தனிப் பெருந்தலைவரே

என்னால் பிறக்கவும்-இன்னவகையில் இன்னபடி பிறக்க வேண்டும் என்று என் விருப்பப்படி பிறக்கவும்

என்னால் இறக்கவும்-என் விருப்பத்தின்படி இறப்பதற்கும்

என்னால் துதிக்கவும்-என் திறத்தால் துதிப்பதற்கும்

கண்களாலே-என் கண்களைக் கொண்டு

என்னால் அழைக்கவும்-ஒருவரைப் பார்த்து நான் அழைத் பதற்கும்

என்னால் நடக்கவும்-என்னால் நடப்பதற்கும்

என்னால் இருக்கவும்-என் விருப்பப்படி ஓரிடத்தில் சும்மா இருப்பதற்கும்

பெண்டிர் வீடு—மாதர்கள் வீடு என்ற இவற்றை

என்னால் சுகிக்கவும்-என்னால் அனுபவித்துச் சுகிக்கவும்

என்னால் முசிக்கவும்—இது வேண்டும் அது வேண்டும் என்று எண்ணி வருந்தி மெலிதற்கும்

என்னால்-இதுபோதும் என்று நான் அலுப்புறுவதற்கும்

தொந்த நோயை-வாத பித்த வாத சிலேத்துமங்களின் கூட்டுறவால் வரும் நோய்களை

என்னால் எரிக்கவும்-நான் எரித்துத் தள்ளுதற்கும்

என்னால் நினைக்கவும்-பலப்பல எண்ணங்களை எண்ணுதற் கும்

என்னால் தரிக்கவும்-இன்ப துன்பங்களைத் தாங்குதற்கும

இங்கு நான் ஆர்-எனக்கு என்ன திறம் (சுதந்திரம்) உளது? ஒன்றுமில்லை.

Koviloor Digital Library

பொழிப்புரை

கல்லில் நார் உரிப்பது போல் அடியேனுடைய கல் மனத்தைக் கனியுமாறு செய்த என் அரசே! அடியேனுடைய நல்ல செவிக்கு அமிர்தம் போன்ற இனிய உபதேச மொழியை உபதேசித்த என் தலைவரே! ஞான நூல்களைக் கல்லாத புல்லர்களின் நெஞ்சில் தங்குவதையே சிறிதும் நினைக்காதவரே! கண்ணாடிபோல் தெளிந்த தண்ணீரையுடைய தடாகத்தை வேலினால் உண்டாக்கியவரே! அரசனுய்ப் பெருமையுடன் விளங்கிய தட்சப் பிரஜாபதியைமுன்னொருநாள் மகுடத்துடன்கூடிய தலையை வலிய வாளால் கொய்த பொன்னூர் மேனியை யுடைய சிவமூர்த்திக்குத் தலைவரே! குறமகளாகிய வள்ளி பிராட்டியின் தலைவரே! வயலூர் அரசே! அயன அரி அரன் என்ற மும்மூர்த்திகட்கும் தனிப்பெருந் தலைவரே!

என் விருப்பப்படி பிறப்பதற்கும், என் திறத்தால் இறப்பதற்கும், என் திறத்தால் துதி செய்வதற்கும், என் கண்களைக் கொண்டு ஒருவரைப் பார்த்து நான் அழைக்கவும், என் மனோதருமத்தின்படி நடப்பதற்கும் என் திறத்தின்படி ஓரிடத்தில் சும்மா இருப்பதற்கும், பெண்கள் வீடு என்ற இவற்றை நான் அநுபவித்துச் சுகிப்பதற்கும், பல சிந்தனையால் வருந்தி மெலிவதற்கும் இதுபோதும் என்று நான் சலிப்பதற்கும், வாத பித்த சிலேத்துமக் கூட்டுறவால் வரும் நோய்களை நான் எரித்துத் தள்ளுதற்கும், பலப்பல எண்ணங்களை நான் எண்ணுதற்கும் இன்ப துன்பங்களைத் தாங்குவதற்கும் இங்கு எனக்கு என்ன சுதந்திரம் உளது? இல்லை.

Koviloor Digital Library

விரிவுரை

இத் திருப்புகழ் மிகவும் உயர்ந்த பாடல். நம்மை உய்விக்கும் பெற்றியுடையது. முதல் நான்கு அடிகள் "எல்லாம் ஈசன் செயல், நமது செயல் ஒன்றுமில்லை." என்று பரம குருநாதராகிய அருணகிரிநாதர் உபதேசிக்கின்றார்.

"நான் செய்கின்றேன்; நான் நடத்துகின்றேன்; நான் அனுபவிக்கின்றேன்; இந்தக் குடும்ப உயர்ச்சிக்கு நான் காரணம், '—என்று என்னுவதும் கூறுவதும் முழு அறியாமையாகும்.

"அவனன்றி ஓர் அணுவும் அசையாது."—என்பது ஆப்த வாக்கியம்.

பாவைக் கூத்திலே பொம்மைகளைச் சூத்திரதாரி கயிறு கொண்டு ஆட்டுவது போல் மாமிசப் பொம்மைகளாகிய நம்மை இறைவன் ஆட்டுகின்றான்; நாம் ஆடுகின்றோம்.

"........ வெய்யவினை
என்னிச்சையோ அருணைஈசா படைத்தளிக்கும்
உன்னிச்சையோ யன்றோ உரை"

— அருணகிரியந்தாதி

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே!"

— அப்பர் 6-95-3

ஊட்டுவிப் பானும் உறங்குவிப் பானும் இங்கு
ஒன்றோ டொன்றை
மூட்டுவிப் பானும் முயங்குவிப் பானும்
முயன்றவினை
காட்டுவிப் பானும் இருவினைப் பாசக்
கயிற்றின் வழி
ஆட்டுவிப் பானும் ஒருவனுண் டேதில்லை
அம்பலத்தே."

Koviloor Digital Library

" என்செய லாவது யாதுமொன் றில்லை
இனித் தெய்வமே
உன்செய லேஎன்று உணரப் பெற்றேன்"
— பட்டினத்தார்.

" என்செய லழிந்தழிந் தழியமெய்ச்
சிந்தை வர."
– (அந்தகன்) திருப்புகழ்

" நாளு ரொடுங்க நாளுர் வணங்க
நாளுர் மகிழ்ந்து உலையோத
நாளுர் இரங்க நாளுர் உணங்க
நாளுர் நடந்து விழநாளுர்
(ஊனேறெலும்பு) — திருப்புகழ்

ஆன்மாக்களுக்குச் சுதந்திரம்கிடையாது. சீவன் பரதந்திரன்

" வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்தல் அரிது.
— திருக்குறள்

என்றால் பிறக்கவும் :-

ஆன்மாக்கள் நம் விருப்பத்தின்படி பிறக்கவொண்ணாது. நமது விருப்பத்தின்படி பிறப்பு வருவதாயின் யாராவது அஷ்ட தரித்திரன் வீட்டில் கை வண்டி இழுக்கிறவன் வீட்டு 13வது குழந்தையாகப் பிறப்பார்களா ? ஏழை வீட்டில் பிறந்தால் சீனியா தருவார்கள்! இந்தச் சனியன் ஏன் பிறந்தது! என்று கூறிச் சலித்துக்கொள்வதைப் பார்க்கின்றோமே; எல்லோரும் கோடீச்சுரன் மாளிகையில்தானே பிறப்பார்கள்! கோடீச்சுரன்

Koviloor Digital Library

திருமாளிகையில் கட்டில் இருக்கின்றது. தொட்டில்இல்லை. குழந்தை இல்லையே? என்று ஏங்குகின்றார்கள். குழந்தை பிறப்பதில்லை? ஏன்?

தெய்வம் என்ற ஒன்று இல்லை என்றான். அப் பாவத்தால் வறியவன் வீட்டில் பிறந்து பாயில்லை, கஞ்சியில்லை, துணியில்லை என்று கூறி அந்த ஆன்மாக்கள் அல்லற்படுகின்றன.

தெய்வத்தை வணங்குவதால் தெய்வத்துக்கு ஒன்றும் பயனில்லை. காவிரி நதியில் நீராடுவதால் காவிரி நதிக்கு என்ன பயன்? ஆண்டவன் தந்த உடம்பால் அவனை வணங்குவது நன்றிக் கடனாகும். இறைவன் தந்த நாவினால் அவன் நாமத்தைக் கூறாமல், அவன் தந்த உடலால் அவனை வணங்காதவர்கள் நன்றி மறந்த தீவினையால் வறியவர் வீட்டில் பிறந்து வேதனையடைவார்கள்.

இந்தக் கருத்தை ஆன்றோர்கள் பலரும் தெளிவாகச் சொல்லுகின்றார்கள்.

"எந்தைநினை வாழ்த்தாத பேயர்வாய்
கூழுக்கும் ஏக்கற் றிருக்கும்
வெறுவாய்.
எங்கள்பெரு மானுனை வணங்காத
மூடர்தலை
இகழ்விற கெடுக்குந்தலை —திருவருட்பா

"சும்மாடு கட்டிச் சுமந்துழலு வார்சிலரை
இம்மா நிலத்தில் எண்ணுங்கால்—அம்மாநின்
பொன்னாரடிமுடியைப் போற்றாத பேறன்றோ
மன்னு சிதம்பரதே வா."
—சிதம்பர வெண்பா.

Koviloor Digital Library

ஆற்ருேடு தும்பை அணிந்தாடும் அம்பல
வாணர்தமைப்
போற்ருத பேர்க்கடை யாளமுண்டுஇப்
பூதலத்தில்
சோற்ருவி யற்றுச் சுகமுமற்றுச் சுற்றத்
துணியுமற்றும்
ஏற்ருலும் பிச்சை யிடயாரும் கிடையாமல்
இருப்பர்களே!

— பட்டினத்தார்

" திருவானைக்காவில் வெண்ணுவல் மரத்தின்கீழ் உள்ள சிவலிங்கத்தின் மீது மரத்தில் உலர்ந்த சருகுகள் விழுகின்றனவே என்று எண்ணிய சிலந்தி சிவமூர்த்திக்கு மேலே வாய் எச்சில் நூலால் பந்தரிட்டு மகிழ்ந்தது. அப் புண்ணியத்தால் அந்தச் சிலந்தியைக் காவிரி பாயும் சோழவள நாட்டு மன்னவனுக இறைவன் பிறக்குமாறு செய்தருளினுர்.

"சிலந்தியு மானைக் காவில்
திருநிழற் பந்தர் செய்து
உலந்தவ னிறந்த போதே
கோச்செங்க ணுனு மாகக்
கலந்தநீர்க் காவி ரிசூழ்
சோணுட்டுச் சோழர் தங்கள்
குலந்தனிற் பிறப்பித் திட்டார்
குறுக்கைவீ ரட்ட ஞரே.

அப்பர். 4:49:4

புகைவண்டியில் பயணம் செய்ய நாம் பணந்தந்து டிக்கட்டு எடுத்தாலும் ' இந்தப் பெட்டியில் இந்த இடத்தில் இரும்' என்று புகைவண்டி நிலைய அதிகாரி குறிப்

Koviloor Digital Library

பிட்டு அங்கு நம்மை இருக்கச் செய்வர். புகை வண்டிப் பயணமே நமது இஷ்டத்துக்கு அமையாதென்றல் பிறப்பு நமது விருப்பத்துக்கு அமையுமா? அமையாது.

அவரவர் செய்த நல்வினை தீவினைக்கு ஏற்ப இறைவன் ஆணையால் நமக்குப் பிறப்பு உண்டாகிறது.

ஆணுகப் பிறப்பதோ? பெண்ணுகப் பிறப்பதோ? உத்தமகுலத்தில் உத்தமத் தாய்தந்தையரிடம் பிறப்பதோ, குடிகாரனுக்கு மகனுகப் பிறப்பதோ எல்லாம் அவனுடைய ஆணையின்படிதான் நிகழும். அன்னதானம் புரிந்தவன் மறுபிறப்பில் பெருநிலக்கிழாருக்கு மகனுகப் பிறப்பான். கல்வி தானம்புரிந்தவன் மறுபிறப்பில் பேரறிஞனுகப் பிறப்பான்,

என்றல் இறக்கவும் :-

பிறப்பு நம் விருப்பத்துக்கு அமையாததுபோல் இறப்பும் நம் விருப்பத்தில் அமைவதில்லை. எத்தனையோ வயோதிகர்கள் அந்தோ என் உயிர் போகக்கூடாதா என்று கதறி யழுகின்றுர்கள். சிறைக்கூடத்தில் இருப்பவன் அவன் விருப்பத்துக்கு சிறைக்கூடத்தை விட்டு வெளியேற முடியாததுபோல் மரணமும் நம் விருப்பத்துக்கு வராது.

என்றல் துதிக்கவும் :

இறைவனைத் துதி செய்யவும் அவன் அருள் இருந்தால் தான் முடியும். இதனை மணிவாசகரும்,

"அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்கின்றுர்

கண்களாலே என்றல் அழைக்கவும் :

ஒருவரைக் கண்ணுல் பார்த்து அழைக்கவும் நம்மால் இயலாது. கண் இருக்கும்: கண்ணில் பார்வை இருக்காது. இந்த அவலநிலை எத்தனையோ பேர்க்கு எய்துகின்றது.

Koviloor Digital Library

என்றால் நடக்கவும் :

காலிருந்து நடக்க முடியாமல் வருந்துகின்றோர்களைக் கண்கூடாகப் பார்க்கின்றோம். கால் அசைக்க முடியாத நிலை பலருக்கு ஏற்படுகின்றது, பட்சவாதம் வந்து கை கால் செயலற்றுப் போவதையும் பார்க்கின்றோம்.

என்றால் இருக்கவும் :

நடக்க வேண்டாம். அழைக்க வேண்டாம்: ஓரிடத்தில் சும்மா இருக்கலாம் என்றால் அதுவும் நமது விருப்பத்தில் இயலாது. வினை சும்மா இருக்க விடாமல் அலைக் கழியச் செய்யும்.

பெண்டிர் வீடு என்றால் சுகிக்கவும் :

மனைவி வீடு முதலிய பொருள்களை அனுபவித்துச் சுகப் படவும் நம்மால் இயலாது. ஒரு தனவந்தன் 15 லட்சம் ரூபாயில் பங்களாவைப் புதுக்கினான். மின் விளக்கு அலங்கரிப்பு: விலையுயர்ந்த விரிப்பு: உயர்ந்த ஆசனங்கள்; அந்த வீட்டில் தங்காமல் மருத்துவமனையில் தங்குமாறு ஏற்படுகின்றது.

ஏராளமான நிலபுலம் உள்ளவன் நீரிழிவு நோய்க்கு ஆளாகித் கேழ்வரகு ரொட்டி தின்று வேதனைப்படு கின்றான்.

என்றால் முசிக்கவும்

முசித்தல்-இளைத்தல்

இளைத்துப் போகவும் நம்மால் ஆகாது. எத்தனைபேர் பருத்த உடம்புடன் இருந்து உடம்பு இளைக்கவில்லையே என்று வருந்துகின்றார்கள்,

இருந்தால் எழுவது துயரம்: எழுந்தால் இருப்பது துயரம்: நடக்க முடியாது மேல் மூச்சு வாங்கி வருந்து கின்றார்கள்.

Koviloor Digital Library

தொந்த நோயை என்றால் எரிக்கவும் :

வாதம் பித்தம் சிலேத்துமம் என்று மூன்று தன்மைகள் மாறுபட்டும் ஒன்றுடன் ஒன்று முரணியும் நோய்கள் வருகின்றன. அவ்வாறு அணுகிய பிணியை நம்மால் அகற்ற முடிகின்றதா ! இல்லை. என்ன இடர்ப்பாடு !

என்றால் நினைக்கவும் :

ஒரு பொருளை நினைக்கவோ, அதனை நெஞ்சில் மறவாமல் வைக்கவோ நம்மால் இயலுவதில்லை. ஒருவரைப் பார்த்து "முத்தையா" என்று அழைக்கின்றோம். முத்தையா என்ன வென்று கேட்கின்றான். "என்னமோ ஒன்று சொல்ல நினைத்து அழைத்தேன். நெஞ்சிலேயே இருக்கின்றது. வாயில் வரவில்லை"—என்று தடுமாறுவதைக் கண்கூடாகப் பார்க்கின்றோம் ; இவ்வளவுதான் மனிதனுடைய அற்பத்தனம் ; இதில் இருந்து மனிதனுடைய மாட்டாமை புலனாகின்றதல்லவா !

தசரதச் சக்கரவர்த்தி தன் மூத்த மகனுக்கு முடிசூட்டத் திட்டம் இட்டாரே ! நடைபெற்றதா ?

எதிர்க்கட்சியே இல்லாத காலத்தில் ஏகபோகச் சக்ரவர்த்தி இட்ட திட்டம் தவிடு பொடியாகப் போயிற்றே? நாம் எந்த மூலை? நமது திட்டம் எதுவும் திட்டமிட்டபடி நடக்கின்றதா? இல்லை

தன் மகனுக்கு முடி சூட்டி அரச பதவியில் அமர்த்த வேண்டும்எனக் கைகேயி திட்டம் தீட்டினாள்; நடைபெறவில்லை.

ஒன்றை நினைக்கஅது ஒழிந்திட்டொன்றாகும்
பின்றை அதுவரினும் வந்தெய்தும் – ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்.

—ஔவையார்

Koviloor Digital Library

என்ஞல் தரிக்கவும் இங்குநாஞர்?

தரித்தல்-தாங்குதல்

நமக்கு வருகின்ற இன்ப துன்பங்களைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றலும் நமக்கு இல்லை.

கன்ஞருரித்த என்மன்ஞ:

"கல்லில் நார் உரிக்கின்ருன்" என்பது பழமொழி நமது மனம் கல்லினும் திண்ணியது. "நெஞ்சக்கன கல்லும்' என்கின்ருர்.

"திணியானமஞே சிலை" என்றும் அநுபூதியில் கூறுகின்ருர்.

கல்லைப்போன்ற மனத்தைக் கனிய வைத்து இறைவன் ஆட்கொண்டான் என்று உள்ளம் உருகி உரைக்கின்ருர்.

"கன்ஞருரித்தென்ன என்னையுந்தன்
கருணையிஞல்
பொன்ஞர் கழல்பணித் தாண்டபிரான்"
— திருவாசகம் 11-9

எனக்குநல் கர்ஞமிர்தப்பதம் தந்த கோவே;

அருணகிரிநாதருக்கு மூவருக்குந் தேவருக்கும் மற்ற யாவருக்கும் எட்டாத முருகப்பெருமான் குருவாக வந்து அவருடைய சிறந்த செவியில் உபதேசித்தருளிஞர்.

இதனைச் சுவாமிகள் பல பாடல்களில் கூறுகின்ருர்.
"எட்டிரண்டும் அறியாத என் செவியில்
எட்டிரண்டு மிதுவா மிலிங்கமென
எட்டிரண்டும் வெளியா மொழிந்தகுரு முருகோனே"
— (கட்டி) திருப்புகழ்

Koviloor Digital Library

கல்லார் மனத்துடன் நில்லா மனத்தவ :-

அறிவு நூல்களைக் கற்றல் வேண்டும். அவ்வாறு கல்லாதது தலையாயபிழை.

"கல்லாப் பிழையும்"என்று பட்டினத்தார்கூறுகின்றார்.

"அறிவு நூல்கல்லா மூடர்"

— (இரத) திருப்புகழ்

கல்லா நெஞ்சில் நில்லா ஈசன்

— சம்பந்தர் 3-408

" கற்பவை கற்க " என்கின்றார் திருவள்ளுவர்.

கண்ணாடியில் தடம் கண்ட வேலா :

முருகப் பெருமான் தனது தந்தையாரை வழிபடும் பொருட்டு வேலினால் ஒரு தீர்த்தத்தை உண்டாக்கினார்! மிகப்புனிதமான புண்ணிய தீர்த்தம். கோயிலுக்கு எதிரில் பளிங்குபோல் தீர்த்தம் தெளிந்து விளங்குகின்றது

இது சக்தி தீர்த்தம் எனப்படும். இதில் பக்தியுடன் மூழ்குவோர்க்கு ஞானம் உண்டாகும்.

தடம்—தடாகம்

வேலினால் உண்டாக்கினார். " தடம் கண்ட வேலா " கண்ணாடியைப் போல் தெளிவாக இருக்கின்றது என்று கூறுகின்றார்.

இதுபோல் திருமுருகன் பூண்டியில் முருகப்பெருமான் சிவ பூசை செய்ய அங்கும் ஒரு திருக்குளம் உண்டாக்கினார்.

Koviloor Digital Library

"தோட்டு நாண்மலர்க் கடுக்கையர்
தொங்கலார்க்கன்பாய்
ஆட்டநீர்த்தடம் அண்மையில் இன்றிய
அதனால்
நீட்டு பொற்றிருக்கைத்திரு வேலையும்
புனத்தில்
நாட்டினான் நிலங்கீண்டது நாகமுண்ணடுங்க.
பழுத்த கொற்றவேல் படைமிகு
விரைவினால் பாய்ந்த
வழித்தலத்திடை வந்ததோர் மாசறு தீர்த்தம்"
— திருமுருகன் பூண்டித்தலபுராணம்

மன்னான தக்கனை:

தக்கனது வேள்வியை வீரபத்திரர் அழித்த வரலாற்றை இது குறிப்பிடுகின்றது.

பிரமதேவனுடைய வலக்கைப் பெருவிரலில் பிறந்தவன் தட்சப்பிரஜாபதி.

தக்கன் சிவபெருமானை வேண்டித் தவஞ்செய்து எண்ணிலா வரங்களைப் பெற்றான்.

வாழ்வில் மயங்கி வரமளித்த பரமனையே இகழ்ந்தான்.

சிவபெருமானைப் புறக்கணித்து கனகலம் என்ற இடத்தில் பெரியதொரு வேள்வி செய்தான். அகோரவீரபத்திரர் வந்து, தேவர்களையும் தேவமாதர்களையும் தண்டித்து, தக்கனது தலையை வாளினால் வெட்டி யாகத்தீயில் இட்டார்.

Koviloor Digital Library

தங்கருபன் :

சிவபெருமான், பொன்னூர் மேனியன்.

பொன்வஃண்ணம் எவ்வண்ணம்
அவ்வண்ணம் மேனி
...ஈசனுக்கே
—பொன்வண்ணத்தந்தாதி

தங்கருபன்மன்னு :

தங்கருபனும் சிவபெருமானுக்கும் தலைவராக இருந்து உபதேசித்தார் முருகர். அதனுல் சிவனுக்கும் அரசே என்றூர்.

மன்று மூவர்க்கொரு தம்பிரானே :

இங்கே அயன் அரிஹரன் என்ற மும்மூர்த்திகளைக் குறிக்கின்றூர். மூவரில் ஒருவர் உருத்திரர். உருத்திரர் வேறு—சிவம் வேறு. சிவம் நான்காவது பொருள். சதுர்த்தம் என்று உபநிடதம் கூறும்.

உருத்திரனையும் சிவத்தையும் ஒன்ருக எண்ணி மலைதல் கூடாது.

'படைத்தளித்தழிக்குந்த்ரி மூர்த்திகள் தம்பிரானே'
"சிலைமகள்நாயன் கலைமகள்நாயன்
திருமகள் நாயன் தொழும் வேலா"
—திருப்புகழ்

கருத்துரை

வயலூர் அரசே! எல்லாம் சிவன் செயல்
என்ற சிவபோதம் எய்த அருள்செய்!

Koviloor Digital Library

6

கடல்போற் கணைவிழி சிலைபோற் பிறைநுதல்
கனிபோற் றுகிரிதழ் எழிலாகும்
கரிபோற் கிரிமுலை கொடிபோற் றுடியிடை
கடிபோற் பணியரை எனவாகும்
உடல்காட் டினிமையி லெழில் பாத்திரமிவ
ளுடையால் கெறுவித நடையாலும்
ஒருநாட் பிரிவது மரிதாய்ச் சுழல்படும்
ஒழியாத் துயரது தவிரேனோ?
குடலீர்த் தசுரர்க ளுடல்காக் கைகள்நரி
கொளிவாய்ப் பலஅல கைகள் பேய்கள்
கொலைபோர்க் களமிசை தினமேற் றமரர்கள்
குடியேற் றியகுக உயர் தாழை
மடல்கீற் றினிலெழு விரைபூப் பொழில்செறி
வயலூர்ப் பதிதனி லுறைவோனே
மலைமேற் குடியுறை கொரடுவேட் டுவருடை
மகள்மேற் ப்ரியமுள பெருமாளே

பதவுரை

அசுரர்கள் உடல்-அசுரர்களின் உடலிலிருந்து
குடல் ஈர்த்து-குடலை இழுத்து வெளிப்படுத்தி
காக்கைகள்-காக்கைகளும்
நரி-நரிகளும்
பல கொள்ளிவாய் அலகைகள்-பல கொள்ளிவாய்ப் பிசாசு களும்

Koviloor Digital Library

பேய்கள்-பேய்களும்

கொலை போர்களமிசை-கொலைத் தொழில் நிறைந்த யுத்த களத்தில்

தினம் ஏற்று உண-நாள்தோறும் ஏற்று அக்குடலைப் புசிக்க

அமரர்கள்-தேவர்களை

குடி ஏற்றிய-விண்ணுலகில் குடியேற்றிய

குக-குகப்பெருமானே!

உயர் தாழை-வளர்ந்துள்ள தாழையின்

மடல் கீற்றினில் எழு-மடல் கீற்றினில் எழுகின்ற

விரை பூ பொழில் செறி-நறுமணம் நிறைந்த தாழம்பூஞ் சோலைகள் சூழ்ந்த

வயலூர் பதிதனில் உறைவோனே-வயலூர்த்தலத்தில் எழுந்தருளியிருப்பவரே!

மலை மேல் குடி உறை-மலை மேலேயே குடியாக வாழ்கின்ற

கொடு வேட்டுவர் உடை-கொடிய வேடர்களின்

மகள் மேல்-வேடர் மகளாகிய வள்ளிநாயகி மீது

ப்ரியம் உள-விருப்பம் கொண்டுள்ள

பெருமாளே-பெருமையில் சிறந்தவரே!

கடல்போல் கணைவிழி-கடல்போல் விசாலமாகவும் கணை போல் கூர்மையும் உள்ளன கண்கள்

சிலைபோல் பிறை நுதல்-வில்லைப் போலவும் பிறைச் சந்திரனைப் போலவும் உள்ளது நெற்றி

கனிபோல் துகிர் இதழ்-கொவ்வைக் கனி போலவும், பவளம் போலவும் உள்ளது வாயிதழ்

Koviloor Digital Library

எழில் ஆரும்-அழகு நிறைந்த

கரிபோல் கிரி முலை-யானை போலவும், மலை போலவும் உள்ளன தனங்கள்

கொடி போல் துடி இடை - கொடிபோலவும், உடுக்கை போலவும் உள்ளது இடை,

கடிபோல் பணி அரை - காவலிடம் போலவும் பாம்பின் படம் போலவும் உள்ளது அல்குல்

என ஆகும் - என்று உவமை சொல்லத்தக்க,

உடல் காட்டு - உடம்பைக் காட்டுகின்ற

இனிமையில் எழில் பாத்திரம் இவள் - இன்பநிலைக்கு இவளே அழகிய பாத்திரம் எனமயங்கி,

உடையாலும் - ஆடையழகிலும்,

செறுவித நடையாலும் - கருவமுடைய நடையழகிலும், ஈடுபட்டு

ஒருநாள் பிரிவதும் அரிதாய் சுழல்படும் - இவளை விட்டு ஒருநாள் பிரிந்திருப்பதும் இயலாது என்று அவள் மயக்கிலேயே.

அரிது ஆய் சுழல்படும் - மிகவும் சுழல்படுகின்ற,

ஒழியா துயர் அது தவிரேனே - நீங்காத துன்பத்தைத் தொலைக்கமாட்டேனே?

பொழிப்புரை

கொலைக்களமாகிய போர்க்களத்தில் காக்கைகள், நரிகள், பல கொள்ளிவாய்ப் பிசாசுகள் பேய்கள் இவைகள் கூடி இறந்த அசுரர்களின் உடலில் உள்ள குடலை எடுத்து உண்ணத் தேவர்களை விண்ணுலகில் குடியேற்றிய குகப்

Koviloor Digital Library

பெருமானே! உயரமாக வளர்ந்த தாழையின் மடல் ஏடுகளில் இருந்து நறுமணம் வீசும் சோலைகள் சூழ்ந்த வயலூரில் வசிப்பவரே! மலை மீது வாழும் கொடிய வேடர் களின் மகளாகிய வள்ளிநாயகி மீது அன்பு வைத்துள்ள பெருமையில் மிகுந்தவரே! கடலையும் கணையையும் ஒத்த கண்கள்; வில்லைப் போலவும், பிறைமதி போலவும் உள்ள நெற்றி; கொவ்வைக் கனியையும் பவளத்தையும் ஒத்த வாயிதழ்; அழகிய யானையையும் மலையும் ஒத்த தனங்கள்; கொடியையும் துடியையும் ஒத்த இடை; காவலிடம் போல வும், பாம்பின் படம் போலவும் உள்ள அல்குல் இவை களுடைய விலை மாதர் தமது உடம்பைக் காட்ட, இவளே இன்ப நிலைக்கு ஏற்ற பாத்திரம் என்று மயங்கி ஆடையழ கிலும் கெர்வமான நடையழகிலும் சொக்கி இவளை விட்டு ஒருநாளும் பிரியமாட்டேன் என்று சுழல்படும் ஒழியாத் துயரத்தைவிட்டு நீங்க மாட்டேனோ ?

விரிவுரை

இப்பாடலில் முதல் நான்கு அடிகள் பொதுமாதரின் வர்ணனை.

தாழை மடல்கீற்றினிலெழுவிரைப்பொழில் செறிவயலூர்:
வயலூரில் நல்லமணம் வீசுகின்ற மலர்களுடன்கூடி தாழைவனம் சூழ்ந்துள்ளது.

திருஞானசம்பந்தரும் தேவாரத்தில் தாழை வனத் தின் பெருமையைப் பல இடங்களில் கூறுகின்றார்-

“ மடல்விண்ட முடத்தாழை” 2-18-4
“ மொட்டலர்ந்த தடந்தாழை” 2-41-4
“ நறவிரிவு நற்றாழை ” 1-136-6

கருத்துரை

வயலூர் வரதரே மாதர் மயலற அருள்!

Koviloor Digital Library

7

கமலத் தேகு லாவு மரிவையை
நிகர்பொற் கோல மாதர் மருள்தரு
கலகக் காம நூலை முழுதுண ரிளைஞோர்கள்

கலவிக் காசை கூர வளர்பரி
மளகற் பூர தூம கனதன
கலகத் தாலும் வானி னசையுமி னிடையாலும்;

விமலச் சோதிரூப இமகர
வதனத் தாலு நாத முதலிய
விரவுற் ருறு கால்கள் சுழலிருள் குழலாலும்

வெயிலெப் போதும் வீசு மணிவளை
அணிபொற் ருேள்க ளாலும் வடுவகிர்
விழியிற் பார்வை யாலு மினியிடர்ப் படுவேனோ;

சமரிற் பூதம் யாளி பரிபிணி
கனகத் தேர்கள் யானை யவுணர்கள்
தகரக் கூர்கொள் வேலை விடுதிற லுருவோனே

சமுகப் பேய்கள் வாழி யெனஎதிர்
புகழக் கானி லாடு பரிபுர
சரணத் தேக வீர அமைமன மகிழ்வீரா!

அமரர்க் கீச ஞன சசிபதி
மகள்மெய்த் தோயு நாத குறமகள்
அணையச் சூழு நீத காமிசை யுறுவேலா!

அருளிற் சீர்பொ யாத கணபதி
திருவக் கீசன் வாழும் வயலியின்
அழகுக் கோயில் மீதில் மருவிய பெருமாளே!

Koviloor Digital Library

பதவுரை

சமரில்—போர்க் களத்தில்

பூதம் யாளி பரி பிணி—பூதம் யாளி குதிரை இவைகள் கட்டப்பட்டுள்ள

கனகத்தேர்கள்—பொன் மயமான தேர்களும்

யானை—யானைகளும்

அவுணர்கள்—அசுரர்களும்

தகர—பொடிபட்டழிய

கூர் கொள் வேலை—கூர்மை கொண்ட வேலாயுதத்தை

விடுதிறல் உருவோனே—செலுத்திய வலிமையின் வடிவனரே!

சமுக பேய்கள்—கூட்டமான பேய்கள்

வாழி என—"வாழி" என்று

எதிர் புகழ—எதிர் நின்று புகழ

கானில் ஆடும்—சுடலைக் காட்டில் (சிவனுடன்) நடனம் செய்கின்ற

பரி புர சரணத்து—சிலம்பணிந்த திருவடிகளை உடைய

ஏக வீர—நிகரில்லாத வீரம் வாய்ந்த

அமை மனம் மகிழ் வீர—பார்வதியம்மை மனம் மகிழ்கின்ற வீர மூர்த்தியே!

அமரர்க்கு ஈசன் ஆன—தேவர்களுக்குத் தலைவனும்

சசிபதி—இந்திராணியின் கணவனுமான இந்திரனுடைய

மகள் மெய் தோயும்—மகளாகிய தேவசேனையின் உடலைத் தழுவும்

நாத—தலைவரே!

Koviloor Digital Library

குறமகள்—குறமகளாகிய வன்னியம்மை

அணைய-தேவரீரை அணைவதற்கு வேண்டிய

சூழும் நீத-சூழ்ச்சிகளைச் செய்த நீதிமானே!

கரமிசை உறுவேலா-திருக்கையில் கொண்ட வேலாயுதரே!

அருளில் சீர்-திருவருள் புரிவதில் புகழ்கொண்ட

பொயாத கணபதி-பொய்யாக் கணபதி என்னும் பெயர் கொண்ட விநாயகரும்

திருஅக்கீசன்-அழகிய "அக்னீசுரர்" என்னும் திருநாமம் கொண்ட சிவபெருமானும் வாழ்கின்ற

வயலியின்-வயலூரில் உள்ள

அழகு கோயில் மீதில்-அழகு நிறைந்த கோயிலுள்

மருவிய-எழுந்தருளியிருக்கின்ற

பெருமாளே-பெருமையில் சிறந்தவரே.

கமலத்தே-தாமரையில்

குலாவும் அரிவையை நிகர் - விளங்குகின்ற பெண்மணியாகிய இலட்சுமிக்கு ஒப்பான

பொன்கோல மாதர்-அழகிய அலங்காரமுள்ள மாதர்கள் மீது

மருள்தரு-மயக்கத்தைத் தருவதும்

கலக-கலக்கத்தைத் தருவதுமான

காம நூலை முழுது உணர்-காம சாத்திரத்தை முற்றும் உணர்ந்துள்ள

இளைஞோர்கள்-இளைஞர்களின்

கலவிக்கு ஆசைகூர-உணர்ச்சி இன்பத்துக்கு ஆசைமிக

வளர் பரிமள-நிரம்பிய நறுமணமுள்ள

கற்பூரம்-பச்சைக் கற்பூரம்

Koviloor Digital Library

தூம-அகில் புகை இவைகளை உடைய
கன தன-பருத்த கொங்கைகள் தரும்
கலகத்தாலும்-மனக் கலக்கத்தாலும்
வானின் அசையும் மின்-ஆகாயத்தில் அசைகின்ற மின்னல் போன்ற
இடையாலும்-இடையினாலும்
விமலச் சோதிரூப-களங்கம் இல்லாத ஒளிமயமான
இமகர-பனிக் கிரணம் கொண்ட சந்திரபிம்பம் ஒத்த
வதனத்தாலும்-முகத்தாலும்
நாதம் முதலிய விரவுற்று—ஓசை முதலிய கலந்து எழச் செய்யும்
ஆறுகால்கள் சுழல்-ஆறு கால்களை உடைய வண்டுகள் சூழ்ந்து சுழலும்
இருள் குழலாலும்-கரிய கூந்தலாலும்
வெயில் எப்போதும் வீசும்-ஒளியை எப்பொழுதும் வீசுகின்ற
மணி வளை அணி-ரத்தின வளைகளை அணிந்துள்ள
பொன் தோள்களாலும்-அழகிய கைகளாலும்
வடு வகிர்-மாவடுவின் கீற்றனைய
விழியில் பார்வையாலும்-கண்ணின் பார்வையாலும்
இனி இடர் படுவேனோ-இனி வருத்தம் அடைவேனோ

பொழிப்புரை

போர்க் களத்தில் பூதம் யாளி குதிரை இவைகள் கட்டப்பட்டுள்ள பொன்மயமான தேர்களும், யானைகளும், அசுரர்களும் பொடிபட்டு அழியக் கூரிய வேலாயுதத்தைச் செலுத்திய வலிய உருவினரே!

Koviloor Digital Library

கூட்டமான பேய்கள் எதிரில் நின்று "வாழி" என்று புகழ மயானத்தில் சிவமூர்த்தியுடன் நடனம் செய்கின்ற சிலம்பணிந்த திருவடிகளை உடைய தனி வீரம் வாய்ந்த பார்வதியம்மை மனம் மகிழ்கின்ற வீர மூர்த்தியே! தேவர்கள் தலைவனும் இந்திராணியின் கணவனுமான இந்திரனுடைய புதல்வி தேவசேனையின் திருமேனியைத் தழுவும் தலைவரே!

குறமகளாகிய வள்ளி தேவரீரை அணையும் பொருட்டுப் பல சூழ்ச்சிகள் செய்த நீதிமானே! வேலை ஏந்திய திருக்கரத்தை உடையவரே! திருவருள் பாலிப்பதில் புகழ் பெற்ற பொய்யாக் கணபதியும், அழகிய அக்கினீசுரரும் வாழ்கின்ற வயலூரில் அழகிய கோயிலில் வீற்றிருக்கும் பெருமையில் சிறந்தவரே! தாமரையில் விளங்கும் இலட்சுமிக்கு ஒப்பான அலங்காரமுள்ள மாதர்களின் மீது மோக மயக்கத்தைத் தருகின்றதும், கலக்கத்தைத் தருவதுமான காம சாத்திரத்தை முற்றும் உணர்ந்த இளைஞர்களின் உணர்ச்சி இன்பத்துக்கு ஆசை மிக, நறுமணமுள்ள பச்சைக் கற்பூரம், அகில் புகை மணக்கும் பெரிய கொங்கைகள் எழுப்பும் மனக்கலக்கத்தாலும், ஆகாயத்தில் அசைகின்ற மின்னல் போன்ற இடையாலும் மாசுமறு இல்லாத சந்திரபிம்பம் ஒத்த முகத்தாலும், இனிது ஒலிக்கும் வண்டுகள் சுழலும் கரிய கூந்தலாலும் எப்போதும் ஒளி வீசுகின்ற ரத்தின வளைகளை அணிந்துள்ள அழகிய கைகளாலும், மாவடுவை ஒத்த கண்களின் பார்வையாலும் அடியேன் இனி வருத்தம் அடைவேனோ! (அடைய மாட்டேன்-)

கமலத்தே குலாவு மரிவை -

இலட்சுமி தேவி தாமரை மலரில் வாழ்பவள். குளிர்ந்த இடத்தில் வாழ்பவள் திருமகள். சீதேவியின் தமக்கை

Koviloor Digital Library

யாகிய மூதேவி வெப்பமான இடத்தில் வாழ்பவள். பொருமை முதலிய வெப்பம் நிறைந்த இடத்தில் திருமகள் வாழமாட்டாள்.

> அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
> தவ்வையைக் காட்டி விடும்.
>
> — திருக்குறள்

பொருமையாகிய வெப்பமுள்ள இடத்திலிருந்து திருமகள் விலகி, தன் தமக்கையாகிய மூதேவியை இருக்குமாறு செய்வாள்.

ஆதலால் திருமகள் கருணையினுல் பொன்னும் பொருளும் பெற்று வாழ விரும்புபவர்கள் பொருமை என்ற தீக்குணத்திற்கு இடம் தரக்கூடாது.

காமநூலை முழுதுணர் இளைஞோர்கள் :

ஞான நூல்கள் மனிதனுக்கு உய்வுதரும். காமநூல்கள் மயக்கத்தையும் கலக்கத்தையும், அழிவையும் தரும். இளைஞர்கள் காமநூலைக் கற்று அவமே அழிகின்ருர்கள்.

> "சுரதக்ரியை யால்விளங்கு மதனூலே
> சுருதியெனவே நினைந்து"
>
> — (சுருளளக) திருப்புகழ்

சமரிற் பூதம் யாளி பரிபிணி கனகத் தேர்கள்;-

அசுரர்கள் பொன்மயமான தேர்களில் பூதங்களையும், யாளிகளையும், குதிரைகளையும் பூட்டியிருப்பார்கள். அதனுல் அத்தேர்கள் விரைந்து செல்லும் வேகத்தை உடையவை.

Koviloor Digital Library

சமுகப்பேய்கள் வாழியென:-

பசித்து முசித்து வாடிவருந்தியிருந்த பேய்கள் போர் மூண்டதினுல் அசுரர்களின் உடல் தசை நமக்குக் கிடைக்கும் என்று எண்ணி அசுரர்களை வதைக்கும் முருகப்பெருமானை "வாழி!" "வாழி!" என்று வாழ்த்துகின்றனவாம்.

கானிலாடு பரிபுர சரணத் தேக வீர அமை;—

உமாதேவியார் சர்வ சம்கார காலத்தில் எல்லாம் அழிந்த மகா மயானத்தில் சிவபெருமானுடன் நடனம் செய்கின்ருள்.

"காவியங்கண் மடவாளொடும் காட்டிடைஆடுதிர்"
'சுரிகுழல் நல்லதுடி யிடையோடு காட்டிடை ஆடுதிர்'
— சம்பந்தர் 3 - 124 - 6,5

ஏக வீர அமை:— ஏக வீரம் தனிப்பெரும் வீரம்.

அம்மை என்ற சொல் அமை என வந்தது. அம்பிகை வேதமாகிய சிலம்பை அணிந்து, அந்த வேதச் சிலம்பு வேதமந்திரங்களை ஒலிக்க, பம்பரம் போல் நடனம் புரிவாள்.

' பம்பரமே போல ஆடிய சங்கரி"
— (கொம்பனையார்) திருப்புகழ்

குறமகள் அணையச் சூழ நீத:—

வள்ளியாகிய ஜீவான்மா தன்னை அடையும் பொருட்டு வேடனுகியும், வேங்கை மரமாகியும், வளையற்காரனுகியும் கிழவனுகியும் பல மாயைகள் செய்து முருகப்பெருமான் ஆட்கொண்டருளினுர்,

சோதித்து ஆட்கொண்டருளுவதே இறைவனுடைய நீதியாகும்.

Koviloor Digital Library

திருநீலகண்ட நாயனர், சிறுத்தொண்ட நாயனர், அமர்நீதி நாயனர், அரிவாட்டாய நாயனர் முதலிய அடியார்களைச் சிவபெருமான் வாதித்துச் சோதித்து அவர்களின் திருத்தொண்டினை உலகறியச் செய்து ஆட்கொண்டருளிய அருள் திறத்தை உன்னுக.

அருளிற் சீர்பொ யாத கணபதி
திருவக்கீசன் வாழும் வயலி:

வயலூரில் எழுந்தருளியுள்ள விநாயகரின் திருப்பெயர் "பொய்யாக் கணபதி'.

சிவபெருமானுடைய திருநாமம் அக்கினீசுரர்'. அருணகிரிநாதருக்குத்திருவண்ணுமலையில் திருப்புகழ்பாடும் வன்மையைத் தந்தருளினர் அவர். "முத்தைத்தரு" என்று இறைவன் அடியெடுத்துக் கொடுக்க அத்திருப்புகழைப் பாடி மீண்டும் நிஷ்டானுபூதியில் நிலைத்து விட்டார்.

முருகப்பெருமான் அருணகிரிநாதரை 'வயலூருக்கு வருக' என்று பணித்தருளினர்.

அருணகிரிநாதர் திருவண்ணுமலையிலிருந்து திருச்சிராப்பள்ளிக்கருகிலுள்ள வயலூரை அடைந்து சக்தி தீர்த்தத்தில் மூழ்கி வயலூர் வள்ளல் பெருமானை வழிபட்டார். வயலூர் முருகன் அவருக்கு மயிலின்மீது காட்சி கொடுத்து "மயிலையும், கடப்ப மலர் மாலையையும், வேலாயுதத்தையும், கோழிக் கொடியையும், திருவடியையும், பன்னிரண்டு தோள்களையும், வயலூரையும் இந்த ஏழையையும் வைத்துத் திருப்புகழ் பாடு" என்று திருப்புகழ் பாடும் திறத்தை அருள் புரிந்தார்.

பொய்யாக் கணபதியை வணங்கி அவருடைய அருளையும் பெற்று அருணகிரிநாதர் வயலூரிலிருந்து பலப்

Koviloor Digital Library

பல திருப்புகழ்ப் பாடல்களைப் பாடி கிழக்கு, மேற்கு, தெற்கு வடக்குத் திசையிலுள்ள அடியார்களுக்கு அத்திருப்புகழ் ஏடுகளை அனுப்பி அருளினர்.

நான்கு திசையிலுமுள்ள நல்லடியார்கள் தேன்மதுர மாகிய திருப்புகழைப் படித்து வியந்து, நயந்து "அற்புதம் அற்புதம்" என்று கூறித்துள்ளி உவகைக் கூத்தாடினர்கள். இதனை அடியில்வரும் அருணகிரிநாதருடைய வாக்குகளா கிய அகச்சான்றுகளால் அறிக.

"பக்கரைவி சித்ரமணி பொற்கலணை யிட்டநடை
பட்சியெனு முக்ர துர கமுநீபப்
பக்குவம லர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய
பட்டுருவ விட்டருள்கை வடிவேலும்
திக்கதும திக்கவரு குக்குடமு ரட்சைதரு
சிற்றடியு முற்றியப னிருதோளும்
செய்ப்பதியும் வைத்துயர்தி ருப்புகழ்விருப்பமொடு
செப்பெனஎ னக்கருள்கை மறவேனே"
— (பக்கரை) திருப்புகழ்

"பாதபங்கய முற்றிட உட்கொண்
டோதுகின்ற திருப்புகழ் நித்தம்
பாடுமென்பது செய்ப்பதியில் தந்தவனீயே"
திருப்புகழ்

"பக்தக ணப்ரிய நிர்த்தநடித்திடு
பட்சிந டத்திடு குகபூர்வ
பச்சிமதெட்சிண உத்தர திக்குள
பக்தர்கள் அற்புதம் எனவோத
சித்ரக வித்துவ சத்தமிகுத்ததி
ருப்புகழைச் சிறிதடியேனும்
செப்பெனவைத் துலகிற் பரவத்தெரி
சித்தஅ நுக்ரஹ மறவேனே" — திருப்புகழ்.

கருத்துரை

வயலூர் முருகா! மாதர் மயக்கற அருள் புரிவாய்.

Koviloor Digital Library

8

கமையற்ற சீர்கேடர் வெகுதர்க்க கோலாலர்
கலையுற்று மாயாது மந்த்ரவாதக்

கடைகெட்ட ஆபாத முறுசித்ர கோமாளர்
கருமத்தின் மாயாது கொண்டுபூணுஞ்

சமயத்த ராசார நியமத்தின் மாயாது
சகளத்து ளேநாளு நண்புளோர்செய்

சரியைக்ரி யாயோக நியமத்தின் மாயாது
சலனப்ப டாஞானம் வந்துதாராய்

அமரிற்சு ராபான திதிபுத்ர ராலோக
மதுதுக்க மேயாக மிஞ்சிடாமல்

அடமிட்ட வேல்வீர திருவொற்றி யூர்நாதர்
அருணச்சி காநீல கண்டபார

மமபட்ச மாதேவ ரருமைச்சு வாமீநி
மலநிட்க ளாமாயை விந்துநாதம்

வரசத்தி மேலான பரவத்து வேமேலை
வயலிக்குள் வாழ்தேவர் தம்பிரானே

பதவுரை

அமரில்-போர்க்களத்தில்

சுராபான-கள் குடியரான

திதிபுத்ரர்-திதியின் புதல்வர்களாகிய அசுரர்களின்

ஆலோகம்-அறியாமையானது

அதுதுக்கமேயாக மிஞ்சிடாமல்-உலகுக்குத் துன்பத்தையே
விளைத்து வளராதபடி

Koviloor Digital Library

அடம் இட்ட வேல்வீர-செலுத்தப்பட்ட வேலைஏந்திய வீர மூர்த்தியே.

திரு ஒற்றியூர் நாதர்-திருவொற்றியூரில் வாழும் தலைவரும்

அருண சிகா-சிவந்த சடையையும்

நீலகண்ட-நீலகண்டத்தையும்

பார-பெருமையையும் கொண்டவரும்

மமபட்ச-என்மீது அன்புள்ளவருமான

மாதேவர்-சிவபிரானுக்கு

அருமை சுவாமி-அருமையாக வாய்த்த குருசுவாமியே

நிமல-மலம் இல்லாதவரே

நிட்களா-உருவம் இல்லாதவரே

மாயை-மாயை

விந்துநாத-விந்து நாதம்

வரசக்தி-மேலான சக்தி இவைகளுக்கு

மேலான-மேற்பட்டு விளங்கும்

பரவத்துவே-பரம்பொருளே

மேலை வயலிக்குள் வாழ்-மேலை வயலூரில் வாழ்கின்ற

தேவர் தம்பிரானே-தேவர்கள் தொழுகின்ற தனிப்பெருந் தலைவரே

கமை அற்ற-பொறுமை இல்லாத

சீர்கேடர்-சீர்கெட்டவர்களும்

வெகுதர்க்க-நிரம்பத்தருக்கம் பேசும்

கோலாலர்-ஆடம்பரமுடையவர்களான மனிதர்களால்

களை உற்றுமாயாது—அடியேன் சோர்வுற்று மடியாமலும்

மந்த்ரவாத—மந்திரவாதம் செய்யும்

கடைகெட்ட—மிக இழிந்த நிலையில் உள்ள

Koviloor Digital Library

ஆபாதம் உறு—தாழ்மை உடைய

சித்ர கோமாளர்—அலங்காரமாகப் பொய்யுரை புகன்று கொண்டாட்டம் போடுகின்றவர்களின்

கருமத்தில் மாயாது—செய்கைகளில் சிக்கி மடியாமலும்

கொண்டு பூணும்—மேற்கொண்டு ஒழுகும்

சமயத்தர்—அந்தந்தச் சமயங்களுக்குரிய

ஆசார நியமத்தில்—கட்டுப்பாடுகளில் உட்பட்டு

மாயாது—மடியாமலும்

சகளத்துளே—உருவ வழிபாடு செய்து

நாளும் நண்புளோர் செய்—நாள்தோறும் அன்பு வைத்துள்ளோர்கள் புரியும்

சரியை க்ரியா யோகநியமத்தில்—சரியை, கிரியை, யோகம் எனப்படும் ஒழுக்கங்களை மேற்கொண்டு

மாயாது—மடியாமலும்

சலனப்படா—எவ்விதச் சஞ்சலங்களுக்கும் உட்படாத

ஞானம் வந்து தாராய்—எனக்கு முன் வந்து ஞானத்தைத் தந்தருளுவீராக.

பொழிப்புரை

போர்க்களத்தில் மதுவை அருந்தும் திதி என்பவளின் புதல்வர்களாகிய அசுரர்களின் அறியாமை உலகுக்கு துக்கத்தையே தரும் தன்மையின் வளர்ச்சி அழியச் செலுத்தப்பட்ட வேலை ஏந்திய வீரமூர்த்தியே! திருவொற்றியூர் என்ற தலத்தில் எழுந்தருளிய தலைவரும் சிவந்த சடையையும், நீலகண்டத்தையும், பெருமையையும் கொண்டவரும் என்மீது அன்புள்ளவருமான சிவபெருமானுக்கு அருமை

Koviloor Digital Library

யாக வாய்ந்த குரு சுவாமியே! மாசில்லாதவரே! உருவம் இல்லாதவரே! மாயை, விந்து, நாதம், மேலான சக்தி இவைகளுக்கு அப்பாற்பட்ட பரம்பொருளே! மேலை வயலூரில் எழுந்தருளிய தேவர்கள் போற்றும் தனிப்பெருந் தலைவரே! பொறுமையில்லாத சீர் கெட்டவர்களும் நிரம்பத் தருக்கங்கள் பேசும் ஆடம்பரவாதிகளால் அடியேன் களைப் புற்று மடியாமலும், மந்திரவாதம் செய்யும் மிகவும் தாழ்ந்த பொய்யுரை புகலும் கோமாளர்களின் செய்கைகளில் சிக்கி மடியாமலும், சமயவாதிகள் மேற்கொண்டு ஒழுகும் ஆசார நியமங்களில் கட்டுப்பட்டு மடியாமலும், உருவ வழிபாடு செய்து நாள்தோறும் அன்பு வைத்துள்ளோர்கள் புரியும் சரியை கிரியை யோகம் எனப்படும் ஒழுக்கங்களை மேற் கொண்டு மடியாமலும் சஞ்சலங்களுக்கு உட்படாத ஞானத்தை எனக்கு முன்வந்து தந்தருளுவீர்.

விரிவுரை

க்ஷமையற்ற சீர்கேடர்.—

கமை - பொறுமை

பொறுமை பெருமை தரும். பொறுத்தவர் பூமியாள்வார் என்பது பழமொழி. மனிதனுக்குப் பொறுமையே எல்லா நலன்களையும தரும். பல நாள் பட்டினி கிடந்து விரதம் இருப்பவர்கள் பெரியராவார்கள். ஆனால் பிறர் சொல்லும் கடுஞ்சொல்லைக் கேட்டுப் பொறுத்துக்கொள்ளும் தன்மை உடையாருக்குப் பின் இருப்பர்!

உண்ணாது நோற்பார் பெரியர் பிறர் சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்

— திருக்குறள்

பிறர் புரியும் குற்றங்களை மன்னிப்பது மனிதத் தன்மை. அப்பொழுதே மறந்துவிடுவது தெய்வத் தன்மை.

Koviloor Digital Library

தன் மனைவியை அரசவையில் நிறுத்தி ஆடையை அவிழ்ப்பதைக் கண்டும் அஜாத சத்துருவாகிய யுதிஷ்டிரர் பொறுமையுடன் இருந்தார். அதனால் அவரைக் கோயில் கட்டிக் கும்பிட்டார்கள். தருமராஜா கோயில் எங்கும் நிறைந்திருப்பதை இன்றும் காணலாம்.

திருவள்ளுவர் பொறையுடைமை என்ற ஓர் அதிகாரமே வகுத்து மக்களுக்குப் பொறுமையின் பெருமையை உபதேசிக்கின்றார்.

வெகு தர்க்க கோலாலர் :

சிலர் எதற்கெடுத்தாலும் தருக்கம் பேசித்தடுமாறுவர். தருக்க நூல்கள் படித்து அதனை நல்வழியில் பயன்படுத்தாமல் குதர்க்கம் பேசிக் குன்றுவர்.

களையுற்று மாயாது :

பொறுமை இல்லாத புல்லர்களாலும், தருக்க வாதிகளாலும் களைப்புற்று மாயக்கூடாது.

மந்த்ரவாத கடைகெட்ட ஆபாதமுறு சித்ர கோமாளர் கருமத்தின் மாயாது :

சிலர் மந்திரங்களைக் கற்று, அதனை நல்வழியில் பயன் படுத்தாமல், பிறருக்குக் கேடு செய்து, பொய்யும் புனை சுருட்டும் பேசி அழகாகவும், ஆடம்பரமாகவும் உலகை மயக்குவர். அந்த ஜெகஜ்ஜாலப் புரட்டர்களின் மாய வலைக்குள் சிக்கி மடியக்கூடாது.

சமயத்தராசார நியமத்தின் மாயாது :

சமய நெறியிலே நிற்பவர் அந்தந்தச் சமயத்தின் ஆசார நெறிகளைப் பின்பற்றி நிற்பர். ஆனால் அந்த ஆசார நெறிகளில் அன்பு என்ற உயிரோட்டம் இருக்க

Koviloor Digital Library

வேண்டும். அன்பின் மணம் கமழாத வறட்டு ஆசாரம் பயன்படாது.

"வீடு ஞானமும் வேண்டுதிரேல் விரதங்களால் வாடிஞான மென்ளுவது"

— சம்பந்தர் 2-2-11

என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டு
பொன்போல் மேனியைப் பொறிய வறுப்பினும்
அன்போ டுருகி அகம்குழை வார்க்கன்றி
என்போன் மணியை எய்தவொண் ணுதே

— திருமந்திரம்

கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்
ஓங்கு மாகடல் ஓதநீ ராடிலென்
எங்கும் ஈசனெ ஞுதவர்க் கில்லையே

— அப்பர்

"காடே திரிந்தென்ன? காற்றே புசித்தென்ன? கந்தை சுற்றி
ஓடே எடுத்தென்ன? உள்ளன்பிலாதவர்"

— பட்டினத்தார்

இறைவனை அடைவதற்கு எளிதான வழி அன்பு நெறி ஒன்றே ஆகும். பரம குருமூர்த்தியாகிய அருணகிரி நாதர் அன்பு நெறியைத்தான் உலகுக்கு உபதேசிக்கின்ருர்.

ஒரு ஊருக்குப் போகவேண்டுமாளுல் வளைந்து வளைந்து போகின்ற வழியோ கல்லும் முள்ளும் நிறைந்த காட்டு வழியோ கூடாது. வெய்யில் வாட்டும் பாலைவன வழியோ சுகப்படாது. சோலை வனமாகவும். இனிய நறுமணம் கமழும் குளிர்ந்த

Koviloor Digital Library

நிழல் தரும் வழி சுகமானது. மூச்சைப் பிடித்து முரட்டுத் தனமாக அடக்கி விழி பிதுங்க உடம்பை வருத்தும் ஹட யோகம் முதலிய நெறிகளைக் கண்டித்துச் சுலபமான அன்பு நெறியை உலகுக்கு உபதேசிக்கின்றார்.

காட்டிற் குறத்தி பிரான்பதத் தேகருத்தைப்புகட்டின்
வீட்டிற் புகுதன் மிகவெளிதேவிழி நாசிவைத்து
மூட்டிக் கபாலமூலாதார நேரண்ட மூச்சையுள்ளே
ஓட்டிப் பிடித்தெங்கு மோடாமற் சாதிக்கும் யோகி
களே

— கந்தரநுபூதி

ஆராதன ராடம் பரத்து மாருதுச வாலம்பனத்து
மாவாகன மாமதிரத்து மடலாலும்
ஆரூர்தெச மாமண்டபத்தும் வேதாகம மோதுந்தலத்து
மாமாறெரி தாமிந் தனத்து மருளாதே.

சகளத்துளே நாளு நண்புளோர் செய்
சரியை க்ரியா யோக நியமத்தின்மாயாது:

இந்த இடத்தில் பரமஞான குருநாதராகிய அருணகிரிநாதர் சரியை, கிரியை, யோகம் என்பவை களையும்புறக்கணிக்கின்றார். முத்திக்குக் காரணம் ஞானம் ஒன்றேயாகும்.

பத்திநெறி நிலைநின்றும் நவகண்ட பூமிப்
பரப்பைவல மாகவந்தும்
பரவையிடை மூழ்கியும் நதிகளிடை மூழ்கியும்
பசிதாக மின்றியெழுநா
மத்தியிடை நின்றும்உதிர் சருகுபுனல் வாயுவினை
வன்பசி தனக்கடைத்து
மௌனத் திருந்தும்உயர் மலைநுழைவு புக்கியும்
மன்னுதச நாடிமுற்றும்

Koviloor Digital Library

சுத்திசெய் தும்மூல ப்ராணனே டங்கியைச்
சோமவட் டத்தடைத்தும்
சொல்லரிய அமுதுண்டும் அற்பவுடல் கற்பங்கள்
தோறும்நிலை நிற்கவீறு
சித்திசெய் துஞ்ஞான மலதுகதி கூடுமோ
சித்தாந்த முத்திமுதலே!
சிரகிரி விளங்கவரு தட்சிணு மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே!

— தாயுமானவர்

சின்மயானந்தகுரு 11

ஞானமாகிய மாடிமேல் ஏறுவதற்குச் சரியை கிரியை யோகம் என்பவைகள் ஏணிப்படிகளாகும். மாடிமேல் ஏறுவதற்கு ஏணி துணை செய்யும். அதுபோல் ஞானத்தை அடைவதற்கு சரியை கிரியை யோகங்கள் துணை செய்யும் மாடிமேல் ஏறுகின்றவன் ஏணி மீதே நின்றுவிடக் கூடாது. அதுபோல் ஞானத்தை அடைய முயல்கின்றவன் சரியை கிரியை யோகங்களோடு நின்றுவிடக் கூடாது.

சரியை — புறப்பூசை

கிரியை — அகப்பூசையும், புறப்பூசையுமாகும்.

யோகம் — அகப் பூசை

இவைகளெல்லாம் ஞானத்தை அடைவிக்கும். ஞானம் தான் முடிந்த முடிவு. ஆதலால் சரியை கிரியை முதலிய படிகளிலேயே நின்றுவிடக் கூடாது. இதனுல் சுவாமிகள் இங்கு சரியை கிரியைகளைப் புறக்கணிக்கின்றுர்.

Koviloor Digital Library

சரியையா ளர்க்குமக் கிரியையா ளர்க்கு நற்
சகலயோ கர்க்குமெட் டரிதாய
சமயபே தந்தினுங் கணுகொணு மெய்ப்பொருட்
டருபரா சத்தியிற் பரமான
துரியமே லற்புதப் பரமஞானம்

— (சரியையாளர்க்கு) திருப்புகழ்.

சலனப்படா ஞானம் வந்து தாராய்:—

ஒருபோதும் எதனுலும் அசைவில்லாத ஞானத்தை அருணகிரிநாதர் முருகனிடம் வரமாகக் கேட்கின்றார்.

காற்றுக்கும் மழைக்கும் மரங்கள் அசைந்து ஆடும். மலை ஆடாது அசையாது. அதுபோல் உலக மாயையால் ஞானம் சலனப்படாது.

அமரில் சுரா பான திதிபுத்ரர்:

காசிப முனிவருக்கு அதிதியிடம் பிறந்தவர்கள் ஆதித்தன் முதலிய அமரர்கள்.

திதியின் வயிற்றில் பிறந்தவர்கள் தைத்தியர்கள்.
தனுவின் வயிற்றில் பிறந்தவர்கள் தானவர்கள்.

தைத்தியர்கள் கள் குடித்து மதி மயங்கி உலகுக்கு இடுக்கண் செய்வார்கள்.

ஆலோகம் :

அலோகம் என்ற சொல்லின் விகாரம்.
அலோகம்-அறியாமை.

அடமிட்ட வேல்வீரா :

அடம் இட்ட சஞ்சாரம் செய்த வேல்.
அடம்–பிடிவாதம். பகைவரைக் கொல்லுவதில் பிடிவாதமுடைய வேல் என்றும் கூறலாம்.

Koviloor Digital Library

திருவொற்றியூர் நாதர்:

திருவொற்றியூர் சிறந்த பாடல் பெற்ற சிவஸ்தலம். பட்டினத்துச்சுவாமிகள் முத்தி பெற்ற தலம்.

"திருவொற்றி யூரா திருவால வாயா
திருவாரூரா"

என்று அப்பர் பெருமான் உள்ளம் உருகிப் பாடுகின்றார்.

வாவியெல்லாம் தீர்த்தம் மணலெல்லாம் வெண்ணீறு
காவனங்க ளெல்லாம் கணநாதர் — பூவுலகில்
ஈது சிவலோகம் என்றென்றே மெய்த்தவத்தோர்
ஓதும் திருவொற்றியூர்

ஒடுவிழுந்து சீழ்பாயும் ஒன்பதுவாய்ப் புண்ணுக்கு
இடுமருந்து யான்கண்டு கொண்டேன்—
கடுவருந்தும்
தேவாதி தேவன் திருவொற்றி யூர்த்தெருவில்
போவார் அடியிற் பொடி

— பட்டினத்தார்

இத்தலத்தில் சுந்தரமூர்த்தி நாயனர் சங்கிலி நாச்சியாரைத் திருமணம் செய்து கொண்டார்.

சுவாமியின் பெயர் படம்பக்க நாதர்- எழுத்தறியும் பெருமான்.

அருணச்சிகா:—

அருணம்—சிவப்பு

சிவபெருமானுடைய சடை முடி பவளம் போல் சிவந்து விளங்கும்.

"செஞ்சடாவி" என்பது கந்தரலங்காரம்

"தேவரும் மறையும் இன்னமும் காணுச்
செஞ்சடைக் கடவுளைப் பாடி
ஏவரும் மதித்தோர் மூவரில் இருவர்
பிறந்தநா டிந்தநன் ஞடு"

— வரந்தருவார்

Koviloor Digital Library

நீலகண்ட :

உலகம் உய்யச் சிவபெருமான் சிவந்த திருமேனி யில் கண்டங்கரியராக ஆனார்.

அன்று சிவபெருமான் ஆலகால விடத்தை உண்ண வில்லையானால் மாலயனாதி வானவர்கள் மாய்ந்திருப்பார் கள். எல்லாருடைய கண்டத்தையும் தீர்த்து அருளியது நீலகண்டம்.

திருநீலகண்டத்தை நினைவார்க்கு விஷபயம் வராது.

திருச்செங்கோட்டில் திருஞானசம்பந்தர் தங்கியிருந்த பொழுது மக்களுக்கு விஷக்காய்ச்சல் உண்டாயிற்று. அப்பிணி தீரத் திருஞானசம்பந்தர் திருநீலகண்டத் திருப் பதிகம் பாடி அருளினார்.

அவ்வினைக் கிவ்வினை யாமென்று
சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும்
உந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல்
போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ
று திருநீலகண்டம்.

சிவந்த மேனியில் நீலமணி போல் கண்டம் கறுத் திருப்பது மிக்க அழகாக இருக்கும். அதனால் சிவபெரு மானுக்குச் 'சுக்ரீவன்' என்று ஒரு பெயரும் உண்டு.

"ஓம், சுக்ரீவாய நம" என்பது சிவபெருமானுடைய ஆயிரம் நாமங்களில் ஒன்று. இந்த நாமத்தை வாலியின் தம்பியாகிய வானரவேந்தன் பெற்றிருந்தான்.

Koviloor Digital Library

பார :

பாரம்-பெருமை.

வேதங்களாலும், மாலயனுதி வானவர்களாலும் புகழப்பெற்றவர்.

மமபட்ச மாதேவர் :

மம-என்பால்

பட்சம்-அன்புள்ளவர்

இதனுல் சிவபெருமானுக்கு அருணகிரியார் மீது மிகுந்த பட்சம் உண்டு என்று தெரிகின்றது.

அருணகிரியார் பல இடங்களில் சிவபெருமானை என்னுடைய தந்தை என்று கூறுகின்ருர்.

"என் தாதை சதாசிவ கோத்திரன்"

— (அந்தோ) திருப்புகழ்.

"*சீரங்கன் எனது தாதை*"

— (ஞானங்கொள்) திருப்புகழ்

நிமல:

இறைவன் அனுதிமல முத்தன். அதனுல் நிமலன் என்ருர்.

நிட்களா :

சகளம்-உருவம்

நிட்களம்-உருவமில்லாதது.

இறைவன் உருவமில்லாதவன். ஆன்மாக்களின் பொருட்டுக் கருணையினுல் திருமேனி தரித்துக்கொள்கின்ருன்.

நம்முடைய உடம்பு வினையினுல் வந்தது. இறைவனுடைய ஞானத்திருமேனி கருணையினுல் எய்தியது.

மாயை விந்துநாத வரசத்தி மேலான

Koviloor Digital Library

பரவத்துவே :

இந்தத் திருப்புகழின் அடி முருகப்பெருமானுடைய பரத்துவத்தை நன்கு விளக்குகின்றது. இறைவன் சிவம் சக்தி, நாதம், விந்து என அருஉருவத் திருமேனி நான்கு சதாசிவம்-அருவத் திருமேனி; மகேசன், உருத்திரன் மால், அயன் என உருவத்திருமேனி நான்கு.

" சிவம் சக்தி நாதம் விந்து சதாசிவன் திகழுமீசன்
உவந்தருள் உருத்திரன்தான் மாலயன் ஒன்றினொன்
றுய்ப்
பவந்தரும் அருவநாலிங்குருவநா லுபயமொன்றாய்
நவந்தரு பேதம் ஏகநாதனே நடிப்பன் என்பர் "
— சிவஞான சித்தி சுபக் 164

அருவமொரு நான்காகி உருவமொரு நான்காகி
அறையிரண்டும் மருவிஉள உருவருவ மொன்றாகி
முத்திரமும் வகுத்த ஒண்ணுப் பெருவெளிக்கும்
அப்பாலாய் உள்ளபொருள் ஈதெனவே
பெரிதும் சேயோன் ஒருவனையே புகழ்ந்த
அருள் அருணகிரி சேவடிப்போது உளத்துள்
வைப்போம்.
— பாம்பன் சுவாமிகள்.

மேலேகூறிய நவந்தரு பேதங்களாய், அப்பாலுக் கப்பாலாய் விளங்குகின்ற பரவஸ்து முருகன் என உணர்க.

கருத்துரை

வயலூர் வள்ளலே! அசைவில்லாத ஞானத்தை எனக்கு அருள் செய்க!

Koviloor Digital Library

9

குருதி கிருமிகள் சலமல மயிர்தசை
மருவு முருவமு மலமல மழகொடு
குலவு பலபணி பரிமள மறுசுவை மடைபாயல்

குளிரி லறையக மிவைகளு மலமல
மனைவி மகவனை யநுசர்கள் முறைமுறை
குனகு கிளைஞர்க ளிவர்களு மலமல மொருநாலு

சுருதி வழிமொழி சிவகலை யலதினி
யுலக கலைகளு மலமல மிலகிய
தொலைவி லுனைநினை பலருற வலதினி
யயலார்பால்

சுழல்வ தினிதென வசமுடன் வழிபடு
முறவு மலமல மருளலை கடல்கழி
துறைசெ லறிவினை யெனதுள மகிழ்வுற
அருள்வாயே!

விருது முரசுகள் மொகுமொகு மொகுவென
முகுற ககபதி முகில்திகழ் முகடதில்
விகட இறகுகள் பறையிட அலகைகள் நடமாட

விபுத ரரகர சிவசிவ சரணென
விரவு கதிர்முதி ரிமகரன் வலம்வர
வினைகொள் நிசிசரர் பொடிபட அடல்செயும்
வடிவேலா

மருது நெறுநெறு நெறுவென முறிபட
வுருளு முரலொடு தவழரி மருகசெ
வனச மலர்சுனை புலிநுழை முழையுடை
யவிராலி

Koviloor Digital Library

மலையி லுறைகிற அறுமுக குருபர
கயலு மயிலையு மகரமு முகள்செநெல்
வயலி நகரியி லிறையவ அருள்தரு
பெருமாளே!

பதவுரை

விருதுமுரசுகள்-வெற்றிச் சின்ன முரசுகள்

மொகு மொகு மொகு என முகுற-மொகுமொகு மொகு என்று பேரொலி செய்ய

ககபதி-பறவை அரசனாகிய கருடன்

முகில் திகழ் முகடு அதில்-மேகம் விளங்கும் ஆகாயத்தில்

விகட இறகுகள் பறையிட-அகன்ற தனது சிறகுகளைக் கொண்டு வட்டமிட

அலகைகள் நடமாட-பேய்கள் மகிழ்ச்சியினால் நடனம் செய்ய விபுதர்-தேவர்கள்

அரகர சிவசிவ சரண் என-ஹரஹர சிவசிவ சரணம் என்று துதி செய்ய

விரவு கதிர்-பொருந்திய சூரியனும்

முதிர் இமகரன்-குளிர் நிறைந்த கிரணங்களை உடைய சந்திரனும

வலம் வர-வலமாக வரவும்

வினைகொள் நிசிசரர்-தீச்செயலைக் கொண்ட அசுரர்கள்

பொடிபட அடல்செயும்-பொடிப்பட்டு அழியப் போர் செய்த

வடிவேலா-கூரிய வேலை உடையவரே

மருது-மருத மரங்கள்

நெறு நெறு நெறு என-நெறு நெறு நெறு என்று

முறிபட-முறிபடும்படி

உருளும் உரலொடு தவழ்-உருண்டு சென்ற உரலுடனே தவழ்ந்து சென்ற

அரி மருக-கண்ணபிரானுடைய மருகரே

செவ்வனசமலர்-செந்தாமரை மலர்கின்ற

சுனை-சுனையும்

புலிநுழை முழைஉடை-புலி நுழையும் குகையும் உடைய

விராலிமலையில் உறைகிற-விராலி மலையில் வீற்றிருக்கின்ற

அறுமுக-ஆறுமுகக் கடவுளே!

குருபர-சிறந்த குருநாதரே !

கயலும்-கயல் மீன்களும்

மயிலையும்-மயிலை என்ற மீன்களும்

மகரமும் உகள்-மகர மீன்களும் தாவித் திரியும்

செநல்-செந்நெல் வயல்களைக்கொண்ட

வயலி நகரியில்-வயலூர் என்ற திருப்பதியில் வாழுகின்ற

இறையவ-இறைவரே!

அருள்தரு-திருவருள் பாலிக்கும்

பெருமாளே-பெருமையில் மிகுந்தவரே!

குருதி-உதிரம்

கிருமிகள்-புழுக்கள்

சலமலம்-சலம் மலம்

மயிர் தசை-மயிர் தசை

மருவும்-இவைகள் பொருந்திய

உருவமும் அலம் அலம்-உருவமாகிய இவ்வுடல் எடுத்தது போதும் போதும்

Koviloor Digital Library

அழகொடு குலவும்-அழகொடு விளங்கும்

பலபணி-பலவிதமான ஆபரணங்களும்

பரிமளம்-நறுமணமுள்ளனவும்

அறுசுவைமடை-ஆறுவிதமான சுவைகள் கூடியுள்ள சோறு

பாயல்-படுக்கை

குளிரில் அறை அகம்-குளிருக்கு அடக்கமான அறைகளை உடைய வீடு

இவைகளும் அலம் அலம்-இந்தப் பொருள்களெல்லாம் போதும் போதும்

மனைவி-மனைவி

மகவு-குழந்தைகள்

அனை-தாயார்

அனுசர்கள்-உடன் பிறந்தவர்கள்

முறை முறை குனகு:உறவுமுறை கூறிக் கொஞ்சிக் குலவும்

கிளைஞர்கள்-சுற்றத்தினர்

இவர்களும் அலம் அலம்-இவர்களும் போதும் போதும்

ஒருநாலு சுருதி-ஒப்பற்ற நான்கு வேதங்களின்

வழிமொழி சிவகலை அலது-மார்க்கங்களை எடுத்துக்கூறும் சைவ சித்தாந்த நூல்கள் தவிர

இனி உலககலைகளும் அலம் அலம்-வேறு உலக சம்பந்தமான நூல்களை ஓதுதலும் போதும் போதும்.

இலகிய-விளங்கி நிற்பவரும்

தொலைவு இல்-அழிவில்லாதவருமான

உனை நினைபவர் உறவு அலது-தேவரீரை நினைப்பவருடைய நட்புத் தவிர

Koviloor Digital Library

இனி அயலார் பால்-இனி அயலார்களிடத்தே

சுழல்வது-சுற்றித் திரிவது

இனிது என-நல்லதென்று

வசமுடன் வழிபடும் உறவும்-அவர்கள் வசப்பட்டு அவர்களைப் பின்பற்றி வழிபடுகின்ற நட்பும்

அலம் அலம்-போதும் போதும்

அருள்அலை கடல்கழி-உமது திருவருள் அலைகள் வீசும் கடலின் கால்களின்

துறைசெல் அறிவினை-வழியில் செல்லுகின்ற அறிவை

எனது உளம் மகிழ்வுற-என்னுடைய உள்ளம் மகிழ்ச்சிபெற

அருள்வாயே-அருள் புரிவீராக!

பொழிப்புரை

வெற்றிச்சின்ன முரசுகள் மொகு மொகு மொகு என்று பேரொலி செய்யவும், பறவை அரசனாகிய கருடன் மேகம் தவழும் ஆகாயத்தில் அகன்ற தனது சிறகுகளைக் கொண்டு வட்டமிடவும், பேய்கள் மகிழ்ச்சியினால் கூத்தாடவும், தேவர்கள் ஹரஹர சிவசிவ சரணம் என்று துதி செய்யவும், பொருந்திய சூரியனும், குளிர்ந்த கிரணங்களை உடைய சந்திரனும் வலம் வரவும், தீச்செயல் புரியும் அசுரர்கள் பொடிபட்டு அழியவும் போர் செய்த கூரிய வேலாயுதரே! நெறு நெறு நெறு என்று மருதமரங்கள் முறிபடும்படி உருண்டு சென்ற உரலுடனே தவழ்ந்து சென்ற கண்ணபிரானின் திரு மருகரே! செந்தாமரை மலர்கின்ற சுனையும், புலி நுழையும் குகையுமுடைய விராலி மலையில் வீற்றிருக்கின்ற ஆறுமுகக் கடவுளே! குரு மூர்த்தியே! கயல் மீன்களும், மயிலைமீன்களும், மகரமீன்களும்,

Koviloor Digital Library

தாவித்திரியும் செந்நெல் வயல்கள் சூழ்ந்த வயலூரில் வாழ்கின்ற இறைவரே! திருவருள் புரியும் பெருமையில் மிகுந்தவரே! உதிரம், புழுக்கள், சலம், மலம், மயிர், மாமிசம் இவைபொருந்திய உருவமாம் இவ்வுடல் எடுத்தது போதும் போதும். அழகிய பலவிதமான ஆபரணங்களும், நறுமணப்பொருள்களும் அறுசுவைகளுடன் கூடிய உணவு, படுக்கை, குளிருக்கு அடக்கமான அறைகளை உடைய வீடு, இவைகளும் போதும் போதும். மனைவி, மக்கள், தாயார், உடன் பிறந்தார் உறவு முறை கூறிக் கொஞ்சிக் குலவும் சுற்றத்தினர் இவர்களும் போதும் போதும் நான்கு வேதங்களின் மார்க்கங்களை எடுத்துக் கூறும் சைவசித்தாந்த நூல்கள் தவிர வேறு உலக சம்பந்தமான நூல்களைப் படித்தலும் போதும் போதும். விளங்கி நிற்பவரும், அழிவில்லாதவருமாகிய தேவரீரை நினைப்பவருடைய நட்புத் தவிர இனி அயலாரிடத்தே சுற்றித் திரிவது நல்லதென்று அவர்கள் வசப்பட்டு, அவர்களைப் பின்பற்றி வழிபடுகின்ற நட்பும் போதும் போதும். உமது திருவருள் அலைகள் வீசும் கடலின் கால்களின் துறைவழியில் செல்லும் அறிவை என்னுடைய உள்ளம் மகிழ்ச்சி பெற அருள் புரிவீராக!

விரிவுரை

இந்தத் திருப்புகழில் மனிதனுக்குப் போதும் என்ற புத்தி வரவேண்டுமென்று அருணகிரிநாதர் உபதேசிக்கின்றார்.

நெருப்பில் கட்டைகளை இட இட அந்த நெருப்பு கொழுந்துவிட்டு எரியும். கட்டை இட இட நெருப்புக்குப் போதுமென்ற திருப்தி ஏற்படுவதில்லை. அதுபோல் மனிதனுக்கும் எத்தனை சுகபோகங்கள் இருந்தாலும் மேற்

Koviloor Digital Library

கொண்டு உயர்ந்த சுகங்கள் வேண்டுமென்று ஆசையினால் அல்லல் படுகின்றான்.

ஆசைக்கு ஓர் அளவே இல்லை. அகில உலகங்களெல்லாம் தன் ஆட்சியில் அடங்கினாலும் கடல்மீதிலும் தன் ஆட்சி செல்லவேண்டுமென்று ஆசைப்படுகின்றான்.

குபேரனைப் போன்ற செல்வத்துடன் கூடிச் சங்க நிதி, பதும நிதி என்ற இருநிதிகளுடன் வாழ்ந்தாலும், இரும்பைத் தங்கமாக்கும் ரசவாத வித்தைக்கு அலைகின்றான்.

நீண்ட காலம் வாழ்ந்தவர்களும் காயகல்பம் தேடி அல்லல் உறுகின்றார்கள். ஆனால் நன்றாக ஆராய்ந்து பார்த்தால் பசி தீர உண்பதும், உறங்குவதுமன்றி வேறு ஒன்றுமில்லை.

ஆசைக்கோர் அளவில்லை அகிலமெல்லாங் கட்டி
ஆளினும் கடல்மீதிலே
ஆணை செலவே நினைவர் அளகேசன் நிகராக
அம்பொன்மிக வைத்தபேரும்
நேசித்து ரசவாத வித்தைக்கு அலைந்திடுவர்
நெடுநாள் இருந்தபேரும்
நிலையாக வேயினும் காயகற் பம்தேடி
நெஞ்சுபுண் ணாவர்எல் லாம்
யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்
உறங்குவது மாகமுடியும்
உள்ளதே போதும்நான் நானெனக்குளறியே
ஒன்றைவிட்டு ஒன்றுபற்றிப்

Koviloor Digital Library

பாசக்க டற்குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையைஅருள் வாய்

பார்க்குமிடம் எங்கும்ஒரு நீக்கமறநிறைகின்ற
பரிபூர ஞானந்தமே.

— தாயுமானர்.

குருதி கிருமிகள் சலமல மயிர் தசை
மருவும் உருவமும் அலம் அலம் :—

இந்த உடம்பு உதிரம், புழுக்கள், மலமூத்திரம், உரோமம், சதை இவைகளாலாகிய அசுத்தம் உடையது. ஆதலால் இந்த உடம்போடு வாழ்ந்தது போதும் போதும்.

அறிவில்லாதவர்கள் இந்த உடம்போடு வாழ்வதை விரும்புவார்கள். அறிஞர்கள் இந்த உடம்போடு வாழ்வதை விரும்ப மாட்டார்கள்.

"வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப ஆற்றேன்"

— திருவாசகம்

தோலெ லும்பு சீந ரம்பு பீளைதுன்று கோழை
பொங்கு

சோரி பிண்ட மாயுருண்டு வடிவான

தூல பங்க காயம் வம்பி லேசு மந்து நான்மெலிந்து
சோரு மிந்த நோய கன்று துயராற

— திருப்புகழ்

புன்புலால் உடம்பின் அசுத்தமும் அதனில்
பொருந்திநான் இருக்கின்ற புணர்ப்பும்

என்பொலா மணியே எண்ணிநான் எண்ணி
இளைத்தனன்.

— திருவருட்பா

Koviloor Digital Library

அழகொடு குலவு பலபணி பரிமளம் அறுசுவை
மடைபாயல் குளிரில் அறையகம் இவைகளும்
அலம் அலம் :-

விலை உயர்ந்த ஆபரணங்களும், கஸ்தூரி, ஜவ்வாது, புனுகு முதலிய வாசனைப் பண்டங்களும், பஞ்சணை, படுக்கையும், மாடமாளிகையும் போதும் போதும்.

மனைவி மகவனை யநுசர்கள் முறைமுறை
குனகு கிளைஞர்கள் இவர்களும் அலம் அலம் :-

இனிய மனைவி, உயிரனைய மக்கள், பெற்று வளர்த்த தாய், உடன் பிறந்தவர், உறவுமுறை கூறிக் கொஞ்சிக் குலவும் சுற்றத்தார்கள், இவர்களுடைய தொடர்பும் போதும் போதும்.

சுருதி வழிமொழி சிவகலை அலது இனி உலக
கலைகளும் அலம் அலம் :-

உய்யும் நெறியை உணர்த்துவது சிவகலை. சிவகலையல்லாத மற்ற உலகக் கலைகள் அவகலைகளாகும். உலகக் கலைகள் ஆன்ம ஈடேற்றத்தை நல்காது. ஆதலால் மற்றக் கலைகளின் தொடர்பும் போதும் போதும்.

கற்ருரையான் வேண்டேன் கற்பனவும்
இனி அமையும் '' என்பார் மணிவாசகர்

''விபரித சமய கலைகளும் அலம் அலம்''
— (அருவமிடை) திருப்புகழ்

உனை நினைபவர் அலது அயலார்..............
உறவும் அலம் அலம்:-

முருகப்பெருமானுடைய அடியவர்களே நமக்குப் பற்றுக்கோடாகும். அடியவரல்லாத மற்றவர்களின் உறவு நமக்கு நலம் தராது.

Koviloor Digital Library

"சூரிற் கிரியிற் கதிர்வே லெறிந்தவன் தொண்டர் குழாஞ்
சாரிற் கதியன்றி வேறிலை காண்."
— கந்தரலங்காரம்

முகுற

குமுற என்ற சொல் எழுத்து நிலை மாறி முகுற என்று வந்தது.

ககபதி:

ககம்-பட்சி. பட்சிராஜா கருடாழ்வார்.

மருது.........முறிபட வுருளும் உரலொடு

தவழ் அரி:

குபேரனுடைய புதல்வர்களாகிய நளகூபன், மணிக்ரீவன் இருவர்களும் துர்வாசரைக்கண்டு வணங்காமல் மரம் போல் நின்றார்கள். துர்வாசர் அவர்களை மரங்களாக நிற்குமாறு சாபமிட்டார். அவர்கள் பணிந்து மன்னிக்குமாறு வேண்டினார்கள். 'கண்ணபிரான் திருவடியால் சாபம் நீங்குமென்று அருள் புரிந்தார். அந்த இரு கந்தர்வர்களும் ஆயர்பாடியில் நந்தகோபன் அரண்மனை வாசலில் மருத மரங்களாக நின்றார்கள். உரலிலே கட்டுண்ட கண்ணபிரான் அந்த இரு மருதமரங்களுக்கிடையே சென்று திருவடியால் உதைத்தருளினார். கண்ணன் திருவடியால் கந்தர்வர்கள் சாபம் நீங்கப் பெற்றார்கள்.

அருணகிரிநாதர் திருவண்ணாமலைத் திருப்புகழிலும் இவ்வண்ணம் கூறுகின்றார்,

அணையு மழகிய கலவியும் அலமலம் உலகோரைத்
தருவை நிகரிடு புலமையும் அலமலம்
முருவு மிளமையும் மலமலம் விபரித
சமய கலைகளும் அலமலம் அலமரும் வினைவாழ்வுஞ்
சவிலவிபியெள சலனமு மலமலம்
இனியுனடியரொ டொருவழி படஇரு
தமர புரிபுர சரணமுமவுனமும் அருள்வாயே!

கருத்துரை

வயலூர் முருகா! போதும் என்ற புத்தியைத்தந்து என்னை ஆட்கொள்வாய்.

Koviloor Digital Library

10

குயிலோமொழி அயிலோவிழி கொடியோஇடை
பிடியோநடை
குறியீர்தனி செறியீரின் என்றுபாடிக்

குனகாவடி பிடியாவிதழ் கடியாநகம் வகிராவுடை
குலையாவல்கு லனையாவிரு கொங்கைமீதிற்

பயிலாமன மகிழ்மோகிர சுகசாகர மடமாதர்கள்
பகையேயென நினையாதுற நண்புகூரும்

பசுபாசமு மகிலாதிக பரிபூரண புரணகர
பதிநேருநி னருளால்மெயு ணர்ந்திடேனோ?

வெயில்வீசிய கதிராயிர வருணோதய விருணசன
விசையேழ்பரி ரவிசேயெனு மங்கராசன்

விசிகாகவ மயல்பேடிகை படுபோதுசன் னிதியானவன்
விதிதேடிய திருவாளிய ரன்குமாரா

அயலூருறை மயிலாபல கலைமானுழை புலிதோல்களை
யகிலாரம தெறிகாவிரி வண்டல்மேவும்

அதிமோகர வயலூர்மிசை திரிசேவக முருகேசுர
அமராபதி யதில்வாழ்பவர் தம்பிரானே!

பதவுரை

வெயில் வீசிய-ஒளி வீசுகின்ற
கதிர் ஆயிரம்-ஆயிரக் கணக்கான கிரணங்களை வீசுபவனும்
அருண உதய இருள் நாசன்-உதய காலத்தில் இருளை ஒழிக்க வல்லவனும்
விசை ஏழ்பரி-வேகமாகச் செல்ல வல்ல ஏழு குதிரைகளை உடையவனுமான

Koviloor Digital Library

ரவி சேய் எனும்-சூரியனுடைய மகனுகிய
அங்கராசன்-அங்கதேசத்து அரசஞன கர்ணன்
விசிகஆகவம்-அம்புகள் நிறைந்த போரில்
அயல்பேடி-பகையாயிருந்த (பேடி) அருச்சுனனுடைய
கைபடு போது-கையம்பால் இறந்து படும்போது
சன்னிதியானவன்-தெரிசனம் தந்த திருமாலும்
விதிதேடிய -பிரமனும் அடிமுடி தேடிய
திருவாளி-செல்வநாயகனுன
அரன் குமாரா-சிவபெருமானுடைய புதல்வரே!
அயலூருறை-பக்கங்களிலுள்ள எல்லா ஊர்களிலும் வீற்றிருக்கும்
மயிலா!-மயில் வாகனரே!
பல கலைமான்-பல வகையான கலைமான்களையும்
உழை-உழை என்ற மானையும்
புலி-புலிகளையும்
தோல்களை-யானைகளையும்
அகில்-அகில் மரங்களையும்
ஆரமதெறி-சந்தன மரங்களையும் வெள்ளத்தில் தள்ளிக்கொண்டு வரும்
காவிரி-காவிரி நதியும்
வண்டல் மேவும்-நீர் மண்டிய பொடிமண் உள்ளதும்
அதிமோகர-அதிக மனேகரமானதுமான
வயலூர் மிசை திரி-வயலூரில் இனிது உலாவுகின்ற
சேவக-வலிமை மிக்கவரே!
முருக-முருகக் கடவுளே!
ஈசுர-தலைவரே!

Koviloor Digital Library

அமராபதி அதில்-தேவர் தலைநகராம அமராபதியில்
வாழ்பவர்-வாழுகின்ற தேவர்களின்
தம்பிரானே-தனிப்பெருந் தலைவரே !
குயிலோ மொழி-உங்கள் குரல் குயிலின் குரலோ
ஆயிலோ விழி-உங்கள் கண் வேலோ
கொடியோ இடை-உங்கள் இடை பூங்கொடியோ
பிடியோ நடை-உங்கள் நடை பெண்யானையின் நடையோ
குறியீர்-இவ்வழகைத் தெரிந்து கொள்ளுங்கள்
இனி தனி செறியீர்-இனித் தனியாக வந்து நெருங்கிப் பழகுங்கள்
என்று பாடி-என்றெல்லாம் வேசையரைப் புகழ்ந்து பாடி
குனகா-கொஞ்சிப் பேசி
அடிபிடியா-அவ்வேசையரின் காலைப் பிடித்தும்
இதழ் கடியா-வாயிதழைக் கடித்தும்
நகம் வகிரா-நகம் கொண்டு கீறியும்
உடை குலையா-ஆடையைக் கலைத்தும்
அல்குல் அளையா-அல்குலைக் கலந்து அநுபவித்தும்
இரு கொங்கை மீதில்-இரண்டு தனங்கள் மீதிலும்
பயிலா-நெருங்கிப் பொருந்திப் பழகியும்
மனம் மகிழ்-மனம் களிப்பதற்கு இடமாயுள்ளவரும்
மோகித சுக சாகர-காம மயக்கச் சுகக் கடல் போன்றவருமான
மாதர்கள்-விலை மாதர்கள்
பகையே என நினையாது-பகைத்து விலக்கத் தக்கவர்களே என்று நான் நினையாமல்

உற நண்பு கூரும்-பொருந்தி இருக்க ஆதரவை மிகவும் காட்டும்
பசு-ஆன்மாக்கள்
பாசம்-தனை என்கின்ற மும்மலக்கட்டு
அகில அதிக-எல்லாவற்றுக்கும் மேம்பட்டவரே !
பரிபூரண-நிறைந்த பொருளே !
புரணாகர-ஒளிக்கு இருப்பிடமானவரே !
பதிநேரும்-கடவுளாகிய தேவரீரிடத்தில் உள்ள
நின் அருளால்-உமது திருவருளால்
மெய் உணர்ந்திடேனோ-உண்மைப் பொருளை நான் உணரமாட்டேனோ ?

பொழிப்புரை

ஒளி வீசுகின்ற ஆயிரக் கணக்கான கிரணங்களை உடையவனும், உதய காலத்தில் இருளை ஒழிக்கவல்லவனும், வேகமாகச் செல்லும் ஏழு குதிரைகளைக் கொண்டவனுமான சூரியனுடைய புதல்வனாகிய அங்க நாட்டின் அரசன் கர்ணன், அம்புகள் நிறைந்த போரில் பகையாயிருந்த அருச்சுனன் கையம்பால் இறந்துபடும்போது அவனுக்குத் தெரிசனம் தந்து அருளிய திருமாலும், பிரமதேவனும் அடி முடியைத் தேடிய செல்வ நாயகனான சிவபெருமானுடைய புதல்வரே! பக்கங்களிலுள்ள எல்லா ஊர்களிலும் வீற்றிருக்கும் மயில் வாகனரே! பல வகையான கலைமான்கள், உழைமான்கள், புலிகள், யானைகள், அகில்மரம், சந்தன மரம் இவைகளை அலைகளில் தள்ளிக்கொண்டு வரும் காவிரி நதியின் வண்டல் நிறைந்த, அதிக மனோகரமான வயலூரில் உலாவும் வலிமை நிறைந்தவரே !'முருகக் கடவுளே! தலைவரே! அமராவதி நகரத்தில் வாழும் தேவர்கள் தொழும் தனிப்பெருந் தலைவரே' உங்கள்

Koviloor Digital Library

மொழி குயிலின் குரலோ; உங்கள் கண்வேலோ; உங்கள் இடை பூங்கொடியோ; உங்கள் நடை பெண் யானையின் நடையோ; இவ்வழகைத் தெரிந்து கொள்ளுங்கள். இனித்தனியாக வந்து பழதங்கள் என்றெல்லாம் வேசையரைப் புகழ்ந்து பாடியும் கொஞ்சிப் பேசியும், அவர் தம் காலைப் பிடித்தும், வாயிதழைக் கடித்தும், நகம் கொண்டு கீறியும், ஆடையைக் கலைத்தும், அல்குலைக் கலந்து அநுபவித்தும், இரண்டு தனங்கள் மீதிலும் நெருங்கிப் பொருந்திப் பழகியும் மனம் களிப்ப தற்கு இடம் தந்து காம மயக்கச் சுகக்கடல் போன்ற பொது மாதர்கள் பகைத்து விலக்கத் தக்கவர்களே என்று நான் நினையாமல் இருப்பதற்கு ஆதரவை மிகக்காட்டும் பசு, பாசம் ஆகிய எல்லாவற்றுக்கும் மேம்பட்டவரே! எங்கும் நிறைந்தவரே! ஒளிக்கு இருப்பிடமானவரே! பரம்பொரு ளாகிய உம்மிடத்திலுள்ள திருவருளால் உண்மைப் பொருளை நான் உணர மாட்டேனோ!

விரிவுரை

குயிலோ மொழி ... ... என்று பாடி .—

காமுகர்கள் பரத்தையரிடம், அவர்களின் மொழி குயில் என்றும், கண்கள் வேல் என்றும், இடை கொடி என்றும் நடை பெண் யானை என்றும் கூறிக் கொஞ்சிக் குலாவுவர்

குனகா :— குனகுதல் — கொஞ்சுதல்

பசுபாசமு மகிலாதிக :—

பசு — ஆன்மாக்கள்

பாசம் — தளை

பசுக்கள் பதியை அணுகில் பசுவின் பாலுள்ள பாசம் வலி குன்றி விடும்.

Koviloor Digital Library

"பதியினைச் சென்றணுகாப் பசுபாசம்
பதியணுகிற் பசுபாசம் நிலாவே"

— திருமந்திரம் 115

பதி, பசு, பாசம் முப்பொருளும் அநாதி நித்தியப் பொருள்கள் என உணர்க. உயிர்கள் இறைவனால் படைக்கப்பட்டன அல்ல. உயிர்கள் என்றும் உள்ள பொருள்கள்.

"என்று நீ அன்று நான்" என்கிறார் தாயுமானார்
"பதியினைப் போல் பசுபாசம் அநாதி" என்கின்றார் திருமூலர்

இந்த உலகம் மாயையிலிருந்து வெளிப்பட்டது. இந்த உலகத்திற்கு முதற் காரணம் மாயை. துணைக் காரணம் சக்தி. நிமித்த காரணம் இறைவன்.

பானைக்கு முதற் காரணம் மண்
துணைக் காரணம் தண்டச் சக்கரம்
நிமித்த காரணம் குயவனர்

எல்லாவற்றுக்கும் தனிப்பெருந் தலைவனாக முருகப் பெருமான் விளங்குகின்றார்.

புராணகர :-

புரண ஆகர
புரணம் — ஒளி
ஆகரம் — உறைவிடம்
ஒளிக்கு உறைவிடமானவன்.

அருணேதய :—

அருணன் — காசிபருக்கு விநதையிடம் பிறந்தவன். சூரியனுக்குச்

Koviloor Digital Library

சாரதித்தொழில் செய்கின்றவன் சிறந்த திறமையுடையவன். அதிகாலையை அருணோதயம் என்பார்கள்.

"அருணன் இந்திரன் திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்'

— திருவாசகம் பள்ளியெழுச்சி

இருணாசன :—

இருணாசன — இருள் — நாசனம்
சூரியன் இருளை அழிக்கின்றவன்

ரவிசேயெனும் அங்கராசன் :—

அங்கநாட்டுக்குத் தலைவனாகிய கர்ணன் சூரியனுக்குக் குந்தியிடம் பிறந்தவன். குந்திதேவி குலப்பழிக்கு அஞ்சிக் கண்ணீருடன் தண்ணீரில் விட்டு விட்டாள். திருதராஷ்டிரனுடைய தேர்ப்பாகனாகிய அதிரதன் எடுத்து வளர்த்தான். தன்மகன் ஏழையிடம் சேர்ந்தால் மகன் துன்பப்படுவான் என்று எண்ணிக் குழந்தையை வைத்த பெட்டியில் நவரத்தினங்களையும் வைத்து அனுப்பினாள் குந்தி.

மகப்பேறின்றி வருந்திய அதிரதனும், அவன் மனைவியாகிய ராதையும் அன்புடன் அவனை வளர்த்தார்கள். வசு— செல்வம். குழந்தை செல்வத்துடன் கிடைத்ததனால் "வசுசேனன்" என்று பெயர் சூட்டினார்கள். ராதை வளர்த்த படியால் ராதேயன் என்று பெயர் பெற்றான். கவச குண்டலங்களை இந்திரனுக்குச் சேதித்துக் கொடுத்த படியால் கர்ணன் என்று பெயர் பெற்றான். கர்ணன் என்ற சொல் சேதித்தவன் என்று பொருள்படும்.

கர்ணன் பரசுராமரிடம் பலகலைகள் பயின்றான். இவன் மனைவி சுபாங்கி. விடசேனன் முதலிய புதல்வர்களைப் பெற்றான். இவன் இடையெழு வள்ளல்களில் ஒருவன். வரையாது தான தருமங்களைச் செய்தவன். நன்றி உணர்வு மிக்கவன்.

Koviloor Digital Library

விசிகாகவம் ;—

விசிகம் — அம்பு

ஆகவம் — போர்

அம்புடன் கூடிய போர்க்களம்

அயல் பேடிகை படுபோது சன்னிதியானவன் :—

கர்ணனுக்குப் பகைவனாகவும், விராட நகரத்தில் பேடி வடிவத்துடன் இருந்தவனுமாகிய அருச்சுனனுடைய அம்புகளால் அடிபட்டு மெய்யும், கையும் தளர்ந்து தேர்த்தட்டில் சாய்ந்து விட்டான். அப்பொழுது தருமதேவதை அவனுக்கு வேலியாக நின்று துணை செய்தது. அதனால் அருச்சுனன் விடுகின்ற பாணங்கள் கர்ணனை அணுகவில்லை.

அதனால் கண்ணபிரான் அந்தணனாகக் கர்ணனை அணுகி அஃவன் செய்த புண்ணியத்தைத் தானமாகப் பெற்று அவனுக்குத் தன் சுயவடிவான பரவாசுதேவரூபத்தைக் காட்டினார்.

"போற்றிய கன்னன் கண்டுகண் களிப்பப்
புணரிமொண் டெழுந்த கார்முகிலை
மாற்றிய வடிவும் பஞ்ச ஆயுதமும்
வயங்குகைத் தலங்களுமாகிக்
கூற்றுறழ் கராவின் வாயினின் றழைத்த
குஞ்சர ராசன்மு னன்று
தோற்றிய படியே தோற்றினன் முடிவுந்
தோற்றமு மிலாதபைந் துளவோன்"

— வில்லிபாரதம் 17 ஆம் போர் 244

விதிதேடிய :—

விதி — பிரமதேவன்

Koviloor Digital Library

எல்லார் தலையிலும் இப்படியிப்படி வாழவேண்டு மென்று எழுதி விதிப்பதனுல் பிரமதேவன் விதி என்று பெயர் பெற்ருன்.

"எழுதாக் குறைக்கு அழுதால் வருமா ?

"அன்று எழுதினவன் அழித்து எழுதப் போகிருனு ?

என்ற பழமொழிகளையும் இங்கு உன்னுக. திருமாலும், திசை முகனும் சிவபெருமானுடைய அடிமுடிகளைத் தேடினுர்கள். இதனை அடியிற் கண்ட உபநிடதவாக்கால் அறிக.

"விஷ்ணுர்வே வாராஹம் ரூபம்

சஹஸ்ரம் சமாஹாசன்

பாதாள் வேஷண ப்ரோபூக்த்வா

த்வமேவ மாதா அஸி! த்வமேவ பிதா அஸி

த்வமேவி ஜ்யேஷ்டோ அஸி த்மேவி சிரேஷ்டோ அஸி!

ய: யேவே மஹிமாநம் வேதா கர்தா பவதி

காரைதா பவதி

ய: யேவ மஹிமாநம் வேதா சிவாஸாயுஜ்யம்

ஆப்னேதி, சிவஸாயுஜ்யம் ஆப்னேதி

திருவாளி :—

சிவபெருமான் வெள்ளி மலைக்கும் பொன்மலைக்கும் அதிபர். குபேரனுக்குச் சங்கநிதி, பதுமநிதி அளித்தவர். அதனுல் திருவாளி என்ருர்.

அயலூருறை மயிலா :—

வயலூருக்கு அயலாக அருகிலுள்ள எல்லா ஊர்களி லும் முருகப் பெருமான் எழுந்தருளியிருக்கின்ருர்.

Koviloor Digital Library

"ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்"

— திருமுருகாற்றுப்படை.

பல கலைமானுழை புலி தோல்களை அகிலாரம
தெறி காவிரி:—

காவிரி நதியில் வெள்ளத்தில் பலவகையான மான்களும், புலிகளும், யானைகளும் மிதந்து போகின்றன.

"களிற்றின மருப்பொடு ... ... சந்தமா ரகிலொடு

... உந்துமா காவிரி"

— சம்பந்தர் 3—91—2.

அமராவதி :—

தேவலோகத்துத் தலை நகரம். இந்திரன் இருந்து அரசு புரிவது.

கருத்துரை

வயலூர் வள்ளலே! மெய்யுணர்வு பெற அடியேனுக்கு அருள் புரிவாய்.

KOVILOOR ANDAVAR
A. No. 18698
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

11

கோவை வாயி தமுக்குந் தாக போக மளிக்குங்
கோதை மாதர் முலைக்குங் குறியாலும்
கோல மாலை வளைக்குந் தோளி ளுலுமணத்தங்
கோதி வாரி முடிக்குங் குழலாலும்
ஆவி கோடி யவிக்குஞ் சேலி ளுலு மயக்குண்
டாசை யாயினு நித்தந் தளராதே
ஆசி லாத மறைக்குந் தேடொ ணுதொருவர்க்கொன்
ருடல் தாள்க ளெனக்கின் றருள்வாயே
சேவி லேறு நிருத்தன் தோகை பாகனளிக்குந்
த்யாக சீல குணத்தன் திருமாலும்
தேடொ ணுதப தத்தன் தீதிலாத மனத்தன்
தேயு வான நிறத்தன் புதல்வோனே
காவிடாத திருச்செங் கோடுநாடு தனக்குங்
காவி சூழ் வயலிக்கும் ப்ரியமானுய்
காதி மோதி யெதிர்க்குஞ் சூர தீரர் ப்ரமிக்குங்
கால ளுடல் தவிர்க்கும் பெருமாளே!

பதவுரை

சேவில் ஏறும் நிருத்தன்-இடபவாகனத்தில் ஏறும் நடன மூர்த்தி

Koviloor Digital Library

தோகை பாகன்-மயில் போன்ற உமாதேவியை ஒரு பாகத்தில் கொண்டவர்

அளிக்கும் த்யாக சீல - காத்தளிக்கும் கொடையருட் குணம் கொண்ட தூய ஒழுக்கமுடைய,

குணத்தன் - நற்குணங் கொண்டவர்.

திருமாலும் தேட ஒணாத பதத்தன் - நாராயணமூர்த்தியும் தேட முடியாத திருவடியை யுடையவர்

தீதிலா மனத்தன் - தீமையே யில்லாத மனத்தையு. டையவர்.

தேயுவான நிறத்தர் - நெருப்பின் நிறத்தை யுடையவரா கிய சிவபெருமானுடைய

புதல்வோனே . திருக்குமாரரே!

கா விடாத - சோலைகள் நீங்காது நிறைந்த

திருச்செங்கோடு நாடு தனக்கும் :-

திருச்செங்கோடுடைய தேயத்திலும்,

காவி சூழ்-கருங்குவளை வாழும் தடாகங்கள் சூழ்ந்துள்ள,

வயலிக்கும்-வயலூருக்கும்,

ப்ரியம் ஆனாய்-விருப்பம் கொண்டவரே!

காதி மோதி எதிர்க்கும்-கொன்று மோதி எதிர்த்துப் போர் புரியும்

சூர தீரர் வியக்கும்-சூரர் தீரர்கள் எல்லாம் திகைப்புற

காலன் ஆடல் தவிர்த்த-காலனுடைய கொல்லுந் தொழி லாகிய கூத்தை அவனுக்கு இல்லாதபடி செய்த,

பெருமாளே-பெருமையில் மிகுந்தவரே!

Koviloor Digital Library

கோவை வாய் இதழுக்கும்-கொவ்வைக்கனி போன்ற வாயிதழுக்கும்

தாக போகம் அளிக்கும்-காமதாகத்தையும் இன்பத்தையும் கொடுக்கின்ற

கோதை மாதர் - மாலை புனைந்துள்ள மாதர்களின்,

முலைக்கும் - கொங்கைக்கும்,

குறியாலும் - பெண்குறியான அல்குலாலும்,

கோல மாலை வளைக்கும் - அழகிய மாலையை வளையப் புனைந்துள்ள,

தோளினாலும் - தோள்களாலும்,

மணத்து அம் ஒதி வாரி முடிக்கும் - வாசனையுடன் அழகாகச் சிக்கெடுத்து வாரி முடிக்கின்ற

குழலாலும் - கூந்தலாலும்

கோடி ஆவி அவிக்கும் - கோடிக் கணக்கான உயிர்களை அழிக்கின்ற

சேலினாலும் - சேல்மீன் போன்ற கண்களினாலும்

மயக்குண்டு - மயக்கம் கொண்டு

ஆசையாய் இனும் - ஆசை கொண்டவனாய் இன்னும்

நித்தம் தளராதே - தினந்தோறும் சோர்வு அடையாமல்

ஆசிலாத - குற்றமில்லாத

மறைக்கும் தேட வொணாத - வேதங்களாலும் தேடிக் காண முடியாத

Koviloor Digital Library

ஒருவர்க்கு ஒன்று — சிவபெருமானுக்குப்பொருந்திய

ஆடல் தாள்கள் — நடன பாதங்களை

எனக்கு இன்று அருள்வாயே — அடியேனுக்கு இன்று தந்தருளுவீராக!

பொழிப்புரை

இடப வாகனத்தில் ஏறும் நடனமூர்த்தியும், மயில் போன்ற உமா தேவியாரை ஒருபாகத்தில் கொண்டவரும். காத்து அளிக்கும் தியாக சீலரும், அருட்குணம் உடைய வரும், திருமாலும் தேடவொண்ணாத திருவடியை உடைய வரும், தீமையே இல்லாத திருவுள்ளத்தை உடையவரும், நெருப்பின் நிறம் உடையவரும் ஆகிய சிவபெருமானுடைய திருக்குமாரரே! சோலைகள் சூழ்ந்த திருச்செங்கோட்டுப் பிரதேசத்துக்கும் கருங்குவளை மலர்கின்ற தடாகங்கள் சூழ்ந்த வயலூருக்கும் அன்பு பூண்டவரே! காதி, மோதிப் போர்புரியும் சூர தீரர்கள் திகைக்கும்படி காலனுடைய வேலையைத்தவிர்த்த பெருமையில் மிகுந்தவரே! கொவ்வைக் கனி போன்ற வாயிதழுக்கும் காம தாகத்தையும், இன்பத்தையும் தருகின்ற மாலை புனைந்த மாதர்களின் கொங்கைக்கும் அல்குலாலும், அழகிய மாலையை வளைத்துப் புனைந்துள்ள தோள்களாலும். வாசனையுடன் அழகாகச் சிக்கெடுத்து வாரி முடிக்கின்ற கூந்தலாலும் கோடிக் கணக்கான உயிர்களை அழிக்கின்ற சேல் மீன் போன்ற கண்களாலும் அடியேன் காம மயக்கம்கொண்டு ஆசை பிறந்தவனாய் இன்னும் தினந்தோறும் சோர்வு அடையாமல், குற்றமில்லாத வேதங்களாலும் தேடிக் காண முடியாத ஒப்பற்ற சிவபெருமானுக்கு உவந்த நடன பாதங்களை இன்று தந்தருளுவீராக!

Koviloor Digital Library

விரிவுரை

கோவை வாயிதழுக்கும்.—

மாதர்களின் வாயிதழ் கொவ்வைக்கனி போல் சிவந்து அழகு செய்யும்.

கோதி வாரி முடிக்கும் குழலாலும் :—

கூந்தலுக்கு வாசனைத் தைலம் பூசிச் சிக்கெடுத்து வாரி முடித்து அழகு செய்வார்கள். பெண்களுக்குக் கூந்தலின் அழகு சிறப்பாக விளங்கும். இளைஞர்கள் கூந்தலின் அழகால் சொக்கி மாதர் வசப்படுவார்கள்

திண்ணியநெஞ் சப்பறவை சிக்குங் குழல்காட்டில்
கண்ணி வைப்பார் மாயம் கடக்குநாள் எந்நாளோ?
—தாயுமானர்

ஆவிகோடி அவிக்கும் சேலினாலும் :-

சேல் - மீன். இங்கு உவமை ஆகுபெயராக இது கண்ணைக் குறிக்கின்றது. பொதுமாதரின் கண்கள் கோடிக் கணக்கான ஆன்மகளை வதைக்கும்.

துறந்தோருளத்தை
வளைத்துப் பிடித்துப் பதைக்கப் பதைக்கவதைக்
குங் கண்ணர்
— கந்தரலங்காரம்

மாதர் யமனும் அவர்தம் மைவிழியே வன்பாசம்
பீதிதரும் அல்குல் பெருநரகம் — ஓதஅதில்
வீழ்ந்தோர்க்கும் ஏற விரையில்லை போருரைத்
தாழ்ந்தோர்க்கும் இல்லை தவறு!

- சிதம்பர சுவாமிகள்

ஆசையாயினும் :-

ஆசையாய் இன்னும்

Koviloor Digital Library

நித்தம் தளராதே :-

நாள்தோறும் நலிகின்றேன்

அநுதினமும் நாணமின்றி

அழிவேனே" என்கின்றார் பிறிதோரிடத்தில்

ஆசிலாத மறைக்குந் தேடொணாதொருவருக்கு :-

ஆசு இலாத — குற்றமில்லாத

வேதம் குற்றம் குறை இல்லாதது.

"ஆசிநான் மறைப்படியும்" — என்கிறார் வில்லிப்புத்தூரார்

இத்தகைய வேதங்களும் இறைவனை உணராமல் ஓலமிடுகின்றன.

"வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே'

' அப்பெருமறை தேடிய அரும்பொருளே"

— திருவாசகம் 1-34-41-3

' உலகங்காக்க நின்ற கண்ணுதல்" — சம்பந்தர் 1-65-2

"ஓலமறைகள் அறைகின்றவொன்றது" — திருப்புகழ்

ஒருவர்க்கு ஒன்று :-

ஒருவன் ஒப்பற்றவன் சிவபெருமான். ஒன்றும் என்ற சொல் ஒன்று என நின்றது. ஒன்றும் — திருவுள்ளத்துக்கு உவந்தது

ஆடல் தாள்கள் ;-

ஆடல் — நடனம் செய்கின்ற, முருகப்பெருமான் என்றும் இளையவர். குழந்தைகள் நடனமாடினால் அது பார்ப்பவருக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தரும். ஒரு கிழவன் நடனமாடினால் வெறுப்பை விளைவிக்கும்.

Koviloor Digital Library

முருகப் பெருமான் பல திருத்தலங்களில் அருணகிரி நாதருக்கு நடன தெரிசனம் கொடுத்திருக்கின்றார்.

அழகு திருத்தணி மலையில் நடிக்கரும் பெருமாளே
செந்திலும் எந்தன் முன் கொஞ்சி
நடனம் கொளும் கந்தவேளே
—(தண்டையணி) திருப்புகழ்

சட்டைக்கு ரம்பையழி
பொழுதினிலும் அருள்மிகு சுத்தக்கொடுங்கிரியில்
நிர்த்தச்ச ரணங்களையு மறந்திடேனே
—(எதிர்பொருது) திருப்புகழ்

சிவபெருமான் இளம்குழவியாகிய முருகப்பெருமானை எடுத்துத் தோளிலும் மார்பிலும் வைத்துச் சுதானந்தமாக விளையாடுவார் அப்பொழுது முருகனுடைய நடன பாதம் சிவமூர்த்தியின் தோளில் தோய அவர் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தார்

இதழிவெகு முககசுன நதியறுகு தறுகணர
இமகிரண தருணவுடு பதிசேர் ஜடாமவுலி
இறைமகிழ வுடைமணியொ டணிசகல மணிகலென
இமயமயில் தழுவுமொரு திருமார்பி லாடுவதும்
— சீர்பாதவகுப்பு (உததி)

காலனை வென்றவர் தோளில் உலாவிய காலா
தாலேலோ''
— திருப்போரூர் பிள்ளைத் தமிழ்

சேவிலேறு நிருத்தன் :-
சே - எருது

Koviloor Digital Library

அகில உலகங்களும் அழியும் போது அறம் என்ற ஒன்று மட்டும் அழியாது.

"திறம்பு காலத்துள் யாவையும் சிதையினும் சிதையா அறம்" — கம்பர்

எல்லா உலகங்களும் அழிந்த பொழுது அறம் அழியாமல் எருது வடிவாகச் சிவபெருமானை அடைந்தது. இறைவன் அந்த இடப தேவரை வாகனமாகக் கொண்டார்.

எல்லா உலகங்களையும் இறைவன் தாங்குகிறான். அந்த இறைவனை அறம் தாங்குகிறது.

"சேவாண்ட கொடியவர்"

— பெரிய புராணம்

"சேவேறும் ஈசர் சுற்ற"

— (நாவேறு) திருப்புகழ்

சே என்ற எருதுக்கு உரியவர் ஆதலினால் சேக்கிழார் என்று பெயர் பெற்றார். சிவபெருமானுக்கு இடபதேவர் வாகனமாகவும், கொடியாகவும் இருக்கின்றார்.

அவிக்கும் தியாகசீலன் :-

சிவபெருமான் எல்லா உலகங்களையும் காத்தருளும் பரங்கருணைத் தடங்கடல்.

"உலகங் காக்க நின்ற கண்ணுதல்"

— சம்பந்தர் 1-65-2

அடியார்களுக்கு அள்ளி அள்ளி வழங்கும் வள்ளல் சிவபெருமான். அதனால் சிவபெருமான் வள்ளல் என்றும் தியாகராஜன் என்றும் பெயர் பெற்றார்.

Koviloor Digital Library

"வள்ளல் தொழும் ஞானக் கழலோனே" என்கிறர்
அருணகிரிநாதர்

'.வள்ளிக் கணவன் தனையீன்ற வள்ளல் பவனி"
என்கிருர் ராமலிங்க அடிகளார்

"சுத்த நித்த முத்தித் தியாகப் பொருப்பை
திரிபுராந்தகனை, த்ரியம்பகனை"

— கந்தரலங்காரம்

சீலகுணத்தன்:—

ஒரு மனிதனை உயர்த்துவது சீலம். சீலம் உள்ள வர்கள் வாழும் இடத்தில் காலம் இன்றியும் மரங்கள் கனியும். மூலம் இன்றியும் நறுமணம் வீசும்.

காலம் இன்றியும் கனிந்தன கனிநெடுங் கந்தம்
மூலம் இன்றியும் முகிழ்த்தன நிலனுற முழுதும்
கோல மங்கையர் ஒத்தன, கொம்பர்கள் இன்பச்
சீலம் அன்றியும் செய்தவம் வேறும் ஒன்று
உளதோ

— கம்பராமாயணம்

நமக்கு வரும் அல்லல்கள் அனைத்துக்கும் ஆசையே காரணமாகும்.

"அவா வில்லார்க்கு இல்லாகும் துன்பம்" என்கின்ருர் திருவள்ளுவர்.

ஆசையால் அழிந்த சாம்ராஜ்யங்கள் பல. இந்த ஆசை யாகிய காமத்தை விளைவிக்கின்றவன் காமன். அந்தக் காமனை நெற்றிக் கண்ணுல் எரித்த நிமலன் சிவபெருமான். அதனுல் சீலகுணத்தன் என்று குறிப்பிடுகின்ருர்.

Koviloor Digital Library

திருமாலும் தேடொணாத பதத்தன் :-

திருமால் சிவபெருமானுடைய திருவடியைப் பன்றி வடிவம் கொண்டு ஆயிரம் ஆண்டுகள் தேடியும் திருவடியைக் கண்டாரில்லை.

"திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை"
- திருவாசகம் 11-1

திருமால் இலட்சுமிக்கு நாயகன். செல்வப் பெருக்குள்ளவன் பரம்பொருளைக் காணமுடியாது என்பதை இந்த வரலாறு உணர்த்துகிறது.

தீதிலாத மனத்தன் :-

ஒரு மனிதனுக்குப் பல நற்குணங்களுக்கிடையே ஒன்றிரண்டு நிர்க்குணங்களும் இருக்கும். குற்றமில்லாத மனிதனே உலகத்தில் இல்லை. அணிகலன்கள் என்றால் செம்பு இருக்கும். நீர் இருந்தால் சேறு இருக்கும். மலர் இருந்தால் முள் இருக்கும். ஆதலால் இறைவன் ஒருவன் தான் குற்றமில்லாதவன்.

"குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே"

— திருவாசகம்

"நன்றுடையானைத் தீயதில் லானை"

— சம்பந்தர். 1-88-1

தேயுவான நிறத்தன் :-

சிவபெருமான் நெருப்பை யொத்த திருமேனியர்:
"அழல் திகழ்நிறத்தர்"

— சம்பந்தர் 1-78-8

Koviloor Digital Library

"நெருப்பான மேனியர் செங்காட்டில் ஆத்தி
நிழலருகே இருப்பார்"
- பட்டினத்தார்

திருச்செங்கோடு நாடு தனக்கும்
காவி சூழ் வயலிக்கும் ப்ரியமானுய்

முருகப் பெருமானுக்குத் திருச்செங்கோடும்,வயலூரும் மிகவும் பிரியமான தலங்கள் என்று அருணகிரி நாதர் இங்கு குறிப்பிடுகின்ருர்.

காதிமோதி யெதிர்க்குஞ் சூரதீரர் ப்ரமிக்கும்
காலனுடல் தவிர்க்கும் பெருமாளே

காதி மோதி எதிர்க்கும்

காதுதல்-கொல்லுதல். போர்க்களத்தில் பகைவரைக் கொல்லுகின்ற சூரதீரர்கள் முருகப் பெருமானுடைய போர்த்திறத்தைக் கண்டு திகைத்து நின்ருர்கள்.

முருகப்பெருமானே அளவில்லாத சேனைகளைக் கொன்று விட்டதனுல், உயிர்களைக் கொல்லுகின்ற காலனுக்கு வேலையில்லாமல் போய்விட்டதாம். ஆதலால் காலன் ஆடல் தவிர்க்கும் என்று கூறுகின்ருர்-

காலன் - கூற்றுவனுடைய அமைச்சன். ஆயுள் முடிந்தவுடன் காலம் வழுவாமல் வருவதனுல் காலன் என்று பெயர் பெற்ருன்.

"நின்றிசைத்துயிர் கவர் நீலக் காலனே"
— கம்பராமாயணம்

கருத்துரை

வயலூர் வரதனே! உன் திருவடியைத் தந்தருள்.

Koviloor Digital Library

12

தாமரையின் மட்டு வாசமல ரொத்த
தாளிணை நினைப்பி — லடியேனைத்

தாரவிழ் கடுக்கை நாகமகிழ் கற்ப
தாருவென மெத்தி — யவிராலி

மாமலையி னிற்ப நீகருதி யுற்று
வாவென அழைத்தென் — மனதாசை

மாசினை யறுத்து ஞானமுத ளித்த
வாரமினி நித்த — மறவேனே

காமனை யெரித்த தீநயன நெற்றி
காதிய சுவர்க்க — நதிவேணி

காளிலுறை புற்றி லாடுபணி யிட்ட
காதுடைய அப்பர் — குருநாதா

சோமனொ டருக்கன் மீனுலவு மிக்க
சோலையுடை சுற்று — வயலூரா

சூடிய தடக்கை வேல்கொடு விடுத்து
சூர்தலை துணித்த — பெருமாளே!

பதவுரை

காமனை எரித்த - மன்மதனை எரித்த

தீ நயன நெற்றி - நெருப்புக் கண்ணை உடைய நெற்றியையும்

காதிய சுவர்க்க - விண்ணுலகத்தை அழிக்கவந்த

நதிவேணி - கங்கா நதியைத் தரித்துள்ள சடையையும்

காளில் உறை - காட்டிலே இருக்கும்

Koviloor Digital Library

புற்றில் ஆடு பணி இட்ட - புற்றிலே படமெடுத்து ஆடுகின்ற பாம்பை அணிந்துள்ள

காது உடைய அப்பர் - செவியையும் உடைய சிவபெருமானுக்கு

குருநாதா - குருநாதரே

சோமனொடு - சந்திரனுடன்

அருக்கன் - சூரியனும்

மீன் உலவு - நட்சத்திரங்களும் உலவுகின்ற

மிக்க - உயர்ந்த

சோலை புடை சுற்று - சோலைகள் பக்கங்களில் சுற்றியுள்ள

வயலூரர - வயலூரில் வாழும் வள்ளலே !

தடக்கை சூடிய · விஸ்தாரமான திருக்கரத்தை ஏந்தியவரே

வேல் கொடு விடுத்து - வேலை எடுத்துச் செலுத்தி

சூர் தலை துணித்த - சூரபன்மனது தலையை வெட்டிய

பெருமாளே - பெருமையைச் சேர்ந்தவரே !

மட்டு வாச - தேனும் நறுமணமும் நிறைந்த

தாமரை மலர் ஒத்த - தாமரை மலருக்கு நிகரான

தாள் இணை நினைப்பு இல் - உமது இரண்டு திருவடிகளின் நினைப்பே இல்லாத

அடியேனை - அடியவனை

தாது அவிழ் கடுக்கை - மகரந்தப் பொடி விரியும் கொன்றை

நாகம் - சுரபுன்னை

மகிழ் - மகிழமரம் இவைகள்

கற்ப தாரு என - கற்பக மரங்கள் என்னும்படி

மெத்திய - நிறைந்துள்ள

Koviloor Digital Library

விராலி மாமலையில் நிற்பம் - பெருமை மிகுந்த விராலி மலையில் யாம் வீற்றிருக்கின்றோம்.

நீ கருதி உற்றுவா என - நீ அத்தலத்தை நினைவில் வைத்து வருவாயாக என்று

அழைத்து - என்னைக் கூப்பிட்டு

என் மனது ஆசை - என் மனத்திலுள்ள ஆசைகள்

மாசினை அறுத்து - குற்றங்களை ஒழித்து

ஞான அமுது அளித்த-அறிவு அமுதப் பிரசாதத்தை வழங்கிய

வாரம் இனி - தேவரீருடைய அன்பை இனி

நித்தம் மறவேனே - எந்நாளும் மறக்க மாட்டேன்.

பொழிப்புரை

மன்மதனை எரித்த நெருப்புக் கண்ணை உடைய நெற்றியையும், விண்ணுலகம் முதலிய அழிக்க வல்லதாய்ப்பாய்ந்து வந்த ஆயிரம் முகத்தை உடைய ஆகாய கங்கையைச் சூடி உள்ள சடையையும், காட்டில் இருக்கும் புற்றில் படமெடுத்தாடுகின்ற பாம்பை அணிந்துள்ள காதையும் கொண்ட உலகத் தந்தையாகிய சிவபெருமானுக்குக் குரு நாதரே! சந்திரனோடு சூரியனும், நட்சத்திரங்களும் உலவுகின்ற அளவுக்கு உயர்ந்த சோலை அருகில் சூழ்ந்த வயலூர் வள்ளலே! விசாலமான கரத்தில் ஏந்திய வேலாயுதத்தைச் செலுத்திச் சூரனுடைய தலையை வெட்டித் துணித்த பெருமையில் சிறந்தவரே! தேனும், நறுமணமும் நிறைந்த தாமரை மலர் போன்ற உமது இரண்டு திருவடிகளின் நினைப்பே இல்லாத அடியேனை, "மகரந்தப்பொடி விரியும் கொன்றையும், சுர புன்னையும், மகிழ மரமும், கற்பகத் தருக்கள் என்னும்படி நிறைந்துள்ள விராலி மலையென்னும் பெருமை வாய்ந்த மலையில் யாம் வீற்றிருக்கின்றோம். நீ அத்தலத்தை நினைத்து வருவாயாக" என்று

Koviloor Digital Library

கூறி அழைத்து அடியேனுடைய மனத்திலுள்ள ஆசை முதலிய குற்றங்களை ஒழித்து ஞான அமுதப் பிரசாதத்தைத் தந்தருளிய அன்பை இனி எந்நாளும் மறக்கமாட்டேன்.

விரிவுரை

தாமரையின் மட்டு வாசமலரொத்த :-

மட்டு வாச தாமரையின் மலர் என்று கொண்டு கூட்டுக.

இந்தத் திருப்புகழின் முதல்நான்கு அடிகள் அருணகிரி நாதரின் வரலாற்றை விளக்குகின்றன.

மட்டு—தேன்

"மட்டவிழ் மலர்கொடு பணிவேனே"

— (கைத்தல) திருப்புகழ்

முருகப் பெருமானுடைய திருவடி தாமரை மலரை ஒத்தது.

"சரண கமலாலயத்தை" என்று சுவாமிகள் புகழ்ந்து கூறுகின்ருர். தாமரையில் தேன் துளிர்க்கின்றது.

முருகப்பெருமானுடைய திருவடிகளில் கருணை துளிர்க் கின்றது.

"கருணை கூர்ப்பன கழல்கள் ஆர்ப்பன
கால்மேல் வீழேன் வீழ்வார் கால்மீ தினும் வீழேன்

— (கவடு கோத்தெழு) திருப்புகழ்

தாமரை சிவப்பாக இருக்கும் முருகப்பெருமான் திருவடியும் செம்மை நிறத்துடன் விளங்கும். "கையோ அயிலோ கழலோ முழுதும் செய்யோய்"

- அநுபூதி

Koviloor Digital Library

தாளிணை நினைப்பில் அடியேனை:

நினைப்பில்-நினைப்பு இல் என்று பதப்பிரிவு செய்க.
" திருவடி நினைப்பே இல்லாத சிறியேனை "

தாதவிழ் கடுக்கை நாகமகிழ் :

கடுக்கை-கொன்றை

நாகம்-சுரபுன்னை

மகிழ்-மகிழ மரம்

தாது அவிழ்-பூந்தாதுக்கள் நிறைந்த மலர்க்கொத்துக்களால் அழகிய மரங்கள்

கற்ப தாருவென மெத்திய:

மெத்திய-மிகுந்த

விராலி மலையில் கொன்றை முதலிய பூ மரங்கள் கற்பக மரம்போல் பெருமை விளங்கச் சூழ்ந்திருக்கின்றன.

விராலி மலையில் நிற்பம்நீ கருதி உற்றுவாவென அழைத்து:

அருணகிரிநாதர் வயலூரில் பல காலம் தங்கி இருந்தார். அப்பொழுது திருப்புகழாகிய அமுதப் பாடல்களைப் பாடி அந்த ஏடுகளை எட்டுத் திசைகளுக்கும் அனுப்புவார். அதனை அன்பர்கள் படித்து 'அற்புதம் அற்புதம்' என்று உவகையால் துள்ளிக் குதிப்பார்களாம். அக்காலம் திருப்புகழாகிய தெய்வமணம் எங்கும் வீசியது. முருக பக்தி மேருமலைபோல் ஓங்கி வளர்ந்தது.

"ஆபாதனேன் மிகப்ரசித்தி பெற்றினி துலகேழும்
யானுகநாம அற்பு தத்திருப்புகழ்
தேனுற வோதி யெத்தி சைபபு றத்தினும்
ஏடேவு ராஜ தத்தி னைப்ப ணித்ததும் இடராழி
ஏறுத மாமலத்ர யக்கு ணத்ரய
நானுவி கார புற்பு தப்பி றப்பற
ஏதேம மாயெ னக்க நுக்ர கித்ததும் மறவேனே"

— (ஆறுத ஞான) திருப்புகழ்

Koviloor Digital Library

"பச்சிம தக்ஷிண வுத்தர திக்குள பூர்வ
பத்தர்கள் அற்புதம் எனவோதும்
சித்ரக வித்துவ சத்தமி குத்ததி
ருப்புக ழைச்சிறி தடியேனுஞ்
செப்பென வைத்துல கிற்பர வத்தெரி
சித்த அநுக்ரக மறவேனே"

— (பத்தர்கணப்ரிய) திருப்புகழ்

இவ்வாறு அருணகிரிநாதர் திருப்புகழ் பாடிச் செந்தமிழ்த் தொண்டு செய்து கொண்டிருந்தார்.

ஒரு நாள் முருகப் பெருமான் அவருடைய கனவில் தோன்றி "அன்பனே! நாம் விராலி மலையில் எழுந்தருளியிருக்கின்றோம். விராலிமலை மிகவும் புனிதமானது. அது சித்திகளையும் முத்தியையும் தர வல்லது. நீ அங்கு வருக" என்று அருளிச் செய்தார்.

அருணகிரி நாதர் கண்விழித்து எழுந்தார். கனவில் கந்தவேள் காட்சிதந்து மாட்சியுடைய விராலி மலைக்கு வா என்று அழைத்த கருணைத்திறத்தை எண்ணி அழுதார், தொழுதார். "மூவருக்கும் தேவருக்கும் எட்டாத முழு முதற் பொருளே! பரங் கருணைத் தடங்கடலே! ஞானமேயான உனது சரண கமலாலயத்தை நினைக்கும் பெற்றி அறியாத பேயேனையும் ஒரு பொருளாக எண்ணிக்கருணை புரிந்தீரே! ஐயனே! பன்னிருகையனே! விராலி மலைக்கு வாவென்று அழைத்தீரே! அது எந்தத் திசையிலிருக்கின்றதென்று வழி வகைகளைச் சொல்லவில்லையே! என்று முருகனைத் துதிசெய்து அந்த நள்ளிரவில் புறப்பட்டார். எங்கும் இருள் சூழ்ந்து கும்மென்றிருந்தது. காதல் மேற்கொண்டவனுக்கும், பக்தனுக்கும் இருள் ஒரு பொருளாகத் தோன்ருது.

Koviloor Digital Library

அப்பொழுது எங்கும் காடு மண்டியிருந்த காலம். அருணகிரிநாதர் விராலி மலையைக் காணவேண்டுமென்ற ஆராத காதலால் வழியும், குழியும் தெரியாமல் நடக்கின்றார். கொடிய விலங்குகளும் அரவினங்களும் நிறைந்த அக்காட்டில் திசை தெரியாமல் அருணகிரிநாதர் நின்று திகைத்துக் கந்தவேளைச் சிந்தை செய்தார்.

கருணையே வடிவாகிய கந்தப்பெருமான் வேட வடிவங் கொண்டு அவருக்கு முன்னே வந்து நின்று "யாரைய்யா? நீர்" என்று கேட்டருளினார்.

அருணகிரிநாதர் "ஐயா! நான் திருவண்ணாமலை. விராலிமலையை நோக்கிப் போகின்றேன். விராலிமலை எங்கே இருக்கின்றது?" என்று வினவினார்.

முருகன் "ஐயா! நான் விராலிமலைதான். வழி காட்டுகிறேன். என்னுடன் வருக" என்று கூறி நடந்தருளினார்.

அருணகிரிநாதர் அவரைத் தொடர்ந்து சென்றார். விடியற்காலை விராலி மலையைச் சேர்ந்தார். தனக்கு வழி காட்டி வந்த வேடனைப் பார்த்து அருணகிரிநாதர் "ஐயா! எனக்கு வழி காட்டி உதவி செய்தீர். மிகுந்த நன்றி. நீர் எங்கே இருக்கின்றீர்?" என்று கேட்டார்

முருகன் "ஐயா! நான் மலைமேல் தான் இருக்கின்றேன். அங்கு வா!" என்று கூறி அருளினார். அருணகிரிநாதர் நீராடி, நீறுடி, வேடன் முன்னே செல்ல மலை மீது தான் பின்னே சென்றார். பாதி மலையில் சந்தான கோட்டம் என்ற மண்டபத்தை அடைந்தார். அப்பொழுது ஆதித்தன் உதித்தான். சூரிய ஒளி வேடன் மீது நன்றாக வீசியது. அப்பொழுது அருணகிரிநாதர் வேடனை உற்று நோக்கினார். வேட வடிவம் வேல வடிவமாக மாறியது.

Koviloor Digital Library

அருணகிரி நாதர் கொடிய கானகத்தில் நள்ளிருளில் வேடனாக வந்து வேதங்களும் காணாத பாதங்கள் நோவ நடந்து தனக்கு வழி காட்டிய இளம்பூரணனது வளம் குலவு வற்ருத கருணைத் திறத்தை உன்னி உன்னி உள்ளம் உருகினார்.

மதியணையுஞ் சோலை யார்த்து
மதிவளசந் தான கோட்டின்
வழியருளின் பேறு காட்டி — யவிராலி

மலைமருவும் பாதி யேற்றி
கடிகமழ்சந் தான கோட்டில்
வழியருளின் பேறு காட்டு பெருமாளே
— (எதிரெதிர்) திருப்புகழ்

முருகப் பெருமான் கானகத்தில் வழி காட்டிய அருள் திறத்தை அருணகிரிநாதரே அடியில் வருமாறு கூறு வதைக் காணுக :-

வாதனைத விர்த்தகுரு நாதனும்வெ ளிப்படம
காடவியி னிற்பதொர்ச காயக் காரனும்
— வேளைக்காரன் வகுப்பு

என் மனதாசை மாசினை அறுத்து -

முருகப்பெருமான் அருணகிரி நாதருக்கு மனத்தி லுள்ள ஆசாபாசங்களை அகற்றி அருள் புரிந்தார்.

ஆணவஅ ழுக்கடையும் ஆவியை விளக்கியநு
பூதிஅடை வித்ததொரு பார்வைக்காரனும்
— வேளைக்காரன் வகுப்பு

Koviloor Digital Library

"ஆசா நிகளம் துகளாயின பின்
பேசாஅநு பூதிபி றந்ததுவே"

— கந்தரநுபூதி

ஞானமு தளித்த வாரம்:-

அருணகிரிநாதருக்கு ஞான அமுத அருட்பிர சாதத்தை அளித்தருளினர். ஆரும்பெருத அருளை அருணகிரிநாதர் பெற்ருர்.

அறிவுமறி தத்துவமு மபரிமித வித்தைகளு
மறியென விமைப்பொழுதின் வாழ்வித்த வேதியனும்

— வேடிச்சி காவலன் வகுப்பு

"வாரமினி நித்தம் மறவேனே" ;—

வாரம் — அன்பு

'செஞ்சொலடியார்கள் வாரக்கார" என்று கூறு கின்ற இடத்திலும் வாரம் என்ற சொல் வருவதைக் காண்க.

தே — தெய்வம்

வாரம் — அன்பு

தெய்வத்தினிடத்தில் அன்பு விளைவிக்கின்ற பாடல் தேவாரம் எனப்படும். அருணகிரிநாதர் தனக்குத் திரு முருகன் செய்த திருவருளை "என்றும் மறவேன்" என்று நன்றியுணர்ச்சியுடன் நவில்கின்ருர்.

இவ்வாறு பல பாடல்களில் பகர்கின்ருர்.

கருணை யடியரொ டருணையி லொருவிசை
சுருதி புடைதர வருமிரு பரிபுர
கமல மலரடி கனவிலு நனவிலு மறவேனே

— விறுபுழ (திருப்புகழ்)

Koviloor Digital Library

வயலி நகரியில் அருள்பெற மயில்மிசை
உதவு பரிமள மதுகர வெகுவித
வனச மலரடி கனவிலும் நனவிலும் மறவேனே
— (குருவு) திருப்புகழ்

காதிய சுவர்க்க நதிவேணி:-

சிவபெருமானுக்குச் சூரியன், சந்திரன், அக்கினி என்ற முச்சுடரே மூன்று கண்கள்: ஒரு சமயம் உமா தேவியார் விளையாட்டாகச் சிவபெருமானுடைய கண்களை மூடினார். அப்பொழுது உலகமெல்லாம் இருண்டு விட்டது. உமாதேவியார் அஞ்சியபொழுது அவருடைய பத்து விரல்களிலிருந்து தீர்த்தம் வெளிப்பட்டுக் கங்கை வெள்ளம் பெருகி உலகங்களை அழிக்கப் பாய்ந்தோடிற்று. அப்பொழுது அரனார் அந்தக் கங்கை வெள்ளத்தைத் தமது சடாமுடியில் இருத்தி உலகத்தோடு அருள் புரிந்தார்.

மலைமகளை ஒருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தால் அவன்சடையிற் பாயுமது என்னேடீ
சலமுகத்தால் அவன்சடையிற் பாய்ந்திலளேல்
தரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாம் சாழலோ
— திருவாசகம்

"இதுவோர் நீத்தம.........யாண்டும் கல்லென
விரைத்தியாரும்
முடிவுறு திறத்தால் அண்டம் முழுவதுங் கவர்ந்த
முன்னாள்
விடமெனப் பரித்தே ஈதுவிமல நீ காத்தி என்றார்
— கந்தபுராணம்

Koviloor Digital Library

அமரர்கள் முறைக்கு இரங்கி கண்ணுதற் கடவுள் கங்கையைச் சடையில் தரித்து. கங்காதரர் எனப் பேர் பெற்ருர்.

விண்ணுக் கடங்காமல் வெற்புக்கடங்காமல்
மண்ணுக் கடங்காமல் வந்தாலும் — பெண்ணை
இடத்திலே வைத்த இறைவர் சடாம
குடத்திலே கங்கையடங் கும்

— காளமேகம்

புற்றிலாடு பணியிட்ட காதுடைய அப்பர்:-

பாம்பு புற்றில் வாழும் இயல்பு உடையது. சிவபெருமான் பாம்பைத் தோடாகக் காதில் அணிந்திருப்பர்.

திருஞான சம்பந்தர் "புற்றில் நாகம் அணிந்தவன் "என்றும்," "பணியிட்ட காது" என்றும், "படந்தாங்கிய அரவக் குழைப்பரமேட்டி" என்றும் "தோடரவத்தொரு காதன்" என்றும் அருளிச் செய்கின்ருர்.

சோமனொடருக்கன் மீனுலவுமிக்க சோலை;—

வயலூரிலே வானளாவிய சோலைகள். அச்சோலை மரங்களின் உச்சியில் சூரியனும், சந்திரனும் நட்சத்திரங்களும் உலாவுகின்றனவாம். இது உயர்வு நவிற்சி அணி.

கருத்துரை

வயலூர் வரதா! வயலூரில் இருந்த அடியேனை விராலிமலைக்கு வருகவென்றழைத்த கருணையை ஒரு பொழுதும் மறவேன்.

Koviloor Digital Library

13

திருவுருப நேராக அழக தான மாமாய
திமிர மோக மானுர்கள் கலைமூடுஞ்

சிகரி யூடு தேமாலை யடவி யூடு போயாவி
செருகு மால ஞசார வினையேனை

கருவி ழாது சீரோதி யடிமை பூண லாமாறு
கனவி லாள்சு வாமீநின் மயில்வாழ்வுங்

கருணை வாரி கூரேக முகமும் வீர மாருத
கழலுநீப வேல்வாகு மறவேனே

சருவ தேவ தேவாதி நமசிவாய நாமாதி
சயில நாரி பாகாதி புதல்வோனே

சதமகீவல் போர்மேவு குலிசபாணி மால்யானை
சகச மான சாரீசெ யிளையோனே

மருவு லோக மீரேழு மளவிடாவொ ஞவான
வரையில் வீசு தாள்மாயன் மருகோனே!

மநுநியாய சோணுடு தலைமையாக வேமேலை
வயலி மீது வாழ்தேவர் பெருமாளே!

பதவுரை

சருவதேவ தேவ ஆதி — எல்லாத் தேவர்களுக்கும்
தேவனுய் விளங்குபவனும், ஆதிபிரானும்

நமசிவாய நாம ஆதி - நமசிவாய என்னும் திருநாமத்தை
உடைய முதல்வரும்

சயிலநாரி பாக ஆதி - மலைமகளாகிய பார்வதி
பாகனுகிய முதல்வரும் ஆகிய சிவபெருமானுடைய

Koviloor Digital Library

புதல்வோனே - புதல்வரே

சதமகீ - நூறு மகங்களை முடித்தவனும்

வல்போர் மேவு - வலிய போரில் ஊடாடுபவனும்

குலிசபாணி - வச்சிராயுதத்தைத் தரித்த கரத்தனுமாகிய இந்திரனுடைய

மால்யானை . பெரிய ஐராவதம் என்னும் யானை மீது

சகசமான - இயல்பாக

சாரீசெய் - சவாரி செய்கின்ற

இளையோனே - இளையவரே

மருவு லோகம் ஈரேழும் - பொருந்திய உலகங்கள் பதினான்கிலும்

அளவிடா ஒரு ஆன - அளவிடுதற்கு முடியாத

வரை இல் - எல்லை அளவுக்கு

தாள் வீசு மாயன்-திருவடியை நீட்டின திருமாலின்

மருகோனே-திருமருகரே

மநுநியாய-மநுநெறியில் ஒழுகும்

சோணாடு-சோழநாடு

தலைமையாகவே-தலைமைத் தன்மை எய்தும் பொருட்டு

மேலைவயலிமீது-மேலை வயலூரில்

வாழ்தேவர் பெருமாளே-வாழ்கின்ற தேவர்களின் தலைவராகிய பெருமையிற் சிறந்தவரே

திரு உருப நேராக-இலட்சுமி தேவியின் வடிவுக்கு நிகராகிய

அழகுதான-அழகைக் கொண்ட

மாமாய-மகாமாய

திமிரமோக-இருள [illegible] த்தை மூட்டுகின்ற

Koviloor Digital Library

மாஞர்கள்-மான் போன்ற பொது மாதர்களின்
கலேமூடும்-ஆடை மூடியுள்ள
சிகரிஊடும்-மலே போன்ற கொங்கையில் தொடர்புகொண்டும்
தே மாலே அடவி ஊடும்-இனிய பூமாலே அணிந்துள்ள காடு போன்ற கூந்தலில் தொடர்பு கொண்டும்
போய் ஆவி செருகும்-ஆவிபோய்ச் சிக்கிக்கொள்ளும்
மால்-காம மயக்கமுள்ள
அனுசார விஜனயேனே-ஆசாரமில்லாத தீவினையாளனே
கருவிழாது-கருவில் விழாத வண்ணம்
சீர் ஓதி-உமது திருப்புகழை அடியேன் ஓதி
அடிமை பூணலாமாறு-உமக்கு அடிமை பூணும் தன்மை எய்தும்படி
கனவில் ஆள் சுவாமீ-என் கனவிலே வந்து ஆண்டருளிய சுவாமியே!
மயில் வாழ்வும்-மயில் மீது வீற்றிருக்கும் திருவோலக்க தெரிசனத்தையும்
கருணை வாரிசூர்-கருணைக் கடல்போல் மிதந்து வழியும்
ஏக முகமும்-ஒரு திருமுகத்தையும்
வீரம் மாருத கழலும்-வீரம் என்றும் நீங்காத திருவடியையும்
நீபம்-கடப்பமலர் மாலையையும்
வேல் வாகு-வேல் தாங்கிய திருத் தோளையும்
மறவேனே-அடியேன் ஒருபொழுதும் மறக்க மாட்டேன்

Koviloor Digital Library

பொழிப்புரை

எல்லாத் தேவர்களுக்கும் தேவனாய் விளங்குபவனும், ஆதி பரமனும், நமசிவாய என்னும் திருநாமத்தையுடைய முதல்வரும், மலைமகளாம் உமாதேவியை ஒரு பாகத்தில் உடைய முதல்வருமாகிய சிவபெருமானுடைய குமாரரே! நூறு யாகங்களை முடித்தவனும், வலிய போரில் ஊடாடு பவனும், வச்சிராயுதத்தை ஏந்துபவனும், ஆகிய இந்திர னுடைய ஐராவதம் என்னும் யானை மீது இயல்பாகச்சவாரி செய்யும் இளம் பூரணரே! பொருந்திய உலகங்கள் பதி னான்கிலும் அளவிட முடியாத அளவில், திருவடியை நீட்டியதிருமாலின் திருமருகரே! மனுநீதிச் சோழன் நீதி யோடு அரசு புரிந்த சோழநாடு சிறப்புறுமாறு மேலை வயலூரில் வாழ்பவரே! தேவர் வணங்கும் பெருமையை உடையவரே! இலட்சுமியின் உருவத்துக்கு நிகரான அழகைக் கொண்டு மகா மாயையாகிய இருண்ட காம இச்சையை ஊட்டும் மான் போன்ற பொது மாதர்களின் ஆடை மூடியுள்ள மலை போன்ற தனங்களில் தொடர்பு கொண்டும், இனிய பூமாலை அணிந்துள்ள காடு போன்ற கூந்தலில் தொடர்பு கொண்டும், உயிரே போய்ச் சிக்கிக் கொள்ளும் காம மயக்கமுடைய அனுசாரனாகிய வினை யேனைக் கருவில் விழாத வண்ணம் உமது திருப்புகழை அடியேன் ஓதித் தேவரீருக்கு அடிமை பூண்டு ஒழுகுமாறு அடியேனுடைய கனவில் வந்து ஆண்டருளிய சுவாமியே மயில்மீது வீற்றிருக்கும் உமது திருவோலக்க தெரிசனத் தையும், கருணைக் கடல் போல் விளங்கும் உமது ஒரு திருமுகத்தையும், வீரம் மாறாத திருவடியையும், கடப்ப மலர் மாலையையும், வேல் ஏந்திய திருப்புயத்தையும் அடியேன் ஒருபொழுதும் மறவேன்.

Koviloor Digital Library

விரிவுரை

திருவு ருபநேராக:-

திரு — இலட்சுமி

பொது மாதர்கள் தங்களை இலட்சுமியைப் போல் அலங்கரித்துக் கொள்வர்.

''இந்திரையுஞ் சரிசொல ஒண்ணாத மடந்தையர்''

— திருப்புகழ்

மாமாய திமிர மோகமானார்கள்:— பெரிய மாயத்தைச் செய்யும் இரண்டு மோகத்தை ஆடவருக்கு மூட்டுபவர்கள். மான் போன்ற மருண்ட பார்வையுடையவர்கள்.

கலை மூடும் சிகரி .—

சிகரி — மலை

இது உவம ஆகு பெயராகத் தனத்தைக் குறிக்கின்றது.

''குன்றுங் குன்றுஞ் செண்டுங் கன்றும் படிவளர் முலை''

— திருப்புகழ்

'கொழுமணியேர் நகையார் கொங்கைக்குன்றிடைச் சென்று குன்றிவிழும் அடியேனை'—திருவாசகம் 6-27

இளைஞர்கள் மனத்தையும், தனத்தையும் அள்ளிக்கொடுத்து பொது மாதர்களின் தனத்தை அடைய ஏங்குவர்.

தேமாலை அடவியூடு :—

தேம்—இனிமை

அடவி—காடு. இது ஆகுபெயராகக் கூந்தலைக் குறிக்கின்றது.

"குழல் காட்டில் கண்ணி வைப்பார்" என்று தாயுமானரும் கூறுகின்றார்.

Koviloor Digital Library

" குழல் காடு ஏந்தும் இளவஞ்சிக் கொடியே "
என்பது குமரகுருபரர் வாக்கு.

ஆவி செருகும் மால் :—
மால்—மயக்கம்

ஆடவர் பொது மாதரின் தனபாரங்களின் அழகிலும், கூந்தலின் வனப்பிலும் தங்கள் உள்ளத்தைச் செருகி மயங்குவர்.

அனுசாரன் :—

ஆசாரம் இல்லாதது அனுசாரம். மனிதனுக்கு ஆசாரம் சிறந்தது. ஆசாரத்தைப் பற்றி ஆசாரக் கோவை என்ற நூல் விரிவாகக் கூறுகிறது.

அந்த நூலில் நீராடும் முறை, உணவு உட்கொள்ளும் முறை. உறங்கும முறை முதலிய விதிமுறைகளை மனிதன் தெரிந்து கொண்டு அதன்படி ஒழுக வேண்டும்.

கருவிழாது சீரோதி :-

அருணகிரியாருக்கு மீண்டும் ஒரு கருவில் சென்று பிறக்கும் தன்மையை நீக்கி முருகப் பெருமான் அருள் புரிந்தார்.

சீரோதி - "திருப்புகழை ஓதி" அல்லது "சிறந்த பொருளை நீ எனக்கு உபதேசித்து" என்றும் பொருள் கொள்ளலாம்.

கனவிலாள் சுவாமி :-

அருணகிரிநாதர் வயலூரில் தங்கியிருந்த பொழுது, மூவருக்கும் தேவருக்கும் எட்டாத முருகப் பெருமான் ஒரு முகமும், நான்கு திருக்கரங்களும், கடப்ப மாலை அணிந்த தோள்களும் உடையவராய்க் கனவிலேகாட்சிதந்து கருணை புரிந்தார்.

Koviloor Digital Library

சுவாமி-

சுவாமி என்ற சொல் அகில உலகங்களையும் தனக்கு உடைமையாக உடையவர் என்று பொருள்படும்.

ஸ்வம் — சொத்து
எல்லாவற்றையும் சொத்தாக உடையவர் சுவாமி

சுவாமி என்ற சொல்லுக்கு நேர் தமிழ்ச்சொல் 'உடையவர்' என்பது.

சுவாமி என்ற பெயர் முருகனுக்கே உரியது. ராமசுவாமி, கிருஷ்ணசுவாமி, கோபாலசுவாமி எல்லாம் முருகனுடைய நாமத்தை இரவலாகப் பெற்றுக்கொண்டதாகும்.

இன்ன சொல்லுக்கு இது பொருள் என்று வரையறுத்துக் கூறுவது நிகண்டு. வடமொழியில் அமரசிம்மம் என்ற நிகண்டை ஜைன முனிவராகிய அமரசிம்மன் இயற்றினர். அதில் தெய்வங்களின் நாமங்களை வரையறுத்துக் கூறுகின்றார்.

முருகனுடைய நாமங்களைக் கூறும் பொழுது "சுவாமீ" என்ற பெயர் முருகனுக்கே உரியது என்று கூறியிருக்கின்றார்.

' தேவசேனு பதிச்சூர
சுவாமீ கஜமுகானுஜ :"

நின் மயில் வாழ்வும் கருணை வாரிகூரேக முகமும் வீர மாருத கழலுநீப வேல்வாகு மறவேனே ;—

அருணகிரிநாதர் தனக்கு முருகப்பெருமான் கனவில் காட்சி தந்த மங்கல வடிவத்தை இந்த அடியில் அழகாகக் கூறு கின்றார். திருவண்ணாமலையில் முருகன் அருணகிரிநாதருக்கு ஆறுமுகங்களுடன் காட்சி அளித்தார்.

Koviloor Digital Library

வயலூரில் ஒரு முகத்துடன் காட்சி அளித்தார். "முருகா! உனது மயில் வாகனக் காட்சியையும், கருணை பொழிகின்ற அழகிய திருமுகத்தையும், வீரம் நிறைந்த திருவடியையும், கடப்ப மலர் மாலையையும், வேலாயுதத்தையும் புயாசலங்களையும் ஒரு பொழுதும் மறவேன்" என்று நன்றி உணர்வுடன் ஆனந்தப் பெருக்கால் கூறுகின்றார்.

சருவ தேவ தேவாதி :—

எல்லாத் தேவர்களுக்கும் சிவபெருமானே தனிப் பெருந் தலைவர்.

"தேவ தேவன்" "நமசிவாய" இவை சிவபெருமானுடைய திருநாமங்களாகும்.

ஏரார் இளங்கிளியே எங்கள் பெருந்துறைக்கோன்
சீரார் திருநாமம் தேர்ந்துரையாய்! — ஆரூரன்

செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான்
செப்புவபோல்
எம்பெருமான் தேவர்பிரான் என்று
— திருவாசகம்

"தேவதேவன் மன்னும் ஊர் திருந்து
காழிசேர்மினே"
— சம்பந்தர் 2-97-2

"நக்கர் தம் நாமம் நமச்சிவாய என்பார் நல்லரே"
— சம்பந்தர் 3-9-9

சயிலநாரி பாகாதி :-

சயிலம் - மலை

திலத்தில் தொடர்புடையது தைலம். அதுபோல் சிலத்தில் தொடர்புடையது சயிலம். சிலா - கல். மலைகளுக்கு

Koviloor Digital Library

அரசன் இமவான் இவன் செய்த தவத்தால் உமாதேவியார் மானச சரோவரத்தில் தாமரை மலரில் குழந்தையாகத் தோன்றி இமவானிடம் வளர்ந்தாள். அகிலாண்டங்களை ஈன்ற உலக அன்னை இமவானுக்கு மகளாக வந்து கருணை புரிந்தாள்.

சதமகீ:-

நூறு யாகங்களைச் செய்தவன் இந்திரனாக வருவான். இந்திரன் நூறு அசுவமேதயாகங்களைச் செய்து இந்திர பதவி பெற்றான். அதனால் சதமகன் என்றும், சதத்ரு என்றும் மகபதி என்றும் அவன் பேர் பெற்றான்.

குலிச பாணி :-

குலிசம் - வச்சிராயுதம்

தேவர்களும் முனிவர்களும் பாற்கடல் கடையும் பொழுது தங்கள் ஆயுதங்களைத் ததீசி முனிவரிடம் ஒப் படைத்திருந்தார்கள். தேவர்கள் நீண்ட காலம் பாற் கடல் கடைந்தபடியால் ததீசி முனிவர் அந்த ஆயுதங்களை யெல்லாம் ஒவ்வொன்றாக உண்டு விட்டார். அந்த ஆயு தங்கள் அவருடைய முதுகு எலும்பில் சேர்ந்து விட்டன.

விருத்திராசுரன் என்ற அசுரன் பேராற்றல் படைத் தவன். இவன் இந்திரனுக்குப் பகைவன். இவனை இந்தி ரனால் வெல்ல முடியவில்லை. ததீசி முனிவருடைய எலும்பை ஆயுதமாகச் செய்து விருத்திராசுரனைக் கொல்ல வேண்டுமென்று வியாழ பகவான் கூறினார். இந்திரன் ததீசி முனிவரை அணுகி அவர் எலும்பை யாசித்தார். அன்புமயமான ததீசி முனிவர் "என் எலும்பை எடுத்துக் கொள்" என்று தன் உயிரைப் பிரமத்துடன் ஐக்கியம் செய்து விட்டார். அவருடைய முதுகெலும்பை எடுத்து

Koviloor Digital Library

வஜ்ராயுதமாகச் செய்து இந்திரன் விருத்திராசுரனை வதைத்தான். ததீசி முனிவருடைய எலும்பு வச்சிராயுதமாக உறுதியுடன் விளங்கியது. அந்த வச்சிராயுதமாகிய குலிசத்தை இந்திரன் ஏந்தி நின்றதனுல் அவனுக்கு வஜ்ரதரன் என்ற பெயர் உண்டாயிற்று.

> அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
> என்பும் உரியர் பிறர்க்கு
>
> — திருக்குறள்

மால் யானை :—

மால் — பெருமை

இந்திரனுடைய யானை ஐராவதம். இது திருப்பாற்கடலில் அமிர்தத்தோடு பிறந்தது. நான்கு தந்தங்களை உடையது. பால்போன்ற வெண்ணிறம் உடையது கிழக்குத் திசையில் உள்ளது.

சாரி செய் இளையோனே :—

முருகப்பெருமான் தனக்கு மாமனுராகிய இந்திரனுடைய ஐராவதம் என்ற யானைமீது சவாரி செய்வாராம். முருகப் பெருமானுடைய வாகனங்களில் யானையும் ஒன்று. திருத்தணியிலும், சுவாமி மலையிலும் கொடிமரத்தருகில் யானை இருக்கும்.

மருவுலோகம் ஈரேழும்
அளவிடவொணுவான வரையில் வீசு தாள் மாய :—

திருமால் மாவலியிடம் வாமனமூர்த்தியாகச் சென்று மூவடி மண் தானமாக வாங்கி விசுவரூபம் எடுத்து உலகங்களையெல்லாம் ஓரடியாக அளந்தார்.

Koviloor Digital Library

“வடிவு குறளாகி மாபலியை

வலிய சிறை யிடவெளியின் முகடுகிழி படமுடிய வளருமுகில்” — சீர்பாத வகுப்பு

மூவடி கேட்டு மூதண்ட கூட முகடு முட்ட
சேவடி நீட்டும் பெருமான் — கந்தரலங்காரம்

மநு நியாய சோணுடு:-

ஆவின் கன்றின் பொருட்டுத்தன் ஒருமகனைப்படுக்க வைத்து, அவன்மீது தேரைச் செலுத்திய மனுநீதிச் சோழனுடைய வரலாற்றை இது குறிக்கின்றது.

ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளானென் பதுமுணரான்
தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் தேராழி யுறஊர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோமற் றெளிதோதான்

திருமலை- திருநகரச் சிறப்பு-44

சோழநாடு நீதிநெறி நிலைத்து நலம் பெறும் பொருட்டு முருகப் பெருமான் வயலூரிலே எழுந்தருளியிருக்கின்றார்.

கருத்துரை

வயலூர் அண்ணலே! அடியேனுடைய கனவிலே அருளிய காட்சியை என்றும் மறவேன்.

Koviloor Digital Library

14

நெய்த்த சுரிகுழ லறலோ முகிலோ
பத்ம நறுநுதல் சிலையோ பிறையோ
நெட்டை யிணைவிழி கணையோ இனிதூறும்

நெக்க அமுதிதழ் கனியோ துவரோ
சுத்த மிடறது வளையோ கமுகோ
நிற்கு மிளமுலை குடமோ மலையோ அறவேதேய்ந்

தெய்த்த இடையது கொடியோ துடியோ
மிக்க திருவரை அரவோ ரதமோ
இப்பொ னடியிணை மலரோ தளிரோ எனமாலாய்

இச்சை விரகுடன் மடவா ருடனே
செப்ப மருளுட னவமே திரிவேன்
ரத்ந பரிபுர இருகா லொருகால் மறவேனே

புத்த ரமணர்கள் மிகவே கெடவே
தெற்கு நரபதி திருநீ றிடவே
புக்க அனல்வய மிகஏடுயவே [illegible]ள்தன்

புத்ரனென இசை பகர்நூல் மறைநூல்
கற்ற தவமுனி பிரமா புரம் வாழ்
பொற்ப கவுணியர் பெருமா னுருவாய் [illegible]வானே

சத்த முடைய சண் முகனே குகனே
வெற்பி லெறிசுட ரயிலா மயிலா
சத்தி கணபதி யிளையா யுளையா பொ[illegible]சூருஞ்

சக்ர த[illegible] அரி மருகா முருகா
உக்ர இறையவர் புதல்வா முதல்வா
தட்ப முன தட வயலூ ரியலூர் [illegible]மாளே!

Koviloor Digital Library

பதவுரை

புத்தர் - புத்தர்களும்

அமணர் - அமணர்களும்

மிகவே கெடவே - மிகவும் அழிவுற

தெற்கு நரபதி - தென்பாண்டி நாட்டிலுள்ள பாண்டிய மன்னன்

திருநீறு இடவே - திருநீறு தரித்துக்கொள்ள

புக்க அனல்வயம் - நெருப்பினிடையே இடப்பட்ட

மிக ஏடு உயவே - திருமுறை எழுதிய ஏடு எய்யாமல் விளங்க

உமையாள் தன் - உமாதேவியின்

புத்ரன் என - பிள்ளை என்று சொல்லும்படி

இசை பகர் நூல் - இசைத் தமிழால் சொல்லப்பட்ட நூலை

மறை நூல் கற்ற - வேத நூலை உணர்ந்த

தவமுனி - தவமுனியே

பிரமாபுரம் வாழ் - பிரமாபுரம் எனும் சீர்காழியில் வாழ்ந்த

பொற்ப - அழகரே

கவுணியர் பெருமான் உருவாய் - கவுணியர் கோத்திரத்தில் பெருமான் என்னும்படி உருவங்கொண்டு

வருவோனே - வந்தவரே

சத்தம் உடைய - சக்தி வாய்ந்த

ஷண்முகனே - ஆறுமுகக்கடவுளே

குகனே - குகப்பெருமானே

வெற்பில் எறி - கிரவுஞ்ச மலை மீது எறிந்த

சுடர் அயிலா - ஒளி பெற்ற வேலை உடையவரே

Koviloor Digital Library

மயிலா - மயில் வாகனரே

சத்தி கணபதி - சக்தி வாய்ந்த கணபதிக்கு

இளையாய் - இளையவரே

உளையாய் - எங்கும் என்றும் உள்ளவரே

ஒளிகூரும் - மிகுந்த ஒளி வீசும்

சக்ர தர - சக்ராயுதத்தை ஏந்திய

அரிமருகா - நாராயணரின் திருமருகரே

முருகா - முருகக் கடவுளே

உக்ர இறையவர் - வெப்பம் நிறைந்த சிவமூர்த்தியின்

புதல்வா - திருக்குமாரரே

முதல்வா - முதல்வரே .

தட்பம் உள - குளிர்ச்சி நிறைந்த

தடவயலூர் - தடாகங்கள் உள்ள

வயலூர் - வயலூர்

இயலூர் - வீற்றிருக்கும்

பெருமாளே - பெருமையை உடையவரே

நெய்த்த-எண்ணெயின் நெய்ப்புக் கொண்டதும்

சுரி-சுருண்ட தன்மையும் உடைய

குழல்-கூந்தலானது

அறலோ-கரு மணலோ

முகிலோ-மேகமோ

பத்ம-தாமரை மலரின்

நறுநுதல்-நறுமணம் வீசும் நெற்றி

சிலையோ-வில்லோ

Koviloor Digital Library

பிறையோ-பிறைச் சந்திரனே

நெட்டை இணை விழி-நீண்ட இரண்டு கண்கள்

கணையோ-அம்போ

பிணையோ-மானே

இனிது ஊறும் இனிப்புடன் ஊறி

நெக்க அமுது இதழ்-நெகிழ்ந்து வரும் வாயூறலாம்
அமுதத்தைத் தரும் இதழ்

கனியோ-கொவ்வைக் கனியோ

துவரோ-பவளமோ

சுத்த மிடறு அது - பரிசுத்தமான கழுத்தானது

வளையோ-சங்கோ

கமுகோ-பாக்கோ

நிற்கும் இளமுலை-நிமிர்ந்து நிற்கும் இளமையான தனங்கள்

குடமோ-கலசமோ

மலையோ-பர்வதமோ

அறவே தேய்ந்து-அடியோடு தேய்ந்து போய்

எய்த்த இடை அது-இளைத்த இடையானது

கொடியோ-பூங்கொடியோ

துடியோ-உடுக்கையோ

மிக்க திரு அரை - சிறந்த அழகிய அல்குலானது

அரவோ - பாம்பின் படமோ

ரதமோ - தேரோ

இப்பொன் அடி இணை - இந்த அழகிய இரு கால்கள்

மலரோ - மலரோ

தளிரோ - தளிரோ

Koviloor Digital Library

என மால் ஆய் - என்றெல்லாம் மயக்கம் கொண்டவனாய்
இச்சை விரகுடன் - காம இச்சையுடன்
மடவார் உடனே - பெண்களுடனே
செப்ப மருளுடன் - பேசுவதற்கு மயக்கம் கொண்டு
அவமே திரிவேன் - வீணாகத் திரிகின்ற அடியேன்
ரத்ந பரிபுர - ரத்தினச் சிலம்பு அணிந்த
இருகால் - இரண்டு திருவடிகளையும்
ஒரு கால் - ஒரு காலமும்
மறவேனே - மறக்க மாட்டேன்

பொழிப்புரை

புத்தர்களும், அமணர்களும் பெரிதும் அழியவும், தென் பாண்டி நாட்டு அரசன் திருநீறு பூசி உய்யவும், நெருப் பினில் இட்ட திருமுறை ஏடு எரியாமல் விளங்கவும், உமா தேவியின் புதல்வன் என உலகம் புகழவும், இசைத் தமிழ்நூல் பாடிய, வேதங்களைக் கற்ற தவமுனியாகவும், சீர் காழியில் வாழ்பவரும், அழகிய கவுணியர் கோத்திரத்தில் வந்தவரும் ஆகிய திருஞான சம்பந்தராக வந்தவரே! சக்தி வாய்ந்த ஆறுமுகக் கடவுளே! குகப் பெருமானே! கிரௌஞ்சகிரியில் எறிந்த ஒளி வீசும் வேலாயுதரே! மயில் வாகனரே! சக்தி வாய்ந்த கணபதியின் தம்பியே! என்றும், எங்கும் உள்ளவரே! ஒளிவீசும் சக்ராயுதத்தை ஏந்திய திருமாலின் திருமருகரே! முருகக் கடவுளே! அனல் வடிவாகிய சிவமூர்த்தியின் புதல்வரே! தனிப் பெருந் தலைவரே! குளிர்ந்த திருக்குளம் சூழ்ந்த வயலூரில் வாழும் பெருமையில் மிகுந்தவரே! எண்ணெய் பூசி நெய்ப்புடன் இருக்கும் கூந்தல் கருமணலோ? கார்மேகமோ? [illegible] பிறை

மதியோ? நீண்ட இருவிழிகள் அம்போ? பிணைமானே? இனிமையுடன் ஊறி நெகிழ்ந்து வரும் வாயூறலாம் அமுதத்தைத் தரும் இதழ் கொவ்வைக் கனியோ? பவளமோ? பரிசுத்தமான கழுத்து சங்கோ? பாக்கோ? நிமிர்ந்து நிற்கின்ற இளமையான தனங்கள் கலசமோ? மலையோ? மிகவும் தேய்ந்து இளைத்த இடை கொடியோ? உடுக்கையோ? சிறந்த அழகிய அல்குல் பாம்பின் படமோ? தேரோ? இந்த அழகிய இரு கால்கள் மலரோ? தளிரோ? என்றெல்லாம் மயக்கம் கொண்டவனாய், காம இச்சையுடன் பெண்களுடனே பேசுவதற்கு மயக்கம் கொண்டு வீணாகத் திரிகின்ற அடியேன், ரத்தினச் சிலம்பணிந்த இரண்டு திருவடிகளையும் ஒரு காலமும் மறக்க மாட்டேன்.

விரிவுரை

நெய்த்த சுரிகுழல் அறலோ முகிலோ ;—

காமதாகம் கொண்டவர் மாதர்களின் அங்கங்களை அமுதம் போல் பாவித்துப் பல உவமைகள் கூறி மயங்குவர்

இந்தப் பாடலைப் போலவே மற்றொரு பாடலும் வருமாறு காண்க.

கரிய மேகம தோ இரு ளோ குழல்
அரிய பூரண மாமதி யோ முகம்
கணைகொ லோ அயில் வேலது வோ விழி யிதழ்பாகோ
— திருப்புகழ்

அறல் - கருமணல்

கூந்தலுக்குக் கருமணலை உவமை கூறுவர்.

இத்திருப்புகழில் முதல் மூன்று அடிகளில் மாதரின் அங்கங்களை வியந்து, நயந்து கூறுவதை விளக்கியுள்ளார்.

Koviloor Digital Library

ரத்ந பரிபுர இருகால் ஒருகால் மறவேனே :-

முருகப் பெருமானுடைய திருவடியில் இரத்தினமணிகள் பதித்த அணிகலன்கள் விளங்கி அழகு செய்கின்றன.

இருகால் ஒருகால் என்ற பிரயோகம் மிகவும் இனிமை யானது உள்ளத்தை உருக்குகின்றது.

"நெஞ்சில் ஒருகால் நினைக்கில்
இரு காலும் தோன்றும்"

என்று நக்கீரரும் கூறுகின்றார்.

புத்தர் அமணர்கள் மிகவே கெடவே :—

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த புத்தர்களும், அமணர் களும் அப்போதிருந்த தமிழ் மன்னர்களைத் தன் வசமாக்கிக் கொண்டு, சைவ சமயத்தை நசுக்கிச் சமயவெறி கொண்டு அலைந்தனர்.

மணிவாசகரால் புத்த சமயமும், ஞானசம்பந்தரால் சமண சமயமும் நிலை குலைந்து அழிந்தன.

திருஞான சம்பந்தர் ஒவ்வொரு திருப்பதிகத்திலும் புத்த மதத்தையும், சமண மதத்தையும் அவைகளின் பிழைகளை யும் கூறிப் புறக்கணிப்பார்.

புத்தரோ டமணைவாதி லழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே

— (வேயுறு) சம்பந்தர்

திருஞானசம்பந்தர் மதுரையில் சமண சமயத்தை அழித்துத் திரும்பி சோழ நாட்டுக்கு எழுந்தருளி வரும் பொழுது புத்தி நந்தி முதலிய புத்தர்கள் வாது செய்து வானிலிருந்து இடிவிழ அழிந்தனர் என்பதை பெரிய புராணத்தில் காண்க.

Koviloor Digital Library

தெற்கு நரபதி திருநீறுஇடவே;—

திருஞானசம்பந்தர் பதினாறுயிரம் அடியார்களுடன் மதுரைக்கு எழுந்தருளித் திருமடத்தில் தங்கியிருந்த பொழுது சமண முனிவர்கள் அபிசாரஹோமம் செய்து அத்தீயை மடத்தில் உள்ள அடியார்கள் மீது ஏவினர்கள். அத்தீஅங்கு அணுகவில்லை.

"ஆதி மந்திரம் அஞ்செழுத் தோதுவார் நோக்கும்
மாதிரத்திலும் மற்றைமந் திரவிதி வருமோ"

— பெரிய புராணம்

"பொய்யராம் அமணர்கொளுவுஞ் சுடர்
பையவே சென்று பாண்டியற்காகவே"

என்று ஞானசம்பந்தப் பெருமானர் பாடியருள அத்தீ பாண்டியனைச் சென்று பற்றியது. பாண்டியன் வெப்பு நோயால் வேதனை அடைந்தான்.

திருஞான சம்பந்தர்

"மந்திரமாவது நீறு" என்றதிருப்பதிகம்பாடிப்பாண்டிய மன்னனுடைய வெப்பு நோயைத்தீர்த்தருளினர்.

புக்க அனல் வயமிக ஏடுயவே :—

"புக்க அனல் புனல் திரு ஏடுயவே" என்றும் பாடம். அமணர்கள் அனல்வாதம் செய்து தோல்வி அடைந்தனர்.

கொழுந்து விட்டெரியும் நெருப்பில்

"போகமார்த்த" என்று தொடங்கும் திருப்பதிகம் எழுதிய ஏட்டைத் திருஞான சம்பந்தர் இட்டார். அந்த ஏடு எரியாமல், கரியாமல் பசுமையாக இருந்தது.

Koviloor Digital Library

உமையாள் தன் புத்ரனென :—

உமாதேவியின் ஞானப்பாலை உண்டதனால் உமாதேவியின் மகனாக ஞானசம்பந்தர் பெருமை பெற்றார்.

" புத்ரன் எனஉரை நுகர்வோன் " என்றும் பாடம்.

கற்ற தவமுனி :—

முனிவன் என்ற சொல்லுக்கு நினைப்பவன் என்று பொருள்.

எப்போதும் இறைவனையே இடைவிடாது நினைந்திருந்தவர் ஞான சம்பந்தர். அதனால் அவர் முனிவர் எனப் பெற்றார். திருஞானசம்பந்தர் தன்னை முனிவன் என்றே பல இடங்களில் கூறுகின்றார்

"பிரமாபுரத்து மறைஞான ஞான முனிவன்"

— (வேயுறு) சம்பந்தர்

பிரமாபுரம் :-

சீகாழி என்ற திருத்தலத்துக்குப் பன்னிரு திருநாமங்கள் உண்டு. அதில் ஒன்று பிரமபுரம் என்பது. பிரமதேவர் வழிபட்டதனால் இப்பெயர் பெற்றது,

திருச் சக்கரமாற்று

பிரமனூர் வேணுபுரம் புகலி வெங்குருப் பெருநீர்த் தோணி
புரமன்னு பூந்தராய் பொன்னஞ் சிரபுரம் புறவஞ் சண்பை
அரன்மன்னு தண்காழி கொச்சை வயமுள்ளிட்டங்
காதியாய
பரமனூர் பன்னிரண்டாய் நின்றதிருக் கழுமலம்நாம்
பரவுமூரே

— சம்பந்தர்

Koviloor Digital Library

பொற்ப :—

பொற்பு-அழகு. முருகன் என்றாலே அழகு என்பது பொருள்.

"முருகுகள் இளமை நாற்றம்
முருகவேள் விழா வனப்பாம்
— நிகண்டு

கவுணியர் பெருமான் :—

திருஞானசம்பந்தர் மறையவர் குலத்தில் கவுணியர் கோத்திரத்தில் திரு அவதாரம் செய்தார்.

"கவுணியர் கோத்திரம் விளங்கச்
செப்புநெறி வழிவந்தார் சிவபாத இருதயர்"
— பெரிய புராணம்

கைதவமில்லாக் கவுணியன் ஞானசம்பந்தன்
— சம்பந்தர்

கவுணியர் பெருமான் உருவாய் வருவோனே:-

முருகப் பெருமான் பிறப்பும் இறப்பும் இல்லாதவர். "பெம்மான் முருகன் பிறவான் இறவான்" என்று அருணகிரிநாதரே கூறுகின்றார். இங்கு முருகப்பெருமான் திருஞானசம்பந்தராக அவதரித்தார் என்று அருணகிரி நாதர் கூறுகின்றார். இது முன்னுக்குப்பின் முரண் போலத்தோன்றும்.

முருகப்பெருமானை வேண்டித் தவம்செய்து முருகனுடைய சாரூபம் பெற்றவர்கள் பலர். அவர்கள் அபர சுப்ரமண்யர் எனப்படுவார்கள். அவ்வாறு சாரூபம் பெற்றவர்களில் ஒருவர் திருஞானசம்பந்தராக அவதரித்தார். அதனால் அருணகிரிநாதர் திருஞானசம்பந்தரை முருகன் என்று உபசரித்துக் கூறுகின்றார் என உணர்க.

Koviloor Digital Library

சத்தமுடைய ஷண்முகனே குகனே :—

இங்கு ஆறுவரிகளில் அருணகிரிநாதர் தேனினும் இனிய செந்தமிழ்ச் சொற்களைத் தொடுத்து வழி எதுகை யாகக் கூறும் அழகு வியத்தற்குரியது.

குகனே குகனே
அயிலா மயிலா
இளையா யுளையா
மருகா முருகா
புதல்வா முதல்வா
வயலூர் இயலூர்

சக்தம் என்ற சொல் சத்தம் என வந்தது.

உளையாய்:—

உளையாய்-என்றைக்கும், எங்கும் உள்ளவர்.
"ஏறூர்ந்தான் ஏறே
உளையாய் என் உள்ளத்துறை"

— நக்கீரர்

கருத்துரை

வயலூர்ப் பெருமானே! உன் மலரடிகள் இரண்டையும் மறவேன்.

Koviloor Digital Library

15

முலைம றைக்கவும் வாசலி லேதலை
மறைய நிற்கவும் ஆசையு ளோரென
முகிழ்ந கைச்சிறு தூதினை யேவவு முகமோடே

முகம முத்தவும் ஆசைகள் கூறவு
நகம முத்தவும் லீலையி லேயுற
முறைம சக்கவும் வாசமு லாமல ரணைமீதே

கலைநெ கிழ்க்கவும் வாலிப ரானவர்
உடல்ச ளப்பட நாள்வழி நாள்வழி
கறைய ழிக்கவு நானென வேயணி விலையீதே

கடிய சத்திய மாமென வேசொலி
யவர்கொ டப்பண மாறிட வீறுடு
கடுக டுத்திடு வாரொடு கூடிய தமையாதோ

மலையை மத்தென வாசுகி யேகடை
கயிறெனத் திரு மாலொரு பாதியு
மருவு மற்றது வாலியு மேலிட அலையாழி

வலய முட்டவோ ரோசைய தாயொலி
திமிதி மித்திமெ ஞவெழ வேயலை
மறுகி டக்கடை யாவெழ மேலெழு மமுதோடே

துலைவ ருத்திரு மாமயில் வாழ்வுள
வயலை யற்புத னேவினை யானவை
தொடர றுத்திடு மாரிய கேவலி மணவாளா

துவள்க டிச்சிலை வேள்பகை வாதிரு
மறுவொ ரெட்டுட ஞயிர மேலொரு
துகள றுத்தணி யாரழ காசுரர் பெருமாளே!

Koviloor Digital Library

பதவுரை

மலையை மத்து என-மந்தரகிரியை மத்தாக நாட்டி
வாசுகியே-வாசுகி எனும் பாம்பை
கடை கயிறு என-கடைகின்ற கயிருகக்கொண்டு
திருமால் ஒரு பாதியும்-திருமால் ஒரு பாதிப் புறமும்
மருவும் மற்றது வாலியும் — பொருந்திய மற்ருெரு பாதிப் புறத்தை வாலியுமாக
மேலிட-முற்பட்டு
அலை ஆழி-அலைகள் வீசும் கடலை
வலய முட்ட-பூவலயம் முழுமையும்
ஒரு ஓசையதாய்-ஒரே பேரொலியாய்
ஒலி திமிதிமித்திம் எனு எழவே-ஓசை திமித்திம் என்று கிளம்பவும்
அலை மறுகிட-சமுத்திரம் சுழலவும்
கடையா-கடைதலை மேற்கோள்ள
மேல் எழும் அமுதோடே-அப்பொழுது மேலே எழுந்த அமுதுடனே
துலைவரும்-ஒப்பாக வந்த
திருமாமயில்-மயிலனைய இலட்சுமிதேவியின்
வாழ்வுள-வாழ்க்கைக்கு இடமான
வயலை அற்புதனே-வயலூரில் வாழும் அற்புதமான மூர்த்தியே
வினையானவை-வினைகளின்
தொடர் அறுத்திடும் அரிய-தொடர்பை அறுத்து எறியும் குருநாதரே !
கேவலி-முத்தியைத் தரவல்ல தெய்வயானையின்

Koviloor Digital Library

மணவாளா-கணவரே !

துவள கடிசிலே-வளைந்துள்ள புதிய கரும்பு வில்லைக் கொண்ட

வேள்பகைவா-மன்மதனுக்குப் பகைவரே !

திரு மறு-அழகிய மச்சரேகை

ஒரு எட்டுடன் ஆயிரம்மேல்-ஆயிரெத்தெட்டு மேலாகக் கொண்டு

ஒருதுகள் அறுத்து-ஒப்பற்ற குற்றமெலாம் அறுத்தெறியும்

அணி ஆர் அழகா-எழில் நிறைந்த அழகரே !

தேவர் பெருமாளே-தேவர்கள் போற்றும் பெருமையில் சிறந்தவரே !

முலே மறைக்கவும் - கொங்கையை மறைக்கவும்

வாசலிலே - வாயில் படியருகில்

தலே மறைய நிற்கவும் , தலே மறையும்படி நிற்கவும்

ஆசையுளோரென - ஆசை கொண்டவர் போல

முகிழ் நகை - புன்னகை என்கின்ற

சிறு தூதினே ஏவவும் - ஒரு சிறிய தூதினை அனுப்பவும்

முகமோடே முகம் அழுத்தவும் - முகத்துடன் முகம் வைத்து அழுத்தவும்

ஆசைகள் கூறவும் - ஆசை மொழிகளைப் பேசவும்

நகம் அழுத்தவும் - நகம் கொண்டு அழுத்தவும்

லீலையிலே உற - காம விளையாட்டிலே பொருந்துமாறு

முறை மசக்கவும் - மாமா, அத்தான் என்று உறவு முறை கூறி மயக்கவும்

வாசம் உலா - நறுமணம் உலாவும்

மலர் அணைமீதே - மலர்ப் படுக்கையின் மீது

கலேநெகிழ்க்கவும் - ஆடையை நெகிழ்ச்சியுறச் செய்தும்

Koviloor Digital Library

வாலிபர் ஆனவர்-இளைஞர்களின்

உடல் சளப்பட-உடலானது துன்பப்படும்படி

நாள்வழி நாள்வழி-நாள்போக நாள்போக

கறை அழிக்கவும்-அவர்களது உதிரத்தைக் கெடச்செய

நான் எனவே-நான் இருக்கின்றேன் என்பது போல

அணி விலைசுதே-நெருங்கி, எனக்குத் தரவேண்டிய பொருள் இதுவே

கடிய சத்தியம் ஆம்-நான் கூறுவது கண்டிப்பான உண்மை மொழியாம்

எனவே சொலி-என்றெல்லாம் சொல்லி

அவர் கொடு-அவர்கள் கொடுத்து வருகின்ற

பணம் மாறிட-பணம் வரவு இன்றி மாறியவுடன்

வீறெடு-வெறுப்பும், கர்வமும் கலந்த தன்மையுடன்

கடுகடுத்திடுவாரொடு-சிடுசிடு என்று சினந்து பேசு பவரோடு

கூடியது-சேர்ந்து வாழ்ந்தது

அமையாதோ-இனியேனும் முடிவு அடையாதோ?

பொழிப்புரை

மந்தர மலையை மத்தாக நாட்டி வாசுகி என்ற நாக ராஜனைக் கடைகயிருகக் கொண்டு, திருமால் ஒரு புற மும், வாலி ஒரு புறமும் நின்று, பூமி வட்டம் முழுவதும் பேரொலி எழுந்து திமி திமி திம் என்று ஒலிக்கவும்' அலைகள் சுழலவும், கடலைக் கடைந்த பொழுது, மேலே எழுந்த அமுதத்துடன் ஒப்பாக வந்த மயில் போன்ற இலட்சுமி வாழ்கின்ற வயலூரில் எழுந்தருளிய அற்புத

Koviloor Digital Library

மூர்த்தியே! வினைகளின் தொடர்பை அறுத்து எறியும் குருநாதரே! முத்தியைத் தரவல்ல தெய்வயானையின் மணவாளரே! வளைந்துள்ள சிறந்த கரும்பு வில்லைக் கொண்ட மன்மதனுக்குப் பகைவரே! அழகிய மச்சரேகை ஆயிரத்தெட்டுக்கு மேலாகக் கொண்டு, குற்றமற்ற அழகைக் கொண்ட பேரழகரே! தேவர்கள் தொழும் பேரழகு உடையவரே! முலை மறைக்கவும், வாயிற்படி அருகில் தலை மறையும்படி நிற்கவும், ஆசை கொண்டவர் போல் புன்னகை என்ற ஒரு சிறிய தூதை அனுப்பவும், முகத்துடன் முகத்தை அழுத்தவும், ஆசை மொழிகளைப் பேசவும், நகங்கொண்டு அழுத்தவும் காம லீலையில் பொருந்துமாறு, மாமா, அத்தான் என்று உறவுமுறை கூறி மயக்கவும், நறுமணம் வீசும் மலர்ப் படுக்கையின் மேலே ஆடையை நெகிழச் செய்தும், இளைஞர்களின் உடல் துன்பப்படும்படி நாள் போக நாள் போக உதிரத்தைக் கெடுக்க நான் இருக்கின்றேன் என்பது போல நெருங்கி எனக்குத் தரவேண்டிய பொருள் இதுவே என, கண்டிப்பான மெய்ம்மொழி என்றெல்லாம் சொல்லி, அவர்கள் கொடுத்து வருகிற பணம் கொடுக்க முடியாமல் போனவுடன் கர்வத்துடன் கடுகடுத்துப் பேசும் விலை மாதர்களுடன் ஒழுகியது இனியேனும் முடிவு அடையாதோ!

விரிவுரை

சளப்பட :

சளம்-துன்பம்

"சளநீ காணத் தரியாயே"

என்பது வில்லிபாரதம்.

கறை அழிக்கவும் ;-

கறை - உதிரம்

Koviloor Digital Library

பொது மாதரிடம் பழகும் இளைஞர்களின் உதிரம்
நாளாக நாளாகக் கெட்டு அழியும்

"புறங்கறை யொழுகு செம்புண்"

பிரபுலிங்கலீலை - துதி 15)

நானெனவே அணி :-

அணி - அண்ணி என்ற சொல் அணி என்று
வந்தது. அண்ணுதல் - நெருங்குதல்

"அண்ணிப்பான் தாள்வாழ்க"

— திருவாசகம்

கடிய சத்திய மாமெனவே சொலி :-

விலை மாதர்கள் தன்பால் வரும் ஆடவர்களிடம் "எனக்கு வேண்டிய பொருள் இது; கண்டிப்பாகக் கூறுகின்றேன்; சத்தியமாகச் சொல்லுகிறேன்" என்று சொல்லிப் பணம் பறிப்பார்கள்.

அவர் கொடப்பண மாறிட:-

அவர் கொடு அப்பணம் - அவர்கள் கொடுக்கின்ற அப்பணமானது கொடுக்க இயலாத நிலை வருமானால் அவர்கள் வேகப்படுவார்கள். கடுகடுப்பார்கள்.

மலையை மத்தென வாசுகியே கடை கயிறென:

தேவர்களும், அசுரர்களும் சேர்ந்து அமிர்தம் பெற
வேண்டிக், கடலைக் கடையத் தொடங்கினார்கள்.

மந்தரகிரி மத்தாகவும், வாசுகி தாம்பாகவும், சந்திரன் தறியாகவும் கொண்டு கடலைக் கடைந்தார்கள். அப்பொழுது திருமால் ஆமை வடிவங் கொண்டு மத்தைத் தாங்கினார்.

Koviloor Digital Library

மந்தர நெடுவரை மத்து வாசுகி
அந்தமில் கடைகயிறு அடைகல் ஆழியான்
சந்திரன் தூண்எதிர் தருக்கின் வாங்குநர்
இந்திரன் முதலிய அமரர் ஏனையோர் ''

— கம்பராமாயணம்.

தேவர்கள் வால்புறமும், அசுரர்கள் தலைப்புறமும் இருந்து பலகாலம் கடைந்து அயர்ச்சியுற்றுர்கள். அப்பொழுது அங்கு சிவபூசை செய்ய வந்த வாலி தேவர்களைப் பார்த்து 'என்ன செய்கின்றீர்கள்?' என்று வினவினுன்.

தேவர்கள் ''அமுதம் பெறவேண்டிக் கடல் கடைகின்றோம்'' என்றுர்கள். வாலி ஏளனமாகச் சிரித்துக் ''கடல் கடைய இத்தனை பேர் வேண்டுமா?'' என்று கூறித் தான் ஒரு புறமும் திருமால் ஒரு புறமும் நின்று வேகமாகக் கடைந்து அமிர்தம் வருமாறு செய்தான்.

பெயர்வுற வலிக்கவும் மிடுக்கில் பெற்றியார்
அயர்வுற லுற்றதை நோக்கி யான்அது
தயிரெனக் கடைந்து அவர்க்கமுதம் தந்தது
மயிலியல் குயில்மொழி மறக்க லாவதோ?

— கம்பராமாயணம்

அமுதோடே துலைவரு திருமாமயில் :—

துலைவரு—ஒப்பாக வந்த
இலட்சுமி தேவி அமிர்தத்துடன் பிறந்தவள்.

மாமயில் வாழ்வுள வயலை:—

வ்யலூரில் திருமகள் இடையருது உறைகின்ருள். மருமகனைக் காண மாமியார் வருவாள். மருகனுகிய

Koviloor Digital Library

முருகன் வயலூரில் வாழ்வதனால் மாமியாகிய இலட்சுமி வயலூரில் வந்து வசிக்கின்றாள் என்று உணர்க.

வினையானவை தொடர் அறுத்திடும் ஆரிய :

துன்பத்துக்குக் காரணம் வினை. விளக்கு எரிவதற்குக் காரணம் எண்ணெய். எண்ணெய் இல்லையானால் விளக்கு எரியாது. வினை இல்லையானால் துன்பம் கிடையாது. எனவே துன்பத்துக்குக் காரணமான வினையை வேலவன் வேருடன் அறுத்து எறிவான்.

"வினையோடவிடும் கதிர்வேல் மறவேன்"

— அநுபூதி

ஆரியன்—குரு

கேவலி மணவாளா :

கேவலம்-முத்தி

முத்தியைத் தரவல்லவள் தெய்வயானை. அதனால் தெய்வயானை அம்மையார் முத்தி மாது எனப் பேர் பெறுவர்.

துவள கடிச்சிலை வேள்பகைவா:

துவள்-வளைந்துள்ள

கடி-புதுமை வாய்ந்த

சிலை-கரும்பு வில்

மன்மதன் கரும்பு வில்லை வளைத்து மலர்க்கணை தூவி ஆன்மாக்களைச் சிற்றின்பத்தில் அழுத்துவான்.

முருகப் பெருமான் ஞானவேல் கொண்டு ஆசா பாசங்களை அறுத்துப் பேரின்பத்தை வழங்குகிறவர். அதனால் "வேள் பகைவா" என்று கூறுகின்றார்.

Koviloor Digital Library

திருமறுவொரெட்டுடனுயிரம் ;

திருமறு—சிறப்பான மச்சரேகை. உத்தமான ஆண்களுக்கு உடம்பில் மச்ச ரேகைகள் இருக்கும். மிக உயர்ந்தவர்களுக்கு ஆயிரத்தெட்டு ரேகைகள் இருந்து அணி செய்யும்,

'மார்பிற் செம்பொறி'

— திருமுருகா - 104.

இது இறைவனுக்கு ஓர் அழகு - உத்தம லக்ஷணம். ஜைன மூர்த்திக்கும் இது உண்டு.

செம்பொன் வரைமேல் பசும்பொன் எழுத்திட்டதே போல்
அம்பொன் பிதிர்வின் மறு ஆயிரத்தெட்டணிந்து
வெம்புஞ் சுடரிற் சுடருந் திருமூர்த்தி விண்ணோர்
அம்பொன் முடிமேல் அடித்தாமரை சென்னி வைப்பாம்
—சிந்தா

துகளறுத்தணி ஆரழக :

துகள் — குற்றம்

குற்றமெலாம் அறுத்தெறியும் அழகைக்கொண்ட பேரழகன் முருகன்.

கருத்துரை

வயலூர் அண்ணலே! கடுகடுத்திடும் விலை மாதரின் மயல் நீங்க அருள் புரிவாய்.

Koviloor Digital Library

16

மேகலை நெகிழ்த்துக் காட்டி வார்குழல் விரித்துக் காட்டி
வேல்விழி புரட்டிக் காட்டி யழகாக
மேனியை மினுக்கிக் காட்டி நாடக நடித்துக் காட்டி
வீடுக ளழைத்துக் காட்டி மதராசன்
ஆகம முரைத்துக் காட்டி வாரணி தனத்தைக் காட்டி
யாரொடு நகைத்துக் காட்டி விரகாலே
ஆதா மனத்தைக் காட்டி வேசைகள் மயக்கைக் காட்ட
ஆசையை யவர்க்குக் காட்டி யழிவேனோ
மோகன விருப்பைக் காட்டி ஞானமு மெடுத்துக் காட்டி
மூதமிழ் முனிக்குக் கூட்டு குருநாதா!
மூவுல களித்துக் காட்டி சேவலை யுயர்த்திக் காட்டு
மூரிவில் மதற்குக் காட்டு வயலூரா
வாகையை முடித்துக் காட்டிக் கானவர் சமர்த்தைக் காட்டி
வாழ்மயில் நடத்திக் காட்டு மிளையோனே
மாமலை வெதுப்பிக் காட்டித் தானவர் திறத்தைக் காட்டி
வானவர் சிரத்தைக் காத்த பெருமாளே

பதவுரை

மோகன விருப்பைக் காட்டி - ஆசை மிக்க விருப்பத்துடனே

ஞானமும் எடுத்துக் காட்டி - ஞானசாத்திரங்களை உபதேசம் செய்து

மூதமிழ் முனிக்குக் கூட்டு - பழந்தமிழ் வல்ல அகத்திய முனிவருக்குப் பிரணவ ஞானத்தைத் தெரிவித்த

Koviloor Digital Library

குருநாதா - குருநாதரே

மூவுலகு அளித்துக் காட்டி - மூன்று உலகங்களையும் காத்துக் காட்டி

சேவலை உயர்த்திக் காட்டு - சேவற்கொடியை உயர்த்திக் காட்டும்

மூரிவில் - வலிமைகொண்ட கரும்புவில்லை

மதற்குக் காட்டும் - மன்மதனுக்குப் படையாகத் தந்து உதவிய

வயலூரா - வயலூர்ப் பெருமானே!

வாகையை முடித்துக் காட்டி - வேடர்களுக்குத் தெரியாத வாறு வள்ளியைக் கவர்ந்ததால் தமது வெற்றியைக்காட்டி

கானவர் சமர்த்தைக் காட்டி - வேடர்களின் திறம் தமது திறத்தின் முன்பு எவ்வளவு சிறியது என்பதைக்காட்டி

வாழ் மயில் நடத்திக் காட்டும் - நல்வாழ்வு பெற்ற மயிலை உலகெலாம் நடத்திக் காட்டிய

இளையோனே - இளம் பூரணரே!

மாமேலை வெதுப்பிக் காட்டி-பெரிய கிரவுஞ்சமலை வெந்து போகும்படி செய்து காட்டி

தானவர் திறத்தைக் காட்டி - அசுரர்களின் திறமை யெல்லாம் இவ்வளவு தான் என்பதையும் காட்டி

வானவர் சிரத்தைக் காத்த - தேவர்களின் தலையைக் காத்த

பெருமாளே - பெருமையில் மிக்கவரே!

மேகலை நெகிழ்த்துக் காட்டி - அணிந்துள்ள இடை யணியைத் தளர்த்திக் காட்டி

வார் குழல் விரித்துக் காட்டி - நீண்ட கூந்தலை விரித்துக் காட்டி

வேல்விழி புரட்டிக் காட்டி-வேல் போன்ற கண்களை புரட்டிக் காட்டி

Koviloor Digital Library

அழகாக - அழகு பொலியும்படி.

மேனியை மினுக்கிக் காட்டி-உடலை அழகு செய்துகாட்டி

நாடகம் நடித்துக் காட்டி-நடனங்களை ஆடிக் காட்டி

வீடுகள் அழைத்துக் காட்டி-தமது வீடுகளுக்கு அழைத்துக் காட்டி

மதராசன்-மன்மத ராசனுடைய

ஆகமம் உரைத்துக் காட்டி-சாத்திர நூலை விளக்கி எடுத்துக் காட்டி

வார் அணி தனத்தைக் காட்டி-ரவிக்கை அணிந்த கொங்கையைக் காட்டி

ஆரொடும் நகைத்துக் காட்டி-எல்லாருடனும் சிரித்துக் காட்டி

விரகாலே-தந்திர வகையினால்

ஆதர மனத்தைக் காட்டி-அன்பு வைத்துள்ளது போல் தமது மனத்தைக் காட்டி

வேசைகள் மயக்கைக் காட்ட-வேசையர்கள் காம மயக்கத்தை ஊட்ட

ஆசையை அவர்க்குக் காட்டி-நான் எனது ஆசையை அவர்களிடம் காட்டி

அழிவேனோ-அழிந்து போகக் கடவேனோ?

பொழிப்புரை

பழந்தமிழ் வல்ல அகத்திய முனிவருக்கு மிகுந்த விருப்பத்துடன் ஞான சாத்திரங்களையும், தமிழ் இலக்கணங்களையும் உபதேசித்த குருநாதரே! மூன்று உலகங்களையும் காத்தருளிச் சேவலைக் கொடியாக உயர்த்தி, மன்மதனுக்கு வலிய கரும்பு வில்லைப் படையாகத் தந்து உதவிய வயலூர் வரதரே! கானகத்தில் வேடர்களின் ஆற்றலை வெளிப்படுத்தி

Koviloor Digital Library

வள்ளியைக் கவர்ந்து வெற்றியைக் காட்டி, நல்வாழ்வு பெற்ற மயிலை நடத்திக் காட்டும் இளையவரே! பெரிய கிரவுஞ்சமலையை வேகும்படிச் செய்து, அசுரர்களின் திறமையெல்லாம் இவ்வளவுதான் என்பதைக்காட்டித் தேவர்களின் தலைகளைக் காத்தருளிய பெருமை மிக்கவரே! இடையில் அணிகின்ற மேகலாபரணத்தைத் தளர்த்திக் காட்டியும் நீண்ட கூந்தலை விரித்துக் காட்டியும், வேல் போன்ற கண்களைப் புரட்டிக் காட்டியும், அழகிய உடம்பை அலங்கரித்துக் காட்டியும், நடனக் கலையைக் காட்டியும், வீடுகளுக்கு அழைத்து மன்மதனுடைய காம சாத்திரத்தை எடுத்துரைத்து, ரவிக்கை அணிந்த தனங்களைக் காட்டியும், எல்லாரோடும் நகைத்துப் பேசியும், தந்திரத்தால் அன்பு வைத்தது போல் தமது மனத்தைக் காட்டியும், மயக்கத்தைச் செய்யும் பரத்தையரிடம் அடியேன் அன்பு வைத்து அழியக் கடவேனோ?

விரிவுரை

மேகலை நெகிழ்த்துக் காட்டி:

மேகலை-உடுத்தியிருக்கின்ற ஆடைக்குமேல் ஐந்து வடம், ஏழுவடம், ஒன்பது வடம் என்று தங்கள் தங்கள் தகுதிக்கேற்பப் பொன்னாலும், மணியாலும் பெண்கள் இடை யில் அணிந்துகொள்ளும் அணிகலம்.

இத்திருப்புகழில் முதலில் வரும் நான்கு அடிகளில் பரத்தையரின் இயல்பைக் கூறுகின்றார்.

மோகன விருப்பைக்காட்டி ஞானமெடுத்துக்
காட்டி மூதமிழ்முனிக்குக் கூட்டு குருநாதா:

அகத்தியருக்கு முருகப்பெருமான் பிரணவ மந்திரத்தின் உட்பொருளை உபதேசித்து அருளினர்.

Koviloor Digital Library

அகத்தியர் தென் திசைக்கு வரும்பொழுது முருகப் பெருமான் அவருக்குச் செந்தமிழ் இலக்கணங்களை விரித்து உரைத்து அருளினார்.

"செந்தமி ழென்னும் திருத்தகு பாடை
தந்தருள் ஞானமுந் தந்தரு ளென்றான்"

"செந்தமி ழுஞ்சிவ ஞானமும் வேட்பின்
எழுந்துயர் காவி யிருங்கிரி யண்மின்
தழுந்தரமுண்டு"

"வேலிறைவன் இயம்பிய ஞான முற்றுணர்ந்து
......பொதியம் அடுத்து முத்தமிழை வளர்த்து
வாழ்ந்திருந்தனன் முனிவன்"

— தணிகைப்புரா - அகத்தியன் 4, 5, 512

சிவனைநிகர் பொதியவரை முநிவனக
மகிழ இரு செவிகுளிர இனியதமிழ்
பகர்வோனே — (அறிவழிய) . திருப்புகழ்

முவுலகளித்துக் காட்டி :-

மூவுலகம் - சுவர்க்க, மத்திய, பாதளம். கர்ம காண்ட உலகம், பக்தி காண்ட உலகம், ஞான காண்ட உலகம், இயல் உலகம், இசை உலகம். நாடக உலகம் இத்தகைய மூன்று உலகங்களையும் முருகப் பெருமான் காத்தருள் புரி கின்றான்.

"சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகே"

—குறுந்தொகை
கடவுள் வாழ்த்து

Koviloor Digital Library

சேவலை உயர்த்திக் காட்டும் :-

சிவபெருமானுக்கு இடபக் கொடி. திருமாலுக்கு கருடக் கொடி. பிரமதேவனுக்கு அன்னக்கொடி. இந்திரனுக்கு இடிக் கொடி. இராமருக்கு கோவிதாரக் கொடி. தருமருக்கு முரசுக் கொடி. பீமனுக்குச் சிம்மக்கொடி. அர்ஜுனனுக்கு அநுமக் கொடி. கர்ணனுக்கு கச்சைக் கொடி. துரியோதனனுக்கு அரவக் கொடி. ஜெயத்ரதனுக்குப் பன்றிக் கொடி. பீஷ்மருக்குப் பனைக்கொடி. துரோணருக்கு வேதக்கொடி. முருகவேளுக்கு சேவற்கொடி. ஆனால் எல்லாக் கொடிகளும் துணியால் எழுதிக் கட்டியவை. முருகப்பெருமான் ஒருவருக்குத்தான் உயிருடன் கூடியதும், கொக்கரக்கோ என்று ஓங்கார ஒலியை எழுப்பும் கோழிக்கொடி. அதனால் எல்லாக் கொடிகளைப் பார்க்கினும் சேவற் கொடி சிறந்தது.

நாம் பிரயாணம் பண்ணும் காருக்கு ஹாரன் துணியினால் எழுதிக் கட்டினால் எப்படியிருக்கும்? அதுபோலத்தான் அந்தக் கொடிகள்.

மயிலெடுத்து அயிலெடுத்து முருகன் பவனி வரும்போது 14 உலகங்களும் அதிருமாறு சேவல் கூவி முருகப் பெருமானுடைய வரவைத் தெரிவிக்கும்.

குருகுகொடியுடன் மயிலிலேறி மந்தரம்
புவனகிரி சுழலமறையா யிரங்களும்
குமரகுரு எனவலிய சேடனஞ்சவந்
திடுவோனே

— (ஒருவரையும்) திருப்புகழ்

Koviloor Digital Library

மூரிவில் மதற்குக் காட்டு :—

மூரி—பெருமை, மன்மதனுக்குக் கரும்பு வில்லைக் கொடுத்து உயிர்கள் பிறந்து அறிவு நலம் பெறும் பொருட்டு ஆட்சி புரிய முருகவேள் அருள் புரிந்தார்.

வாகையை முடித்துக் காட்டி
கானவர் சமர்த்தைக் காட்டி:—

வேடர் பால் வளர்ந்த வள்ளியை முருகப்பெருமான் கவர்ந்து சென்று தன் வெற்றியைக் காட்டி அருளினார். வேடர்கள் வள்ளியைக் கவர்ந்தது வேலவன் என்று அறியாமல் போர் புரிந்தபொழுது அவர்களுடைய திறமை அற்பம் என்பதை அவர்களுக்குக் காட்டி அருளினார்.

வாழ் மயில்:—

ஆயிரத்தெட்டு அண்டங்களையும், நூற்றி எட்டு யுகங்களாகத் தேவர்களை அடக்கி ஒடுக்கிச் சூரபன்மன் ஆட்சி புரிந்தான். இறுதியில் வேலினால் பிளக்கப்பட்டு மயிலும், சேவலுமாகிக் கொடியவன் அடியவனானன்.

அவன் முற்பிறப்பில் மயிலாக இருந்து சுமந்து ஆறுமுகனுக்கு அடிமை பூண்டு ஒழுகப் பன்னெடுங்காலம் தவம் செய்தவன். அத்தவத்தின் பயனாக மூவருக்கும், தேவருக்கும் எட்டாத முழுமுதற் கடவுளை மயிலாகச் சுமக்கும் பெருவாழ்வைப் பெற்றனன். அதனால் வாழ்மயில் என்று கூறுகின்றார்.

கருத்துரை

வயலூர் வள்ளலே! மாதர் மயலற அருள் புரிவாய்.

Koviloor Digital Library

17

வாளின் முனையினு நஞ்சினும் வெஞ்சம
ராச நடையினு மம்பதி னும்பெரு
வாதை வகைசெய்க ருங்கெணு மெங்கணு
மரிதான

வாரி யமுதுபொ சிந்துக சிந்தசெ
வாயு நகைமுக வெண்பலு நண்புடன்
வாரு மிருமெனு மின்சொலு மிஞ்சிய
பனிநீருந்

தூளி படுநவ குங்கும முங்குளி
ரார மகில்புழு கும்புனை சம்ப்ரம
சோதி வளர்வன கொங்கைமங்கையு
மெவரேனுந்

தோயு மளறெனி தம்பமு முந்தியு
மாயை குடிகொள்கு டம்பையுள் மன்பயில்
ஞானி யரையெதிர் கண்டும ருண்டிட
லொழிவேனோ

காளி திரிபுரை யந்தரி சுந்தரி
நீலி கவுரிப யங்கரி சங்கரி
காரு ணியசிவை குண்டலி சண்டிமை
த்ரிபுராரி

காதல் மனைவிப ரம்பரை யம்பிகை
ஆதி மலைமகள் மங்கலை பிங்கலை
கானநடனமு கந்தருள் செந்திரு
அயன்மாது

Koviloor Digital Library

வேளி விரதிய ருந்ததி யிந்திர

தேவி முதல்வர்வ ணங்குத்ரி யம்பகி

மேக வடிவர்பின் வந்தவன் தந்தரு

விளையோனே

வேலு மயிலு நினைந்தவர் தந்துயர்

தீர வருள்தரு கந்தநி ரந்தர

மேலை வயலையு கந்துள நின்றருள்

பெருமாளே !

பதவுரை

காளி - காளி தேவியும்

திரிபுரை - மூன்று உலகங்களுக்கும் தலைவியும்

அந்தரி - பராகாச வடிவை உடையவளும்

சுந்தரி - அழகியவளும்

நீலி - நீலநிறத்தை உடையவளும்

கவுரி - பொன்னிறம் படைத்தவளும்

பயங்கரி - பயத்தைச் செய்பவளும்

சங்கரி - சுகத்தைச் செய்பவளும்

காருணிய சிவை - கருணை நிறைந்த சிவாம்பிகையும்

குண்டலி : சுத்தமாயையாம் சக்தியும்

சண்டிகை - துர்க்கையும்

த்ரிபுராரி - மூன்று புரங்களை எரித்த சிவபெருமானுடைய

காதல் மனைவி-விருப்பமுள்ள மனைக்கிழத்தியும்

பரம்பரை-முழு முதல் தேவியும்

அம்பிகை-அம்பிகையும்

ஆதி-முதல்வியும்

Koviloor Digital Library

மலைமகள்-பர்வதராஜ குமாரியும்

மங்கலை-என்றும் சுமங்கலியாய் இருப்பவளும்

பிங்கலை-தங்க நிறம் உடையவளும்

கான நடனம் உகந்தவள்-மயானத்தில் நடனம் செய்வதில் பிரியம் கொண்டவளும்

செந்திரு-இலட்சுமியாலும்

அயன்மாது-சரஸ்வதியாலும்

வேளின் இரதி-மன்மதனுடைய மனைவி ரதியாலும்

அருந்ததி-அருந்ததியினாலும்

இந்திரதேவி-இந்திரன் தேவியாகிய இந்திராணியாலும்

முதல்வர்-முதலிய பெண்களால்

வணங்குத்ரியம்பகி-வணங்கப் பெறுகின்ற மூன்று கண்களை உடையவளும்

மேகவடிவர் பின் வந்தவள்-நீலமேக நிறம் கொண்ட திருமாலின் தங்கையுமாகிய உமாதேவியார்

தந்தருள் இளையோனே-பெற்றருளிய புதல்வரே!

வேலுமயிலு-வேலையும் மயிலையும்

நினைந்தவர்தம் துயர்-தியானிப்பவர்களின் துயரங்கள்

தீர அருள்தரு-தீருமாறு அருள்பாலிக்கின்ற

கந்த-கந்தநாயகனே

நிரந்தர-முடிவில்லாதவரே!

மேலை வயலை-மேலை வயலூர் என்னும் திருத்தலத்தில்

உகந்து நின்று அருள்-உள்ளம் உவந்து மகிழ்ந்து எழுந்தருளியுள்ள

பெருமாளே-பெருமையில் சிறந்தவரே!

வாளின் முனையிலும்-வாளாயுதத்தின் முனையைக்காட்டிலும்

Koviloor Digital Library

நஞ்சினும்-விஷத்தைக் காட்டிலும்

வெம் சமராஜ நடையினும்-கொடிய யமராஜனுடைய தொழிலைக் காட்டிலும்

அம்பதினும் - அம்பைக் காட்டிலும்.

பெரு வாதை செய் - பெரிய துன்ப வகைகளைச் செய்கின்ற

கரும் கணும் - கரிய கண்களும்,

எங்கணும் அரிது ஆன - எங்கும் கிட்டுதற்கு அரிய,

வாரி அமுது : கடல் அமுதம்

பொசிந்து கசிந்த - வெளிப்பட்டு வடியும்,

செவ்வாயும் - சிவந்த வாயும்,

நகைமுகம் - சிரித்த முகமும்

வெண்பலும் - வெண்மையுடைய பற்களும்

நண்புடன் - நட்பைக் காட்டி

வாரும் இரும் எனும் இன்சொலும் - "வாரும்! இரும்!" என்று கூறுகின்ற இனிய மொழிகளும்

மிஞ்சிய பனி நீரும் - மிகுந்த பன்னீரும்

தூளிபடும் - பூந்தாதுடன் கூடிய

நவ குங்குமமும் - புதிய செஞ்சாந்தும்

குளிர் ஆரம் - குளிர்ந்த சந்தனமும்

அகில் - அகிலும்

புழுகும் - புனுகு சட்டமும்

புனை - அணிகின்ற

சம்ப்ரம - ஆடம்பரத்துடன் கூடிய

சோதிவளர் - ஒளிபெருகும்

அங்கையும் - அழகிய கைகளும்

Koviloor Digital Library

எவரேனும் - யாராக இருந்தாலும்

தோயும் அளறு என் - கலவி செய்கின்ற சேறு என்று எண்ணத்தக்க

நிதம்பமும் - அல்குலும்

உந்தியும் - கொப்பூழும்

மாயை குடிகொள் - உலக மாயை குடிகொண்டுள்ள

குடம்பையுள் மன்பயில் - இந்த உடம்பில் நன்கு காலம் கழிக்கும்

சூனியரை - வேசியரை

எதிர் கண்டு - எதிரே கண்டு

மருண்டிடல் - நான் மயங்குவதை

ஒழிவேனோ - ஒழிக்க மாட்டேனோ?

பொழிப்புரை

காளிதேவியும், மூன்று உலகங்களுக்கு அன்னையும் ஞான ஆகாச வடிவத்தை உடையவளும், அழகியும், நீல நிறம் கொண்டவளும், பொன்னிறம் படைத்தவளும், பயத்தைச் செய்பவளும், சுகத்தைச் செய்பவளும், கருணை நிறைந்த சிவாம்பிகையும், சுத்த மாயையாம் சக்தியும், துர்க்கையும், முப்புரத்தை எரித்த சிவபெருமானுடைய அன்புமிகுந்த மனைக்கிழத்தியும், முழுமுதல் தேவியும், அம்பிகையும், முதல்வியும், பர்வதராஜ குமாரியும், நித்திய சுமங்கலியும், தங்கநிறம் படைத்தவளும், மயானத்தில் நடனம் செய்பவளும், இலட்சுமி, சரஸ்வதி, ரதிதேவி, அருந்ததி, இந்திராணி முதலிய தேவமாதர்கள் வணங்குகின்ற மூன்று கண்களை உடையவளும், நீல நிறத் திருமாலின் தங்கையுமாகிய உமாதேவியார் பெற்ற இளம் பூரணரே! வேலையும், மயிலையும் தியானிக்கும் அடியார்

Koviloor Digital Library

களின் துயர் தீர அருள்புரிகின்ற கந்தக் கடவுளே! முடிவில்லாதவரே! மேலை வயலூரில் மகிழ்ந்து எழுந்தருளுகின்ற பெருமை மிக்கவரே! வாளாயுதத்தின் நுனியைக் காட்டிலும், விஷத்தைக் காட்டிலும்,வெய்ய யமராசனுடைய கொடுந் தொழிலைக் காட்டிலும், அம்பைக் காட்டிலும் பெரிய துன்பத்தைச் செய்கின்ற பெரிய கண்களும், எங்கும் கிட்டுதற்கு அரிய கடலமுதம் வெளிப்பட்டு வடியும் சிவந்த வாயும், சிரித்த முகமும், வெண் பற்களும், நட்புடன் 'வாரும், இரும்' என்று கூறும் இனிய சொற்களும், மிகுந்த பன்னீரும், பூந்தாதுகள் கூடிய புதிய செஞ்சாந்தும், குளிர்ந்த சந்தனமும், அகிலும், புனுகும் தரித்து ஆடம்பரமாக ஒளி வீசி வளரும் அழகிய தனங்களும், அழகிய கரங்களும், யாரும் வந்து தோய்கின்ற சேறு போன்ற அல்குலும், கொப்பூழும், உலகமாயை குடிகொண்டுள்ள இந்த உடலில் நன்கு காலம் கழிக்கின்ற வேசையரை எதிரே கண்டு மயங்குவதை அடியேன் ஒழிக்க மாட்டேனோ?

விரிவுரை

வாளின் முனையினும்.........கருங்கணும் -

விலை மாதர்களின் கண்கள் வாள், நஞ்சு, இயமன், அம்பு இவைகளைக் காட்டிலும் கொடுமை செய்யும் தன்மை உடையவை என்று கூறுகின்றார்

வாரும் இருமெனும் இன்சொலும் :-

வீதிவழியே போகின்ற ஆடவர்களை அன்புடன் " என் வீட்டுக்கு வாருங்கள் சுகமாக இருங்கள் " என்று இனிமையாகப் பேசிப் பொருள் பறிப்பார்கள்.

காளி:—

Koviloor Digital Library

இந்தத் திருப்புகழில் தேவியின் துதி நிரம்ப வருகின்றன.

காளி சிவனுடைய நான்கு சக்திகளில் ஒன்று.

திரிபுரை ;-

சுவர்க்க மத்திய பாதளம் மூன்று உலகங்களையும் படைத்து அவைகளுக்கு அன்னையாகியும், தலைவியாகியும் இருக்கின்றாள்.

அந்தரி;-

அம்தரம்—ஆகாசம்
ஞான ஆகாசவடிவாக விளங்குபவள்.

பயங்கரி:- தீமை புரிபவர்க்குப் பயத்தைச் செய்பவள்

சங்கரி :

சம்—சுகம், கரம்—செய்வது

சுகத்தைச் செய்கின்றவள் சங்கரி

பரம்பரை :— முழுமுதல் தேவியாக விளங்குபவள்

மங்கலை :—

சிவபெருமான் பிறப்பும், இறப்பும் இல்லாதவர்.

"ஈறில்லாதவன் ஈசன் ஒருவனே"

என்பார் அப்பர் பெருமான். அதனால் உமாதேவியார் நித்திய சுமங்கலியாக விளங்குகின்றார்.

பிங்கலம் பொன்

தேவி பொன்னிறம் படைத்தவள்.

Koviloor Digital Library

கான நடனம் உகந்தவள் :—

சர்வ சங்கார மயானத்தில் சிவமூர்த்தியுடன் தேவி நடனம் செய்கின்றவள்.

வேலு மயிலு நினைந்தவர் தந்துயர் தீர அருள் தரு
கந்த நிரந்தர மேலைவயலை உகந்துள நின்றருள்
பெருமாளே :—

உகந்துளம்—உகந்து உள்ளம்

உள்ளம் உவந்து வயலூரில் எம்பெருமான் எழுந்தருளியிருக்கின்றார். இந்த மூன்று வரிகளை மனப்பாடம் செய்து அன்பர்கள் ஓத வேண்டும். அங்ஙனம் ஓதுபவர் இடர் தீர்ந்து எல்லா நலன்களும் எய்தப் பெறுவர்.

கருத்துரை

வயலூர் வரதா! மாதர்கள் மையலற அருள்புரிவாய்.

Koviloor Digital Library

18

விகட பரிமள ம்ருகமத இமசல
வகிர படிரமு மளவிய களபமு

மட்டித்தி தழ்த்தொடைமு டித்துத்தெ ருத்தலையில்
உலவி யிளைஞர்கள் பொருளுட னுயிர்கவர்
கலவி விதவிய னரிவையர் மருள்வலை

யிட்டுத்து வக்கியிடர் பட்டுத் தியக்கியவர்
விரவு நவமணி முகபட எதிர்பொரு
புரண புளகித இளமுலை யுரமிசை

தைக்கக் கழுத்தொடுகை யொக்கப்பி ணித்திறுகி
யன்புகூர.

விபுத ரமுதென மதுவென அறுசுவை
அபரி மிதமென இலவிதழ் முறைமுறை

துய்த்துக்க ளித்துநகம் வைத்துப்ப லிற்குறியின்
வரையு முறைசெய்து முனிவரு மனவலி
கரையு மரிசன பரிசன ப்ரியவுடை

தொட்டுக்கு லைத்துநுதல் பொட்டுப்ப டுத்திமதர்
விழிகள் குழைபொர மதிமுகம் வெயர்வெழ
மொழிகள் பதறிட ரதிபதி கலைவழி

கற்றிட்ட புட்குரல்மி டற்றிற்ப யிற்றிமடு
வுந்திமூழ்கிப்

புகடு வெகுவித கரணமு மருவிய
வகையின் முகிலென இருளென வனமென

ஒப்பித்த நெய்த்தபல புட்பக்கு முற்சரிய
அமுத நிலைமல ரடிமுதல் முடிகடை
குமுத பதிகலை குறைகலை நிறைகலை

Koviloor Digital Library

சித்தத்த முத்தியநு வர்க்கத்து ருக்கி யொரு
பொழுதும் விட்லரி தெநுமநு பவமவை
முழுது மொழிவற மருவிய கலவியி
தத்துப்ரி யப்படாக டித்துத்து வட்சியினில்

நைந்துசோரப்

புணரு மிதுசிறு சுகமென இகபரம்
உணரு மறிவிலி ப்ரமைதரு திரிமலம்

அற்றுக்க ருத்தொருமை யுற்றுப்பு லத்தலையில்
மறுகு பொறிகழல் நிறுவியெ சிறிதுமெய்
உணர்வு முணர்வுற வழுவற வொருசக

வித்தைக்கு ணத்ரயமும் நிர்த்தத்து வைத்துமறை
புகலு மநுபவ வடிவினை யளவறு
அகில வெளியையு மொளியையு மறிசிவ

தத்வப்ர சித்திதனை முத்திச்சி வக்கடலை

யென்றுசேர்வேன்

திகுட திகுகுட திகுகுட திகுகுட
தகுட தகுகுட தகுகுட தகுகுட
திக்குத்தி குத்திகுட தக்குத்த குத்தகுட
டுமிட டுமிமிட டுமிமிட டுமிமிட
டமட டமமட டமமட டமமட
டுட்டுட்டு டுட்டுமிட டட்டட்ட டட்டமட
திகுர்தி திகுதிகு திகுகுர்தி திகுகுர்தி
தகுர்தி தகுதகு தகுகுர்தி தகுகுர்தி
திக்குத்தி குத்திகுதிர்தி தக்குத்த குத்தகுர்தி

என்று பேரி

Koviloor Digital Library

திமிலை கரடிகை பதலைச லரிதவில்
தமர முரசுகள் குடமுழ வொடுதுடி
சத்தக்க ணப்பறைகள் மெத்தத்தொ னித்ததிர

அசுரர் குலஅரி அமரர்கள் சயபதி
குசல பசுபதி ருருவென விருதுகள்

ஒத்தத்தி ரட்பலவு முற்றிக்க லிக்களமு
சிகர கொடுமுடி கிடுகிடு கிடுவென
மகர சலநிதி மொகுமொகு மொகுவென

எட்டுத்தி சைக்களிறு மட்டற்ற றப்பிளிற
நின்றசேடன்

மகுட சிரதலம் நெறுநெறு நெறுவென
அகில புவனமும் அரஅர அரஅரவென

நட்சத்ர முக்கிவிழ வக்கிட்ட துட்டகுண
நிருதர் தலையற வடிவெனு மலைசொரி
குருதி யருவியின் முழுகிய கழுகுகள்

பக்கப்ப முத்தவுடல் செக்கச்சி வந்துவிட
வயிறு சரிகுடல் நரிதின நிணமவை
எயிறு அலகைகள் நெடுகிய குறளிகள்

பட்சித்து நிர்த்தமிட ரட்சித்த லைப்பரவி
யும்பர் வாழ

மடிய அவுணர்கள் குரகத கசரத
கடக முடைபட வெடிபட எழுகிரி

அற்றுப்ப றக்கவெகு திக்குப் படித்துநவ
நதிகள் குழைதர இப்பதி மகிழ்வுற
அமர்செய் தயில்கையில் வெயிலெழ மயில்மிசை

Koviloor Digital Library

அக்குக்கு டக்கொடிசெ ருக்கப்பெ ருக்கமுடன்
வயலி நகருறை சரவண பவகுக
இயலு மிசைகளு நடனமும் வகைவகை
சத்யப்ப டிக்கினித கத்யர்க்கு ணர்த்தியருள்
தம்பிரானே !

பதவுரை

திகுட திகுகுட திகுகுட திகுகுட
தகுட தகுகுட தகுகுட தகுகுட
திக்குத்தி குத்திகுட தக்குத்த குத்தகுட
டுமிட டுமிமிட டுமிமிட டுமிமிட
டமட டமமட டமமட டமமட

டுட்டுட்டு டுட்டுமிட டட்டட்ட டட்டமட
திகுர்தி திகுதிகு திகுகுர்தி திகுகுர்தி
தகுர்தி தகுதகு தகுகுதி தகுகுர்தி
திக்குத்தி குத்திகுர்தி தக்குத்த குத்தகுர்தி
என்று பேரி —

திகுட திகுகுட ... ... தக்குத்த குத்தகுர்தி என்று பேரி வாத்தியமும்

திமிலை-திமிலை என்ற பறையும்

கரடிகை-கரடி என்ற பறை வாத்தியமும்

பதலை-மத்தள வகையில் ஒன்றான பதலையும்

சலரி-சல்லரி என்ற வாத்தியமும்

தவில்-தவிலும்

தமர முரசுகள்-ஒலி செய்யும் முரசுகளும்

குடமுழவொடு-குடமுழவு வாத்தியமும்

துடி-உடுக்கையும்

Koviloor Digital Library

சத்தகண பறைகள்-நிரம்ப ஒலி செய்யும் கூட்டமான பறைகளும்

மெத்த தொனித்து அதிர-மிகவும் அதிர்ச்சியுற ஒலி செய்ய

அசுரர் குலஅரி-அசுரர் கூட்டத்துக்குப் பகைவன்

அமரர்கள் ஜயபதி-தேவர்களின் ஜயவீரத் தலைவன்

குசல பசுபதி-நன்மையையே தரும் சிவ பெருமானுக்கு

குருஎன-குருநாதர் என்று

விருதுகள்-வெற்றிச் சின்னங்கள்

ஒத்த திரள் பலவும்-ஒரே கூட்டமாய் பலவும்

முற்றி கலிக்க-நிரம்பி ஒலி செய்ய

எழு சிகர கொடுமுடி-அவ்வோசையின் எழுச்சியால் மலைகளின் கொடுமுடி

கிடுகிடுகிடு என-கிடுகிடு என்று அதிர

மகரசலநிதி-மகர மீன்கள் வாழும் கடலானது

மொகு மொகு மொகு என - மொகு மொகு என்று கலக்கமுற

எட்டுதிசைக் களிறு - எட்டு திசைகளிலும் உள்ள யானைகள்

மட்டற்று அறப்பிளிற - அளவு கடந்து மிகவும் கூக்குரலிட

நின்ற சேடன் - உலகத்தைத் தாங்கி நிற்கும் ஆதிசேடனுடைய

மகுட சிரதலம் - கிரீடம் அணிந்த தலையிடங்கள்

நெறு நெறு நெறு என - நெறு நெறு நெறு என்று முறிய

அகில புவனமும் - எல்லா உலகங்களும்

Koviloor Digital Library

ஹர ஹர ஹர என - ஹர ஹர ஹர என்று துதி செல்ய

நக்ஷத்திரம் உக்கி விழ - நட்சத்திரங்கள் எல்லாம் உதிர்ந்து விழ

வக்கு இட்ட துட்ட குண - வேகுதல் போன்ற தீய குணத்தை உடைய

நிருதர் தலை அற - அசுரர்களின் தலைகள் அற்று விழ

வடிவு எனும் மலைசொரி - அவர்களின் மலைபோன்ற உடம்பிலிருந்து சொரிகின்ற

குருதி அருவியின் - உதிர வெள்ளத்தில்

முழுகிய கழுகுகள் - முழுகினதால் கழுகுகளின்

பக்கம் பழுத்த உடல் - புறமும் பழுத்துள்ள உடலும்

செக்க சிவத்துவிட - ஒரே சிவப்பு நிறமாக

வயிறு சரி குடல் - அசுரர்களின் வயிற்றினின்றும் சரிந்த குடலை

நரிதின் - நரிகள் உண்ண

நிணம் அவை - மாமிசத்தை

எயிறு அலகைகள் - பற்களை உடைய பேய்களும்

நெடுகிய குறளிகள் - நீண்ட பிசாசுகளும்

பக்ஷித்து நிர்த்தம் இட - உண்டு நடனம் செய்யும்படி

ரக்ஷித்தலை பரவி - தேவரீர் காப்பாற்றிய செயலைப் புகழ்ந்து

உம்பர் வாழ - தேவர்கள் வாழவும்

மடிய அவுணர்கள் - அசுரர்கள் - இறந்து ஒழியவும்

குரகத - குதிரைகள்

கஜ - யானைகள்

ரத - தேர்கள்

Koviloor Digital Library

கடகம் - காலாட்படைச் சேனைகள்

உடைபட - இவையெல்லாம் அழியவும்

வெடிபட - பிளவு படவும்

எழுகிரி-சூரனுக்கு அரணுயிருந்த ஏழு மலைகள்
அற்று பறக்க-உருக்குலைந்து தூள் பறக்க

வெகுதிக்கு படித்து (படிந்து)-பல திக்குகளிலும் அத் தூள்கள் படிந்து

நவநதிகள் குழைதர-ஒன்பது நதிகளும் குழைவு பெற

இப்பதி மகிழ்வுற-வெள்ளை யானையின் தலைவனுன இந்திரன் மகிழ்ச்சியுறவும்

அமர் செய்து-போர் புரிந்து

அயில் கையில் வெயில் எழ-வேலாயுதம் திருக்கையில் ஒளி வீச

மயில் மிசை-மயிலின் மீது விளங்கி

அகுக்குடக்கொடி-அந்தக் கோழிக் கொடி

செருக்க-பெருமையுடன், விளங்க

பெருக்கமுடன்-செல்வ வளர்ச்சியுடன்

வயலி நகர் உறை-வயலூரில் வீற்றிருக்கின்ற

சரவணபவ-சரவணப் பொய்கையில் உதித்தவரே!

குக-குகப்பெருமானே!

இயலும் இசைகளும் நடனமும்-இயல் இசை நாடகம் எனப்பட்ட முத்தமிழையும்

வகை வகை-பிரிவு பிரிவாக

சத்யப்படிக்கு இனிது-உண்மையான முறையில் இனிமையுடனே

அகஸ்த்யர்க்கு உணர்த்தி அருள்-அகத்திய முனிவருக்கு உபதேசித்து அருளிய

Koviloor Digital Library

தம்பிரானே - தனிப்பெரும் தலைவரே!

விகட பரிமள - நிரம்ப நறுமணம் வீசும்

ம்ருக்மதம் - கஸ்தூரி

இமசலம் - பனி நீரை (பன்னீர்)

வகிர - பங்கு கொண்ட (பன்னீர் கலந்த)

படீரமும் - சந்தனமும்

அளவிய களபமும் - இவைகள் கலந்த கலவையை

மட்டித்து - பூசிக்கொண்டு

இதழ் தொடை முடித்து-மலர் மாலையை முடித்துக்கொண்டு

தெரு தலையில்உலவி - தெருவின் முன்புறத்தில் உலாவி

இளைஞர்கள் - இளைஞர்களின்

பொருளுடன் உயிர் கவர் - பொருளுடனே அவர்கள் உயிரையும் கவர்கின்ற

கலவி விதம் வியன் - புணர்ச்சி வகைகளைக் காட்டும் வியக்கத்தக்க

அரிவையர் - மாதர்கள்

மருள் வலை இட்டு துவக்கி - தமது மயக்க வலையில் இட்டு, கட்டில் போட்டு

இடர் பட்டு - வேதனைப்படும்படி

தியக்கி - மயங்கச் செய்து

அவர் - அப்பொது மாதர்களுடைய

விரவு நவமணி - பொருந்திய நவரத்தினமாலை

முக பட - முன்தோன்ற

எதிர் பொரு - எதிரில் முட்டுகின்ற

புரண - நிறைவு கொண்டதும்

Koviloor Digital Library

புளகித - புளகாங்கிதம் கொண்டதுமான

இளமுலே - இளம் கொங்கைகள்

உரமிசை - மார்பின் மீது

தைக்க - அழுத்தமுறப்பதிய

கழுத்தொடு கை ஒக்க - கழுத்திலே கைசேர

பிணித்து இறுகி அன்புகூர - கட்டி அழுத்தி அன்பு மிகுதி அடைய

விபுதர் அமுது என - தேவர்கள் கடைந்து எடுத்த அமுதம் எனவும்

மது என - தேன் எனவும்

அறுசுவை அபரிமிதம் என - அறுசுவையும் அளவற்ற வகையில் கூடியது எனவும்

இலவு இதழ்-இலவ மலரொத்த செவ்விதழை (வாயூறலே)

முறை முறை-பலமுறை

துய்த்து களித்து-அனுபவித்து மகிழ்ந்து

நகம் வைத்து-நகக் குறிகளை வைத்து

பலில் குறியின்-பல்லின் குறிகளை

வரையும் முறை செய்து - முறையுடன் வைந்து

முனிவரும் மனவலி கரையும் - முனிவர்களும் தமது மனத் திண்மை கரைந்து குலேயுமாறு

அரிசனம் பரிசனம் - மஞ்சள் பூசப்பட்ட இடங்களைத் தொட்டும்

ப்ரிய உடை தொட்டு குலேத்து - பிரியமாய் அணிந்துள்ள ஆடையைத் தொட்டுக் கலேத்தும்

நுதல் பொட்டு படுத்தி - நெற்றியிலுள்ள பொட்டை அழியச் செய்தும்

Koviloor Digital Library

மதர் விழிகள் குழை பொர - மகிழ்ச்சி கொண்ட கண்கள் காதிலுள்ள குழைகள் வரையும் எட்டி போர்புரிய

மதிமுகம் வெயர்வு எழ - நிலா போன்ற முகத்தில் வியர்வு உண்டாக

மொழிகள் பதறிட - சொற்கள் பதறிப் பதறிவர

ரதிபதி கலைவழி - ரதிதேவியின் கணவனான மன்மதனுடைய சாத்திர வழியிலே

கற்றிட்ட - படித்துள்ள

புள் குரல் - பறவைகளின் குரல்களை

மிடற்றில் பயிற்றி - கழுத்தில் பயில்வித்து

மடு உந்தி மூழ்கி - மடு போன்ற கொப்பூழில் மூழ்கி

புகடு வெகுவித - புகட்டப்பட்ட பலவிதமான

கரணமும் மருவிய வகையில் - கலவித்தொழில்களைப் பொருந்திய முறையில்

முகில் என - கருமேகம் என்னும்

இருள் என - இருள் என்றும்

வனம் என - காடு என்றும்

ஒப்பித்த - ஒப்புமை கூறப்பட்டதும்

நெய்த்த - நெய்ப்புத் தன்மை உள்ளதும்

பல புட்பக் குழல் சரிய - பல பூக்களை தரித்துள்ளதுமான கூந்தல் சரிந்து விழ

அமுத நிலை - அந்த இன்பகரமான நிலையை

மலர் அடிமுதல் முடிகடை - மலர் போன்ற அடிமுதல் முடி வரையும்

குமுதபதி கலை - சந்திர கலையில்

குறைகலை நிறைகலை - குறைகலை முதல் நிறைகலை வரையும் (கிருஷ்ணபக்ஷம் முதல் சுக்லபக்ஷம் முடிய)

Koviloor Digital Library

சித்தத்து அழுத்தி-மனத்திலே அழுத்தி

அநுவர்க்கத்து உருக்கி-அந்த சிற்றின்ப வழியையே அநுசரித்து

ஒருபொழுதும் விடல் அரிது எனும்-ஒருபொழுதுகூட அந்த வழியை விட்டு விலகுதல் அரிதென்னும் படியான

அநுபவம்-அநுபவமானது

அளவ முழுதும் ஒழிவு அற-அடியோடு நீங்குதல் இல்லாமல்

மருவிய கலவி-பொருந்திய புணர்ச்சியில்

இதத்து ப்ரியப்பட-இன்பகரமாய் ஆசையுடனே

நடித்து துவட்சியினில்-ஆட்டம் ஆடி அந்தச் சோர்வினில்

நைந்து சோர-மனம் நைந்து வாட்டமடைய

புணரும் இது-புணர்கின்ற இந்த சுகம்

சிறு சுகம் என-அற்ப சுகம் என உணர்ந்து

இகபரம் உணரும்-இகத்தின் நன்மையையும், பரத்தின் நன்மையையும் உணர்ந்து அறியக்கூடிய

அறிவு இலி-அறிவு இல்லாத அடியேன்

ப்ரமைதரு திரிமலம்-மயக்கத்தைத் தரும் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும்

அற்று-நீங்கப் பெற்று

ஒருமையுற்று-ஒருவழிப்பட்டு

புல தலையில்-ஐம்புலன்களின் வாயிலில் அகப்பட்டு

மருகுபொறி-கலங்குகின்ற அறிவை

கழல் நிறுவிஎய-உமது திருவடியில் நிலைநிறுத்தி

சிறிது மெய்உணர்வும் உணர்வு உற-சற்று உண்மை உணர்த்தி அறிவில் ஏற்பட்ட

Koviloor Digital Library

வழுஅற.குற்றமெல்லாம் ஒழிய

ஒரு ஜகவித்தை-ஒப்பற்ற இந்த உலகவித்தைகளையும்

குணத்ரயமும்-முக்குணங்களையும்

நிர்த்தத்து வைத்து-அடியேன் ஆடுகின்றபடியே ஆட
வைத்து (என் வசமாக்கி)

மறைபுகலும்-வேதங்கள் சொல்லுகின்ற

அநுபவ வடிவினை-அநுபோக உருவினை

அளவு அறு-அளவு கடந்த

அகில வெளியையும்-முழு பெருவெளியையும்

ஒளியையும்-ஒளியையும்

அறிசிவதத்வ ப்ரசித்திதனை-அறியக்கூடிய சிவானுபவ
உண்மை கீர்த்திப்பொருளை

முத்திசிவ கடலை-முத்தியென்னும் சிவ சமுத்திரத்தை

என்று சேர்வேன்-அடியேன் என்று கூடுவேன்-

பொழிப்புரை

திகுட திகுகுட திகுகுட திகுகுட
தகுட தகுகுட தகுகுட தகுகுட
திக்குத்தி குத்திகுட தக்குத் தகுத்தகுடடுமிடடுமிட
டுமிமிட டுமிமிட டமடட மமட டமமட டமமட
டுட்டுட்டு டுட்டு மிட டட்டட்ட டட்ட மடதிகுர்தி
திகுதிகு திகுகுர்தி திகுகுர்தி தகுர்தி தகுதகு தகு
குர்தி தகுகுர்தி திக்குத்திகுத்திகுர்தி தக்குத்த
குத்தகுர்தி என்ற தாள வரிசையுடன், பேரிகள்
திமிலை கரடிகை, பதலை, சல்லரி, தவில், ஒலிக்கின்ற
முரவுகள்
குடமுழவு, உடுக்கை, முழங்குகின்ற கூட்டமான பறைகள்
மிகவும் ஒலித்து அதிர்ச்சி அடையச் செய்யவும்,

Koviloor Digital Library

அசுரர் குலத்துக்குப் பகைவனும், தேவர்களின் ஜெய வீரத் தலைவனும் ஆன இந்திரன் நன்மையே செய்யும் சிவ பெருமானுக்கு குரு என்று துதி செய்யவும், வெற்றிச் சின்னங்கள் ஒரே கூட்டமாய் பலவும் நிரம்பி ஒலி செய் யவும், அவ்வொலியின் எழுச்சியால் மலைகளின் கொடி முடிகளெல்லாம் கிடுகிடுகிடு என்று அதிரவும், மகர மீன்கள் வாழும் கடல் மொகுமொகுமொகு என்று கலக்க முறவும், எட்டுத் திசைகளிலும் உள்ள யானைகள் அளவு கடந்து மிகவும் ஒலி செய்யவும் உலகை தாங்கி நிற்கும் ஆதி சேடனுடைய மகுடமணிந்த தலைகள் நெறு நெறு நெறு என்று முறியவும், எல்லா உலகங்களும் ஹர ஹர ஹர என்று துதிக்கவும், நட்சத்திரங்கள் உதிர்ந்து விழ வும், கொடிய குணங்களையுடைய அசுரர்களின் தலைகள் அற்று விழவும், அவர்களின் மலை போன்ற உடம்பி லிருந்து சொரிகின்ற உதிர வெள்ளத்தில் முழுகினதால் கழுகுகளின் உதிர்ந்த உடல் ஒரே சிவப்பு நிறமாகவும், அசுரர்களின் வயிற்றில் நின்றும் சரிந்த உடலை நரி உண்ணவும் பற்களை உடைய பேய்களும், நீண்ட பிசாசு களும், மாமிசத்தை உண்டு நடனம் செய்யும்படி தேவரீர் காப்பாற்றிய செயலை தேவர்கள் போற்றிப் புகழ்ந்து வாழவும், அசுரர்கள் இறந்து ஒழியவும், யானை தேர் குதிரை காலாள் படை இவையெல்லாம் உடைபடவும், பிளவுபடவும், சூரனுக்கு அரணுயிருந்த ஏழு மலைகள் உருக்குலைந்து தூள் பறக்க பல திசைகளிலும் அத் தூள்கள் படிந்து நவ நதிகளும் சேறுபடவும் வெள்ளை யானையின் தலைவனான இந்திரன் மகிழ்ச்சி அடையவும் போர் புரிந்து திருக்கையில் வேலாயுதம் ஒளி வீச மயில் மீது விளங்கி கோழிக் கொடி பெருமையுடன் விளங்க, செல்வ வளர்ச்சி யுடன் வயலூரில் வீற்றிருக்கின்ற சரவணபவ மூர்த்தியே! குகப்பெருமானே! இயல் இசை நாடகம் என்ற முத்

Koviloor Digital Library

தமிழையும் வகை வகையாக உண்மையான முறையில் இனிமையுடன் அகஸ்திய முனிவருக்கு உபதேசித்து அருளிய தனிப் பெரும் தலைவரே! நிரம்ப நறுமணம் வீசும் கஸ்தூரியும் பன்னீரும் கலந்த சந்தனமும், கலவைச் சாந்தும் பூசிக்கொண்டு, மலர் மாலையை முடித்துக் கொண்டு தெருவின் முன்புறத்தில் உலாவி இளைஞர்களின் பொருளையும், உயிரையும் கவர்கின்ற உணர்ச்சி வகைகளைக் காட்டும், வியக்கத்தக்க மாதர்கள் தமது மயக்க வலையில் கட்டிப்போட்டு வேதனை வரும்படி மயங்கச் செய்து அவர்களுடைய பொருந்திய நவரத்தினமாலை முன் தோன்ற எதிரில் முட்டுகின்ற நிறைவுடன் ஒளி கொண்டு புளகாங்கிதம் கொண்ட இளம் கொங்கைகள் மார்பின் மீது அழுத்தமுற, கழுத்தில் கைசேரக் கட்டி அழுத்தி, அன்பு மிகவும் எழ, தேவர்கள் கடைந்தெடுத்த அமுதம் எனவும், தேன் எனவும், ஆறு சுவைகளும் அளவற்ற வகையில் கூடியது எனவும், இலவம் பூவையொத்த செவ்விதழ் வாயூறலை பலமுறை அநுபவித்து மகிழ்ந்து நகக் குறியும், பற்குறியும் முறையே வைத்து, முனிவர்களும் தமது மன உறுதி கரைந்து குலையுமாறு மஞ்சள் பூசப்பட்ட இடங்களைத் தொட்டும் பிரியமாய் அணிந்துள்ள ஆடையைத் தொட்டுக் கலைத்தும், நெற்றியிலுள்ள திலகத்தை அழியச் செய்தும், மகிழ்ச்சி கொண்ட கண்கள் காதிலுள்ள குழைகள் வரையும் எட்டி நிற்க, நிலாப் போன்ற முகத்தில் வியர்வை உண்டாக மொழிகள் பதறி வர, மன்மதனுடைய சாத்திரவழியில் கற்றுள்ள புள் குரல்களை கழுத்தில் பயில்வித்து மடுவைப் போன்ற கொப்பூழில் மூழ்கி, புகட்டப்பட்ட பலவிதமான கலவித் தொழில்களைப் பொருந்திய முறைகளில் கருமேகம் என்றும் இருள் என்றும் காடு என்றும் ஒப்புமை கூறப் பட்டதும், மெய்ப்பு உள்ளதும், பலபூக்களை அணிந்துள்ளது

Koviloor Digital Library

மான கூந்தல் சரிந்து விழ, அந்த இன்பகரமான நிலையை மலர் போன்ற அடிமுதல் முடிவரையும், சந்திர கலையில் குறைகலை முதல் நிறைகலை வரையும் எப்போதும் மனத்திலே அழுத்தி அந்தச் சிற்றின்ப வழியையே அனுசரித்து, அதிலேயே மனம் உருகி ஒருபொழுதுகூட அந்த வழியைவிட்டு விலகுதல் அரிதென்னும்படியான அநுபவமானது அடியோடு நீங்குதல் இல்லாமல் பொருந்திய புணர்ச்சியில் இன்பகரமான ஆசையுடனே நடித்து, அந்தச் சோர்வினில் மனம் நைந்து வாட்டம் அடையச் சேர்கின்ற இந்தச் சுகம் அற்ப சுகமென உணர்ந்து, இகத்தின் நன்மையையும் பரத்கின் நன்மையையும் உணர்ந்து அறியக் கூடிய அறிவில்லாத அடியேன் மயக்கத்தைத்தரும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களும் நீங்கப் பெற்று எண்ணம் பலவிதமாகச் சிதறுமல் ஒருவழிப்பட்டு ஐம்புலன்களின் வாயிலில் அகப்பட்டுக் கலங்குகின்ற அறிவை, உமது திருவடியில் நிலைநிறுத்தி சற்று உண்மை உணர்ச்சி அறிவில் ஏற்பட, குற்றமெல்லாம் ஒழிய, ஒப்பற்ற இவ்வுலக வித்தைகளையும், முக்குணங்களையும் நான் ஆட்டுவித்தபடியே ஆட்டவைத்து (என் வசமாக்கி) வேதங்கள் சொல்லுகின்ற அநுபோக உருவினை அளவு கடந்த முழுப்பெரு வெளியையும், ஒளியையும் அறியக் கூடிய சிவாநுபவ உண்மைக் கீர்த்திப் பொருளை முத்தி என்னும் சிவசமுத்திரத்தை அடியேன் என்று கூடுவேன்.

விரிவுரை

இந்தத் திருப்புகழ் சந்தத்தில் சிறந்தது. சொற்களின் அடுக்கும். கருத்துக்களின் மிடுக்கும் உன்னுந்தோறும் வியப்பை ஊட்டுகின்றது.

இப்பாடல் முற்பகுதி நான்கு அடிகளும் பொதுமாதரின் தன்மையை விரித்துக் கூறுகின்றன.

Koviloor Digital Library

விகட பரிமள :—
விகடம் — மிகுதியான
பரிமளம் — வாசனை, நிரம்பிய வாசனை
ம்ருகமதம் :— கஸ்தூரி மானுடைய மதம்
இமசலம் :—
இமம் — பனி
சலம் — நீர், பன்னீர்
படிரமும் :—
பாடீரம் — சந்தனம்
முகபடம் :—
முகப்படுதல் — முன்தோன்றுதல்
"விழி இணைக்கு முகப்பட்டிடும்" — பாரதம்
ஒருபொழுதும் விடலரிது:

மாதர் மயக்கம் விடுவது மிகவும் அரிது என்கிறார்.

"மா அநுபவம் இதுசற்றும் விடவோ
இயலா தியலாதே"
— திருப்புகழ்

புணரும் இதுசிறு சுகம்:

மாதரால் வரும் சுகம் மிகவும் அற்பமானது. அதனால் சிற்றின்பம் என்று சொல்லுவர்.

இகபரம் உணரும் அறிவிலி:

இகத்தின் நன்மையையும். பரத்தின் நன்மையையும் உணரும் அறிவில்லாதவன்.

ப்ரமைதரும் திரிமலம்:

ப்ரமை-மயக்கம்,

திரிமலம்-ஆணவம், கன்மம், மாயை ஆணவமலம் உயிரில் அநாதியே இருப்பது. கன்மலமும், மாயாமலமும் இடையே வந்து பொருந்தியவை. ஆகந்துகமலம் என்று சொல்லப்படும். முள்ளை முள்ளால் எடுப்பதுபோல ஆணவ மலத்தை கன்ம மலந்தாலும், மாயா மலத்தாலும் அகற்ற வேண்டும்.

Koviloor Digital Library

செம்பு உண்டானபோதே அதில் களிம்பு இருக்கும். அதுபோல் ஆன்மாவில் ஆணவ மலம் உடனாக இருப்பது.

இது ஸஹஜமலம், மூலமலம் என்று சொல்லப்படும். ஜீவனில் உள்ள இந்த ஆணவ மலம் நீங்கினால் ஜீவன் சிவனாகும். தாம்பரத்தில் உள்ள களிம்பு நீங்கினால் தாம்பரம் தங்கமாகும்.

" சித்தமலமறி வித்து சிவமாக்கி "

என்கின்றார் மணிவாசகர்

கருத்தொருமையுற்று :—

நமது எண்ணம் பல வகையில் சிதறாமல் ஒருமைப் பாட்டை அடைதல் வேண்டும். இதனை ஏகாக்கிரக சித்தம் என்பார்கள்,

" ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர் " — திரு அருட்பா

புலத்தலையில் மறுகு பொறி :—

புலம்—ஐம்புலன், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்

மறுகுதல்—சுழலுதல்

பொறி—அறிவு

ஐம்புலன்கள் நம்மைப் பெரிதும் அல்லல்படுத்துகின்றன. ஐம்புலன்கள் படுத்தும்பாடு அளவற்றது

" பஞ்சேந்திரிய வஞ்சக முகரிகாள்
நும்முடைய மம்மரானை நடாத்துகின்றீர்..."

— அப்பர் - 6-29-7

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை"

என்பது சிவஞான போதம்

"வளைத்துநின் றைவர் கள்வர் மனத்திடை
[illegible]ரஞ்செய்து
தளைத்துவைத் துலையேற்றி தழலெரி மடுத்த
நீரில்

௨

Koviloor Digital Library

நினைத்துநின் றுருகின்ற ஆமைபோல் தெளிவி
லாதேன்
இனைத்துநின் றுருகின்றேன் என்செய்வான்
தோன்றினேனே
— அப்பர்

"ஓரவொட்டார் ஒன்றை உன்னவொட்டார்
மலரிட்டு உன்தாள்
சேரவொட்டார் ஐவர் செய்வதுஎன் யான்"
— கந்தரலங்காரம்

பொறி கழல் நிறுவியெ:—
பொறி — அறிவு

ஐம்புலன்களின் வாயிலில் அகப்பட்டுக் கலங்குகின்ற அறிவை இறைவனுடைய திருவடியில் நிறுத்தி நலம்பெற வேண்டும்.

சிறிது உணர்வு முணர்வுற;-

இறைவன் திருவடியில் அறிவைச் செலுத்தியதால் மெய்யுணர்வு தலைப்படும்.

வழுவற :—

இறைவன் திருவடி தியானத்தால் குற்றங்கள் அனைத்தும் தீயைக் கண்ட பஞ்சுபோல் தொலைந்து போகும்.

ஒரு ஜகவித்தை குணத்ரயமும் நிர்த்தத்து வைத்து :—

இவ்வுலக வித்தைகளும், முக்குணங்களும் அடங்கி நம்முடைய ஆணைக்குள் ஒடுங்கிவிடும் நாம் ஆட்டுவித்த படி அவை ஆடும்.

திருவருள் துணை செய்யாத பொழுது முக்குணங்களும் நம்மை ஆட்டி வைக்கும். இறைவனுடைய திருவடி தியானபலத்தால் கருவி கரணங்களெல்லாம் நம் வசமாகி ஆடும்.

Koviloor Digital Library

மறை புகலும் அநுபவ வடிவினை என்று சேர்வேன்:—
அளவறு அகிலவெளியையும் என்று சேர்வேன் ஒளியையும் என்று சேர்வேன்
அறிசிவ தத்வப்ரசித்திதனை என்று சேர்வேன்
முத்தி சிவக்கடலை என்று சேர்வேன்
என்று கொண்டு கூட்டுக.
வேதங்கள் சொல்லும் அநுபவ வடிவை அடைதல் வேண்டும்.

அளவறு அகிலவெளியையும்:

அளவு கடந்த முழுப்பெருவெளி. இது ஞானவெளியாகும். இதனை அருணகிரிநாதர் கந்தரலங்காரத்தில் மிக அழகாகக் கூறுகின்றார்.

"வெளியில் விளைந்த வெறும்பாழைப்பெற்ற
வெறு வெளியைத்
தெளிய விளம்பியவா"
"வெம்மாயையற்று வெளிக்குள் வெளிகடந்து
சும்மாயிருக்கும் சுகம்"

— திருஅருட்பா

ஒளியையும்:

இது ஞானவெளியில் தோன்றும் ஞான ஒளியாகும். ஆன்மாக்களின் இதய தாமரையில் விளங்கும் சிதாகாசத்தில் ஞானச்சுடரொளி எப்போதும் ஒளி செய்து கொண்டிருக்கும். இதனை நக்கீரர்

"ஓவற இமைக்கும் சேண்விளங்
கவிரொளி"

என்று கூறுகின்றார்.

அறிசிவ தத்வப்ரசித்திதனை:

அறியக்கூடிய சிவாநுபவ உண்மை கீர்த்திப் பொருள்.

எதனை அறிந்தால் எல்லாவற்றையும் அறிந்ததாக ஆகுமோ, எதனை அடைந்தால் எல்லாவற்றையும் அடைந்

Koviloor Digital Library

ததாகுமோ அதுதான் சிவானுபவம். இதனை இங்கு அருணகிரிநாதர் "தத்வப்ரசித்தி" என்ற அழகிய சொற்றுடரால் விளக்குகிருர்.

முத்தி சிவக் கடலை :—

முத்தி என்னும் சிவ சமுத்திரம். நதிகள் வளைந்து வளைந்து ஓடினாலும் முடிவில் கடலை அடைந்தே தீரும். நதிகள் சென்று புணர்வதனால் கடல் புணரி எனப்பட்டது. அதுபோல் ஆன்மாக்களாகிய நதிகள் பரம்பொருளாகிய கடலை அடைந்தே தீரும். நதிகள் வேகமாகவும், நொப்பு நுரைகளுடனும், ஆரவாரத்துடனும் ஓடிக்கடலிலே வீழ்ந்து அடங்கிவிடும். அதுபோல் ஆன்மாக்கள் சிவக்கடலில் சேர்ந்து தன்மயமற்று சிவமயமாகிவிடும். அத்துடன் பிறவித்துயர் அற்றுவிடும்.

"பத்தித் துறையிழிந் தானந்த வாரிபடிவதனால்
புத்தித் தரங்கந் தெளிவதென்றோ"

— கந்தரலங்காரம்

படித்து நவ நதகள்:—

படிந்து என்ற சொல் படித்து என வந்தது.

நவநதிகள்:—

கங்கை, யமுனை, சரசுவதி, நருமதை, சிந்து, காவேரி, கோதாவரி, சோணை, துங்கபத்திரை:

சோணை, பாடலிபுத்திரத்துக்கு அருகில் கங்கையோடு கலக்கும் ஒரு நதி.

இயலும் இசைகளும் நடனமும் வகைவகை
சத்யப்படிக் கினிது அகஸ்த்யர்க்கு உணர்த்தியருள் :

"இலக்கணத் திலக்கியத் தமிழ்த்ரயத்
தகத்தியற் கறிவோதும் சமர்த்தரிற் சமர்த்த"

— திருப்புகழ்

"அகத்திய முனிக்கொரு தமிழ்த்ரயம் உரைத்தவன்"

— சித்துவகுப்பு

கருத்துரை

வயலூர் மேவிய வள்ளலே! பிறவிக்கடலில் வீழ்ந்த அடியேனை சிவக் கடலில் சேர அருள் புரிவாய்.